728
4—1911

Qb: 417
N11
97156.

728

THE

# Tanjore Church Hymnal.

THE

# The Tanjore Church Hymnal.

தஞ்சாவூர்

## ஞானப்பாட்டுப் புஸ்தகம்.

(ஞானக்கீர்த்தனைகளும் அடங்கியது.)

PUBLISHED BY

The Tanjore Pastorate Committee.

FIRST EDITION.

Tanjore:

G. S. MANIYA & CO.

1911

Q6:417
N11

# PREFACE.

DEC 1911 MADRAS.

This compilation of Tamil hymns and lyrics, published by the Tanjore Pastorate Committee, requires no introduction to those who are familiar with the traditions of the Tanjore Church. About 80 of these hymns are taken from Fabricius' Hymn Book, which has been rightly described as "the great treasury of sacred song for the Indian Christian Church," and the Tanjore Church still retains with unabated vigour its old love for these hymns, and the German *Chorales* to which they were originally sung, notwithstanding their quaintness of diction and phraseology, and no sacrilegious attempt has been made in this edition to modernise or in otherwise alter them, except that the number of verses has been reduced, where necessary, to bring the hymns to ordinary length. Of the remaining hymns, some are old friends which have won their way to the hearts of all Indian Christians, and about a dozen hymns are original compositions, intended to be sung to some of the beautiful hymn-tunes which are the glorious heritage of the English Church. In these hymns the Tamil idea of assonance is maintained, not only as giving them a poetic form, but also as a help to their being committed to memory. It is hoped that such an attempt will prove popular in the Indian Church, as

mere translations of English hymns are at best but poor substitutes, and in many instances convey very little to those who are unacquainted with those hymns in the original.

The collection of lyrics is intended as a supplement to the "Tamil Christian Lyrics", published by the Madras Religious Tract and Book Society, and contains in a permanent form all those special lyrics which have been sung in S. Peter's Church, Tanjore, for the past 30 years and more. Some of them have already found their way into several Churches outside Tanjore, and it is believed that a complete collection of them will be generally welcomed. Tanjore has a justifiable pride in owning the great Evangelical Poet Vedanayaga Sastriar as one of her sons, and a few more of his compositions are included in this book and thus saved from oblivion.

The thanks of the Committee are due to Mr. J. B. Gnanaolivu and Mr. A. G. Pichaimutthu, who were entrusted with the task of compiling this book, and their own contributions of hymns and lyrics are not the least valuable in it. This book is sent out with the earnest prayer that it may tend to the greater Glory of God and the advancement of His Kingdom.

Tanjore,
*Advent, 1911.*

J. V.

# CONTENTS.

## பொருளடக்கம்.

1—134. ஞானப்பாட்டுகள்.

135—240. ஞானக்கீர்த்தனைகள்.


| | |
|---|---|
| காலை ... ... ... ... | 1, 2 |
| மாலை ... ... ... ... | 3—5 |
| கிறிஸ்துவின் வருகை .. ... | 6—9 |
| கிறிஸ்துவின் ஜெனனம் .. ... | 10—14; 135—150 |
| வருஷப்பிறப்பு ... ... ... | 15, 16; 151—154 |
| கிறிஸ்துவின் பாடுகள் ... ... | 17—25; 155—163 |
| பெரிய வெள்ளிக்கிழமை .. ... | 164—171 |
| கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ... | 26—30; 172—179 |
| கிறிஸ்து பரமேறுதல் ... ... | 31—34; 180—182 |
| பரிசுத்த ஆவியானவர் ... ... | 35—39; 183, 184 |
| தேவ ஸ்துதி ... ... ... | 40—49; 185—191 |
| கிறிஸ்துவின் மாட்சிமை... ... | 50—60; 192—199 |
| கிறிஸ்தவ நம்பிக்கை ... ... | 61—75 |
| பாவ அறிக்கை ... ... ... | 76—84; 200—203 |
| விண்ணப்பம் ... ... | 85—96; 204—215 |
| தேவாராதனை ... ... ... | 97—104; 216—223 |
| பரிசுத்த நற்கருணை ... ... | 105-109; 224—226 |
| பரி: ஞானஸ்நானம் ... ... | 110, 111; 227 |
| திடப்படுத்தல் ... ... ... | 112; 228 |
| திரு விவாகம் ... ... ... | 113; 229—232 |
| சுவிசேஷ வேலை ... ... | 114—117; 233, 234 |
| மரணம் ... ... ... | 118—121; 235 |
| நியாயத்தீர்ப்பு ... ... | 122 |
| மோட்சம் ... ... | 123—125; 236—238 |
| பரிசுத்தவான்களின் திருநாள் ... | 126—130; 239, 240 |
| பாலர் கீதங்கள் ... | 131—134 |

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 13 | இக்க்டை | இக்கட்டை |
| 86 | 2 | பாரூர் | பாரார் |
| 124 | 11 | ரத்தாலே | ரத்தத்தாலே |
| 167 | 12 | ஜிரு | தரு |
| ,, | 13 | வான்புவியாமொழி | யாமொழிவான்புவி |
| 168 | 14 | குருவே | குருவோ |
| 176 | 7 | வாசாவ | வாசால |
| 187 | 8 | கொடுத்தால் | கொடுத்ததால் |
| 197 | 24 | விழிப்பதற்கு | விளிப்பதற்கு |
| 215 | 2 | தாக்கிய | தாகிய |

# ஞானப்பாட்டுகள்.

## காலை.

### 1.

1. ஆ, பிதா குமாரன் ஆவி,
விண்மண் உலகை எல்லாம்
தாங்குஞ் சருவ வியாபி,
உம்மால் ராப்பகலுமாம்,
உம்மால் சூரியன் நிலா
ஓடுது, தயாபரா.

2. சாத்தான் தீவினை வீணாக
என்னைப்போனராவிலே
தேவரீர் மாதயவாக
கேடுந்தீதுமின்றியே
காத்ததுக்கென் மனது
தேவரீரைப்போற்றுது.

3. ராப்போனுப்போல் பாவ ராவும்
போகப்பண்ணும், கர்த்தரே,
அந்தகாரம் சாபம் யாவும்
நீங்க உம்மை, இயேசுவே,
அண்டிக்கொண்டு நோக்கிறேன்,
உம்மால் சீர் பொருந்துவேன்.

4. நியாயத்தீர்ப்பில் திகிலற்று
நிற்க இப்போதுன்னிலும்
வெண்ணுடை உடுத்தப்பட்டு
பயத்தோடே நித்தமும்
என் ரட்சிப்பைத்தேட நீர்
ஈவளிக்கக் கடவீர்.

5. தேகம் ஆவி என்னிலுள்ள
சிந்தை புத்தியாவையும்
சுவாமி, உமதுண்மையுள்ள
கைக்கும் பராமரிப்புக்கும்
ஒப்புவிப்பேன், என்னை நீர்
பிள்ளையாக நோக்குவீர்.

6. வானநாதர் எனக்காக
என்னைப்பேயின் கண்ணிக்கு
தப்புவிக்கவும் அன்பாக
கடைசியில் மோட்சத்து
வாழ்வில் கொண்டுபோகவும்
தயவாகக்கற்பியும். ஆமென்.

## 2.

1. இக்கட்டை நீர் அன்பாக
கடந்த ராவிலே
தொலைத்தீர், அதற்காக
துதிப்பேன், கர்த்தரே,
இன்றைத்தினம் வரைக்கும்
நான் செய்த தீங்கையும்
எல்லாப்பாவங்களையும்
நீர் மன்னித்தருளும்.

2. மகா பொல்லாக்களான
பிசாசு தனது
விஷமும் கேடுமான
வினையால் எனக்கு
பொல்லாக்கொன்றும் செய்யாது
தற்காத்து ரட்சியும்,
என் செய்கையெல்லாம் இன்று
நீர் ஆண்டு நடத்தும்.



3. சர்வத்தையும் படைத்த
கர்த்தாதி கர்த்தரே,
உம்சித்தம்போல் நடக்க
துணைசெய்யும், தேவே !
என்மேல் இரக்கமாக
வெளிச்சம் காண்பியும்,
அப்போ சந்தோஷமாக
என் வாழ்நாள் கழியும். ஆமென்.

## மாலை.

## 3

1. மெய்ப்பொழுதான கிறிஸ்துவே,
நீர் அஸ்தமிப்பதில்லையே;
ஆ, எங்களுக்கெந்நேரமும்
வெளிச்சங் காண்பித்தருளும்.

2. பொல்லாத விக்கினங்களை
விலக்கிப் போட்டடியாரை
நீர் இந்த ராத்திரியிலே
அன்பாய்க்காப்பாற்றும், கர்த்தரே.

3. ஆகாத பாவத்துக்கும்
பிசாசின் சர்ப்பனைகளும்
விலகப்பண்ணி, உள்ளிலே
சுத்தாங்கந்தாரும், இயேசுவே.

4. ஆ, உமது சபையையும்
இரக்கமாய்க் காத்தருளும்,
நீர் பட்ட வாதையைப்பார்த்தே
அதற்குதவும், கர்த்தரே.

5. சோவால் தவிப்பவருக்கு
அனுக்கிரகத்தைக் காண்பித்து,
நொறுங்கிற எல்லாரையும்
அன்பாகத் தேற்றியருளும்;

6. பிதா குமாரன் ஆவிக்கும்,
துதியும் தோத்திரங்களும்
அனந்த காலங்களுக்கு
உண்டாகவே கடவது.

ஆமென்.

## 4.

1. கர்த்தரே, என்னை மா அன்பாய்
நீர் இந்த ராவிலும்
அணைத்துக் காத்து, சுகமாய்
தங்கக்கடாட்சியும்.

2. இருட்டிலேயும் தேவரீர்
வெளிச்சமானவர்,
மெய் இஸ்ரவேலைக்காக்கும் நீர்
உறக்கமற்றவர்.

3. என் பாவத்தின் அகோரத்தால்
மனம் கலங்கினேன்,
என் மீட்பர் தூயரத்தத்தால்
என்னைக் கழுவுமேன்.

4. என் ஜீவன் இந்த ராவினில்
சென்றாலும், கர்த்தரே,
என் ஆவியை உம்மண்டையில்
நீர் சேர்த்துக்கொள்வீரே.

5. விழிக்கும்போதென்னருகில்
நீர் வந்தென் வேலையில்
உம் அருள் தந்து காத்திடும்,
என்னைத்தள்ளாதிரும்.

ஆமென்



## 5

1. போகாதேயும், என் நேச கர்த்தரே,
வெளிச்சம் மங்கி இருட்டாகுதே;
ஒத்தாசை சாதியற்ற எல்லோர்க்கும்
ஒப்பற்ற துணை நீர்; என்னோடிரும்.
2. நீர் மேல் குமிழ்ப்போல் மாந்தர் ஆயுசே,
இம்மையின் இன்பம் வாழ்வும் குப்பையே;
கண்காணும் யாவும் வாடி மாறிடும்,
மாறாத நித்யர் நீர்; என்னோடிரும்.
3. நீர் கூட நின்று அருள்புரியும்,
பசாசின் கண்ணிக்கு நான் தப்பவும்
துணைசெய்யும், நேர்பாதை காட்டிடும்;
இக்கட்டு நேரம் நீர் என்னோடிரும்.
4. கண்ணீர் விடேன், நீர் ஆசீர்வதித்தால்,
பயப்படேன், நீர் கூட இருந்தால்;
சாவே, எங்கே உன் கூரும் ஜெயமும்?
உம்மால் ஜெயிக்க நீர் என்னோடிரும்.
5. நான் சாகும் அந்தகார நேரத்தில்
உம் சிலுவையைக் காட்டிடும், என் நெஞ்சில்
விண்ஜோதி வீசி, பயம் நீக்கிடும்;
என் வாழ்வில், சாவில்; நீர் என்னோடிரும்.

ஆமென்.

## கிறிஸ்துவின் வருகை.

## 6

1. வானம் பூமி ஒழிப்போகும்,
ஏக ராஜன் வருவார்;
கோடி தூதர் அவரோடு
வந்து ஆரவாரிப்பார்;
அல்லேலூயா,
கர்த்தர் லோகம் ஆளுவார்;

## 6

2. முன்பு ஏழைக்கோலம் பூண்டு
முட்கிரீடம் தாங்கினார்;
நொந்து குருசில் இறந்து
ஜீவனற்றுத் தொங்கினார்;
அவர்தாமே
ராஜனாகத் தோன்றுவார்.

3. நீதிமான்கள் பயமின்றி
வாருமென்று வாழ்த்துவார்;
தூதரோடு வானில் ஏறி
என்றென்றைக்கும் வாழுவார்;
தீயோர் நாணி,
சாபம் பெற்று நீங்குவார்.

4. ஏசுவே, நீர் வரும் நாளில்
என்னையும் கண்பார்த்திடும்;
நீதிமான்கள் சேரும் வீட்டில்
நானும் சேர அருளும்;
ஆசீர்வாதம்
தந்து என்னைக்காத்திடும். ஆமென்

## 7

1. உலகின் வாஞ்சையான
என் சுவாமி இயேசுவே,
நான் உம்மை ஏற்றதான
வணக்கத்துடனே
சந்திக்கச்செய்வதென்ன?
நான் தேவரீருக்கு
செலுத்த உமக்கென்ன
பிரியமானது?

## 7

2. நான் சகல கெதியும்
இல்லாதே போனேனாய்
நிர்ப்பந்தமுங் கெடியும்
நிறைந்தவனுமாய்
இருந்தபோதன்பாக
நீர் என்னை நோக்கினீர்,
நீரே என் மீட்புக்காக
வெளிப்படுகிறீர்.

3. கட்டுண்டு நான் கிடந்தேன்,
நீர் கட்டவிழ்க்கிறீர்;
இகழ்ச்சியைச் சுமந்தேன்,
நீர் அதை நீக்கினீர்.
நீர் என்னை மேன்மையாக்கி
என் ஆத்துமத்திலே
ஐசுவரியவானாக்கி
ரட்சிக்க வாறீரே.

4. வியாகுலம் அடைந்த
ஜனத்தின் கூட்டமே,
இக்கட்டினால் நிறைந்த
ஆதாமின் ஜாதியே,
இதோ, சகாயர் வாறார்;
கர்த்தர் கெட்டோருக்கு
இரட்சகரைத்தாறார்;
அத்தால் மகிழ்ந்திரு.

5. பொல்லாதவர்களுக்கு
மா ஆக்கினைகளும்
நல்லோரின் கூட்டத்துக்கு
அனந்த பூரிப்பும்
முடிவிலே உண்டாக
அந்நாளும் வாறாரே,
ஆம், எங்கள் மீட்புக்காக
நீர் வாரும், இயேசுவே. ஆமென்.

## 8

1. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்;
மீட்போமென்ற வாசகம்
பிசகாமல் சுவாமியார்
மீட்பரை அனுப்பினார்.

2. முற்பிதாக்கள் யாவரும்
தீர்க்கதரிசிகளும்
சொல்லி ஆசைப்பட்டது
வந்து நிறைவேறிற்று.

3. ஆபிரகாமுடைய பலன்,
இஸ்ரவேலின் சூரியன்
என்ற கன்னி மைந்தனே
வந்தார், சீயோன், உனக்கே.

4. வாழ்க, என் வெளிச்சமே,
ஒளியன்றோ, ஜீவனே;
என் இருதயத்திலும்
தயவாய்ப் பிரவேசியும்.

5. உன்னை சேரும், ராயரே,
அது உம்முடையதே;
பாவழுக்கனைத்தையும்
அதில் நீரே நீக்கவும்.

6. நீர் சாதுவான தயவாய்
வந்தீர்; அந்த வண்ணமாய்
இப்போதென்மேல் மெத்தவும்
நீண்ட சாந்தமாயிரும்.



7. சாத்தான் வெகு சர்ப்பனை
பண்ணியும், என்மனதை
நீர் எல்லாப் பயத்திலும்
ஆற்றித் தேற்றிக்கொண்டிரும்.

8. நான் பலத்து உம்முட
மீட்பினால் செயிக்க,
சர்ப்பத்தின் தலையை நீர்
வென்றுடைக்கக் கடவீர்.

9. நீர் திரும்ப வருகில்,
ஜீவாதிபதி, என்னில்
உமதர்த்தம் சாயலும்
காணக்கட்டளையிடும். ஆமென்.

## 9

1. வாரும், லோக மீட்பரே,
கன்னிபெற்ற மைந்தனே,
நீர் பிதாவின் காணிக்கை,
உலகத்தின் அருமை.

2. தாய் திவ்விய ஆவியால்
கர்ப்பவதியானதால்,
ஆதி வார்த்தை நமக்கு
ஒத்த ஜென்மமாயிற்று.

3. கற்புடைய சுத்தத்தின்
நிர்கலங்காக் கன்னியின்
கர்ப்பத்தில் மா சுவாமியார்
உற்பவித்து ஜென்மித்தார்.

4. சூரியோதயத்துக்கு
சாயலான நமது
பொழுதான ரட்சகர்
தாழ்விலே உதித்தவர்.

ஆனால் உன்னதத்திலே
தான் இருந்து வந்தாரே;
பேயை வென்றிறங்கினார்,
மீண்டும் வானம் ஏறினார்.

நித்திய பிதாவுக்கே
ஒத்த சுவாமி, உம்மிலே
நீர் பிறந்த ஜாதியும்
வெல்ல வெற்றியாயிரும்.

உம்முடைய முன்னணை
மின்னி ராவில் ஒளியை
காட்டும், எங்கள் நெஞ்சிலும்
பிரகாசித்தேயிரும்.

உன்னத பிதா சுதன்
ஆவியை அனைவன்
தயவுள்ள தம்பிரான்
என்று போற்றக்கடவன். ஆமென்.

## கிறிஸ்துவின் ஜெனனம்.

## 10

அறப்பிருக்கும்போல்
மகிழ்ந்து பாடுங்கள்,
நம்மை ஆற்றும் நன்மை
இம்முன்னணையிலே
மா சூரியன் அத்தன்மை
விளங்கும் பிள்ளையே,
ஆதியந்தமே.



2. தெய்வீக பிள்ளையே,
அன்புள்ள இயேசுவே,
உம்மால் நான் களிக்க
என் நெஞ்சைத் தேற்றுமேன்,
நீர் என்னை ஆதரிக்க
நான் உம்மை அண்டினேன்,
என்னைச் சேருமேன்.

3. பிதாவின் தயவும்
குமாரன் பட்சமும்
பாவத்தைக் கழிக்கும்;
நாம் கெட்டோர், திக்கில்லார்.
ஆனால் எல்லாக் கதிக்கும்
வழியைச் சுவாமியார்
உண்டுபண்ணினார்.

4 மெய்யாய் மகிழவே
வாழ்வேது, மோட்சமே,
அங்கே வானோர் பாடும்
சங்கீதம் இன்பமே,
ராஜாவின் ஊரில் ஆடும்
மணிகள் ஓசையே,
வா, வா, மோட்சமே. ஆமென்.

## 11

1. விண்ணோர் போற்றும் வேந்தன்,
மண்ணோர் மானுவேலன்,
மாசற்ற கன்னியிடம் ஜெனமித்தார்.
கர்த்தாதி கர்த்தன்,
நித்ய தேவமைந்தன்.
வாரும், வணங்க வாரும்,
பாடும், மகிழ்வாய்ப்பாடும்,
நாடும் கிறிஸ்தேசு பாலன் பாதம் நாடும்.

2. பெத்லேம் என்னும் ஊரில்,
சத்ராத் தொழுவத்தில்,
தேவன் மனிதாவதாரம் ஆனார்.
ஜோதியில் ஜோதி,
நீதியின் சொரூபி. வாரும்

3. வேதம் நிறைவேற்ற,
ஜாதிகள் ஈடேற்ற,
தேவாதி வார்த்தை ஸ்திரீயின் வித்தானார்.
பூலோக மீட்பர்,
மேலோகத்தில் சேர்ப்பர். வாரும்

4. தஞ்சம் தேவரீரே,
கெஞ்சுறோம் கர்த்தாவே,
உம் அவதாரப்புண்யம் அருளும்.
விண்ணில் சந்தோஷம்,
மண்ணில் சமாதானம். வாரும்
ஆமென்.

## 12

1. தேவன் மானிடனானார்,
ஜீவநாதர் ஜெனமித்தார்.
பாடும் ஜெயகெம்பீரம்,
சூடும் பாலன் பொற்பாதம்.
தூத சேனை முழங்க,
பூத கணம் நடுங்க,
சுத்த கன்னி கர்ப்பத்தில்,
பெத்லேம் மாட்டுக் கொட்டிலில்,
தேவன் மானிடனானார்,
ஜீவநாதர் ஜெனமித்தார்.

2. தேவனுக்கு மகிமை,
பாவிகள்மேல் மாதயை,
மண்ணினிலே சமாதானம்
உண்டாம் இனி என்றைக்கும்.
மாந்தர் கர்வம் நீங்கிட,
சாந்தம், தாழ்மை ஓங்கிட,
கந்தைத் துணி பொதிந்து,
விந்தைக் கோலம் அணிந்து,
தேவன் மானிடனானார்,
ஜீவநாதர் ஜெனமித்தார்.

3. ஆதியாம் அநாதியே,
ஜோதிதன்னில் ஜோதியே,
தேவ அன்பின் ரூபமே,
ஜீவ ஊற்று, மன்னாவே!
மண்ணோரை ஈடேற்றிட,
விண்ணின் தூதர் ஆக்கிட,
விண்ணின் மேன்மை துறந்தீர்,
மண்ணில் தாழ்ந்து பிறந்தீர்.
தேவன் மானிடனானார்,
ஜீவநாதர் ஜெனமித்தார்.

4. தேவதாயார் பாக்கியம்,
ஆவியின் அனுக்கிரகம்,
நெஞ்சம் எங்கட்கருளும்,
நெஞ்சில் உற்பவித்திடும்.
கன்னி மரி பாலனை,
மன்னன் மானுவேலனை,
ஆடிப்பாடிப்போற்றுவோம்,
தேடிப்பாதம் பணிவோம்.
தேவன் மானிடனானார்,
ஜீவநாதர் ஜெனமித்தார். ஆமென்.

## 13

1. சபையே, இன்று வானத்தை
திறந்து தமது
சுதனை ஈயும் சுவாமியை
துதித்துக்கொண்டிரு.

2. பிதாவோடொத்த இவரே
குழந்தையாகிறார்,
திக்கற்று முன்னணையிலே
கிடக்கவும் வெட்கார்.

3. சிறியோராக ஆண்டவர்
பலத்தை மாற்றினார்,
பண்செய்வோன் ரூபைச் சிஷ்டிகர்
தாமே எடுக்கிறார்.

4. நாதாக்களின் அதிபதி
முலைப்பால் உண்கிறார்,
எளிய கன்னியாஸ்திரி
கர்த்தாவுடை தாயார்.



5. புவியில் அவர் பரம
இராச்சியத்தையே
உண்டாக்க வந்தோராகிய
தாவீதின் மைந்தனே.

6. தெய்வீக சுபாவம் நம்மிலே
உண்டாக்கச் சுவாமியார்
நரரின் சுபாவமாய் இங்கே
பிறந்திருக்கிறார்.

7. தாழ்ந்தோர் அவர், உயர்ந்தோன் நான்,
இதென்னமாறுதல்;
இதென்ன விநோதந்தான்,
இன்பின் ஆழங்கள்.

8. திரும்பப் பரதீசுக்கு
வழி திறந்துபோம்,
கேருபின் காவல் வாங்கிற்று,
மகிழ்ந்து பாடுவோம். ஆமென்.

## 14

1. நீதர்கள் சந்தோஷமாக
பாடச்சே - என்னிலே
நெஞ்சு துள்ளுவதாக.
கேளுங்கள், ஆகாசமெங்கும்
கிறிஸ்துவின் ஜென்மத்தின்
கீதங்கள் முழங்கும்.

2. இன்று ரட்சகர் ஜெனித்தார்,
நமது - மீட்புக்கு
மீட்பராய் உதித்தார்.
தேவ மைந்தன் தாழ வந்தார்,
மா கர்த்தா-நம்முடை
ஜாதியாய்ப் பிறந்தார்.

3. கெட்டுப்போன நமக்காக
கஸ்தியாய்-நோவுமாய்
உத்தரித்துச் சாக
ஆட்டுக்குட்டியாகத் தாமே
தாழ்மையாய்-சாதுவாய்
இங்கே வந்தாரே.

4. ஏவினீத் தன் பாவம் குத்தி
இரவும் - பகலும்
கவலைப்படுத்தி
வருத்த, அவனுக்காக
ரட்சகர்-வந்தவர்
மத்தியஸ்தராக.

5. ஏழைகள் தாராளமாக
இதிலிருந்தன்னுடை -, கைகளை
நீட்டுவார்களாக.
இங்கே ஆத்துமம் பிழைக்கும்,
சகல-பூரண
நன்மைகள் கிடைக்கும்.

6. உம்மால் சுத்தமாயிருப்பேன்,
உம்முடை - பூரண
நீதியை உடுப்பேன்;
உம்மை மனதில் அடைப்பேன்,
உம்மையே-அதிலே
ஆஸ்தியாக வைப்பேன்.



7. இங்கே உமக்குப் பிழைப்பேன்,
உம்மையே-சாவிலே
பற்றிக்கொண்டணைப்பேன்.
அங்கே எனக்கென்றென்றைக்கும்
உம்முடை-பாக்கிய
சமூகம் கிடைக்கும். ஆமென்.

## வருஷப்பிறப்பு.

### 15

1. வருஷப்பிறப்புன்றென்று
புதுப்பத்தியுடனே
தேவரீரை நான் பின்சென்று
வர நீர்தான், இயேசுவே,
எனக்கும் என் வேலைக்கும்
வழிகாட்டியாயிரும்,
எனக்கெப்போதும் இனியும்
ஆசீர்வாதத்தை அளியும்.

2. இது இருளை பொழியும்
வருஷமாகட்டுமே ;
என்னை நீர் பிரகாசிப்பியும் ;
என் அழுக்கை அடியேன்
மனஸ்தாபத்துடனே
பார்த்தருளுக்கவே,
நற்குணத்தையும் அளியும்,
பாவம் யாவையும் மன்னியும்.

3. நீர் என் அழுகையைக் கண்டு
துக்கத்தால் கலங்கின
அடியேனைத் தேற்றிவைத்து
நித்தம் நித்தம் உம்முடை
கையால் என்னைத் தாங்கவும்,
பாவத்துக்கும் கேட்டுக்கும்
தப்புவிக்கவும், அன்பாக
தயவருளுவீராக.

4. மாயமற்ற நிதில்தோனுக
இந்த வருஷத்திலே
நான் நடக்கத்தக்கதாக
சுவாசியும், கர்த்தரே.
யாவர் மேலும் பட்சத்தை
வைத்து தேவ பத்தியை
எனக்கு ரட்சிப்புண்டாக
காண்பித்தேயிருப்பேனாக.

5. பூரிப்பாய் இவ்வருஷத்தை
நான் முடிக்க என்னை நீர்
தாங்கி உமது கரத்தை
என்மேல் வைக்கக்கடவீர்.
சகல இக்கட்டிலும்
என்னை ஆதரித்திரும்,
உம்மைப்பற்றி க்ஷேமமாக
சாவிலும் ஜெயிப்பேனாக.

ஆமென்



## 16

1. போன ஆண்டிலும் நம்மை
காத்த தேவ தயவை
பக்தி விநயமாக
பாடித்துதிப்போமாக.

2. தேவா, இந்த ஆண்டிலும்
எங்கள் துணையாயிரும்;
எந்தத் துன்பம், தாழ்விலும்
கூடத் தங்கியருளும்.

3. நாங்கள் உம்மின் தாசராய்.
தாழ்மை, பக்தி உள்ளோராய்,
சாமட்டும் நிலைக்க நீர்
காத்து வழி காட்டுவீர்.

4. பரத்துக்கு சேராக
செல்ல நீரே அன்பாக
அடியாரை எந்நாளும்
உமதாவியால் ஆளும்.

5. யாரேனும் இவ்வாண்டினில்
சாவின் பள்ளத்தாக்கினில்
செல்லின், நீர் உம் கோலாலே
தேற்றும், நல்ல மேய்ப்பரே.

6. தேவனாம் பிதாவுக்கும்,
குமாரன், சுத்த ஆவிக்கும்
அல்லேலூயா, கீர்த்தனம்,
என்றும் புகழ் ஸ்தோத்திரம். ஆமென்

## கிறிஸ்துவின் பாடுகள்.

### 17

1. மரிக்கும் கிறிஸ்தின் ஆவியும்,
வதைக்கப்பட்ட தேகமும்,
என் தேகம் ஆவி யாவையும்
நன்றாய்க் குணப்படுத்தவும்.

2. அவர் விலாவால் மிகவும்
பொழிந்த ரத்தம் தண்ணீரும்
என் ஸ்நானமாகி, எனக்கு
உயிர் தரக்கடவது.

3. அவர் முகத்தின் வேர்வையும்,
கண்ணீர், வேதனை, துக்கமும்,
அந்நாளின் தீர்ப்பழிப்புக்கும்
இப்பாவியை விலக்கவும்.

4. ஆ, இயேசுக் கிறிஸ்தே, உம்மண்டை
ஒதுக்கைத்தேடும் ஏழையை
நீர் பட்ட காயங்களிலே
மறையும், நீர் என் மீட்பரே.

5. என் மரண அவஸ்தையில்
நீர் என்னைத் தேற்றி, மோட்சத்தில்
நான் என்றும் உம்மைத் தொழுவே
வரவழையும், கர்த்தரே. ஆமென்.



### 18

1. என்னுடைய சாவின் சாவே,
என் உயிரின் ஜீவனே,
என்னை மீட்க நீர், கர்த்தாவே,
தேவ கோபத்தீயிலே
பாய்ந்து, மா அவஸ்தையாக
பட்ட கன வாதைக்காக
உமக்காயிரந்தரம்
இயேசுவே, சங்கீர்த்தனம்.

2. நான் சகிக்க நீர் இக்கட்டு,
துன்பம், வாதை, கோவிடர்,
குட்டறை, பொல்லாப்பும் பட்டு
வாரடியும் உண்டவர்,
ஆசீர்வாதமே உண்டாக
சாபமானீர் எனக்காக,
உமக்காயிரந்தரம்
இயேசுவே, சங்கீர்த்தனம்.

3. ஜீவக்கிரீடம் நான் தரித்து
வாழவும் உயரவும்,
அவமானமெல்லாம் சகித்து
சிந்தை துப்புதலையும்
ஏற்றுக்கொண்டு, என்னை மற்ற
முள்முடி சூடப்பட்ட
உமக்காயிரந்தரம்
இயேசுவே, சங்கீர்த்தனம்.

4. என் அநியாயத்தைக் கழித்து
என்னை மீட்டு விட்டீரே,
கோளை யாவும் உத்தரித்து
நல்ல மனதுடனே
ரத்தம் சிந்தி, மா நிர்ப்பந்த
சிலுவையிலே இறந்த
உமக்காயிரந்தரம்
இயேசுவே, சங்கீர்த்தனம்.

5. உம்முடைய பணிவாலே
என் இடும்பின் ஆக்கினை,
உம்முடைய சிக்ஷையாலே
என்னுடைய சிறுமை
தீரும்; உம்முடைய சாவு
சாவில் எனக்கானதாவு;
உமக்காயிரந்தரம்
இயேசுவே, சங்கீர்த்தனம்.

6. இயேசுவே, நீர் சாந்தமாக
உள்ளேயும் புறம்பேயும்
ஜீவன் போகுமளவாக
பட்ட பாடனைத்துக்கும்
என்ன சொல்வேன், எனக்காக
பட்டீரென்று தாழ்மையாக
உம்மை நான் வணங்குகிறேன்,
என்றென்றைக்கும் போற்றுவேன். ஆமென்



## 19

### 1-ம் பங்கு.

1. இரத்தம், காயம், குத்தும்
நிறைந்து, நிந்தைக்கே
முள் கிரீடத்தாலே சுற்றும்
சூடுண்ட சிரசே,
முன் கன மேன்மை கொண்ட
நீ வசை காண்பானேன்?
ஐயோ, வதைந்து நொந்த
உன் முன் பணிகிறேன்.

2. பூலோகமும் பணியும்
முகத்தின் மேனியே,
ஏன் உன்னைத்தான் உமிழும்
நீச்பாக்ஷதத்துமோ?
ஐயோ, நீ வெளுபட்டாய்,
பரவெளிச்சமாம்
கண் ஜோதி மா இக்கட்டாய்
இருண்டு மங்கலாம்.

3. அன்புள்ள கன்னமும்
உதட்டு வர்ணமும்
வெட்டுண்ட புல்லும் பூவும்
பசும்போல் உலரும்,
மா கர்த்தரே, நீர்தானே
மடிய வேணுமோ?
அடிக்கப்பட்டீர் தானே
கோரந்தன் அல்லவோ?

4. நீர் பட்ட வாதை யாவும்
என் பாவப்பாரமே,
இத்தீங்கும் நோவும் சாவும்
என் குற்றம், கர்த்தரே.
இதோ, நான் என்றும் சாக
நிதானம் பண்கிறேன்,
ஆனால் என்மேல் அன்பாக
கண்பார்வையாகுமேன்.

5. நீர் என்னை உமதாடாய்
அறியும், மேய்ப்பரே.
முன் ஜீவன் ஊறும் ஆறாய்
என் தாகம் தீர்த்தீரே,
நீர் என்னைப் போஷிப்பிக்க
அமிர்தமுண்டேனே,
நீர் தேற்றரவளிக்க
பேரின்பமாச்சுதே.
ஆமென்.

## 2-ம் பங்கு.

1. உம்பண்டை இங்கே நிற்பேன்,
என்மேல் இரங்குமேன்,
விண்ணப்பத்தில் தரிப்பேன்,
என் கர்த்தரை விடேன்,
இதோ, நான் உம்மைப்பற்றி
கண்ணீர் விட்டண்டினேன்,
மரிக்கும் உம்மைக்கட்டி
அணைத்துக்கொள்ளுவேன்.



2. என் ஏழை மனதுக்கு
நீர் பாடுபட்டதே
மகா சந்தோஷத்துக்கு
பலிக்கும், மீட்பரே.
என் ஜீவனே, நான் கூட
இச்சிலுவையிலே
உம்மோடென் கண்ணை மூடி
மரித்தால் வாழ்வே.

3. நான் உம்மைத் தாழ்மையாக
வணங்கி, நித்தமே
நீர் பட்ட கஸ்திக்காக
துதிப்பேன், இயேசுவே.
நான் உம்மில் ஊன்றி நிற்க
சகாயமாயிரும்,
நான் உம்மிலே மரிக்க
நீர் கட்டளையிடும்.

4. நான் மாளும் காலம் வந்தால்,
பிரிந்திராதேயும்,
நான் நொய்ந்து போய்க்கிடந்தால்,
தரிசனை கொடும்.
என் மனக்கிலேசம் மெத்த
பாடாய் எக்கோரமும்,
நீர் சிந்தின இரத்த
பலத்தால் ஓட்டியும்.

5. என் மூச்சொடுக்கும் அந்த
கடை இக்கட்டிலும்,
நீர் எனக்காய் இறந்த
ரூபாகக் காண்பியும்,
அப்போ நான் உம்மைப்பார்த்து
கண்ணோக்கி, நெஞ்சிலே
அணைத்துக்கொண்டு சார்ந்து,
சாகட்டும், இயேசுவே.
ஆமென்.

## 20

1. இயேசு பட்ட மாபலத்த
ஐந்து காயம் வாழ்த்துவேன்,
மீட்பளிக்கும், உயிர்ப்பிக்கும்
அதையே வணங்குவேன்.

2. பாதம் வாழ்த்தி, என்னைத்தாழ்த்தி
பாவத்தை அரோசிப்பேன்,
எனக்காக நீர் அன்பாக
பட்ட வாதைக்கழுவேன்.

3. பாவப்பாரம் மா அகோரம்,
பாவி ஏங்கி நிற்கிறேன்,
பரிகாரம், நீர் ஆதாரம்,
பயம் நீங்கித் தாங்குவேன்.

4. சீரில்லாத, என் பொல்லாத
நெஞ்சை நீர் திருத்துமேன்,
நேர்மையுள்ள பாதை செல்ல
அதை நீர் நடத்துமேன்.

5. மாளுகையில் மீட்பர் கையில்
ஆவி ஒப்புவிக்கிறேன்,
கான் குத்துண்ட, திறவுண்ட
பக்கத்தில் ஒதுங்குவேன்.

6. சாகுங்கால் நல் மீட்பரால் என்
ஆத்மம் பரதிலே
தேவ சுதன், மெய் மன்றுவால்
திருப்தி செய்யப்படுமே. ஆமென்



## 21

1. பிளவுண்ட மலையே,
புகலிடம் தாருமே.
உடைந்த காயமும்,
பாய்ந்த ரத்தம், தண்ணீரும்
பாவதோஷம் யாவையும்
என்னில் நீக்க அருளும்.

2. கண்ணீர் நித்தம் சொரிந்தும்,
ஓயாத்தவம் புரிந்தும்,
பாவம் நீங்கமாட்டாதே,
நீரே மீட்பர், யேசுவே;
உம்முடைய சிலுவை
என்னைக்காக்கும் என் தஞ்சமே.

3. பாவக் குஷ்டரோகியாய்,
நீசனாய், நிர்வாணியாய்
தஞ்சமென்று அண்டினேன்,
சித்தம் வைக்கக் கெஞ்சுகிறேன்;
ஜீவன் தந்து ரட்சியும்,
நீதியால் சிங்காரியும்.

4. நிழல் போன்ற வாழ்விலும்,
துன்பம், துக்கம், சாவிலும்,
சாவின் பின்னந்தரத்தினில்,
நியாயத்தீர்ப்பு நேரத்தில்,
பிளவுண்ட மலையே,
புகலிடம் தாருமே. ஆமென்.

## 22

1. பாவகாசர் பட்ட காயம்
நோக்கித் தியானம் செய்பவர்
ஜீவன், செல்வம், சுகசகாயம்,
தேறுதலும் பெறுவர்.

2. ரத்தவெள்ளம் பாய்ந்ததாலே
அன்பின் வெள்ளம் ஆயிற்று;
தேவகோபம் அதினாலே
மானிடர்க்குத் தோன்றிற்று.

3. ஆணி பாய்ந்த மீட்பர் பாதம்
பாவிதஞ்சமாயிற்று;
சோர்ந்த அவர் திவ்ய முகம்
ஜோதி அருள் வீசுது.

4. பாசத்தால் என் நெஞ்சம் பொங்கி
துக்கத்தால் கலங்கினேன்;
அவர் சாவால் துக்கம் நீங்கி
சாகா ஜீவன் அடைவேன்.

5. பரிசை நான் அடைந்து
உம்மைச் சேருமளவும்,
உமதன்பைத் தியானம் செய்து
உம்மைப் பற்ற அருளும். ஆமென்.

## 23

1. அகோர கஸ்திப்பட்டோராய்,
வதைந்து வாடி நொந்து,
குரூர ஆணி தைத்தோராய்
இதோ, தலைசாய்த்து,
மரிக்கிறார் மாசின்றையாய்;
துன்மார்க்கர் சாகும் வண்ணமாய்
மரிக்கும் இவர் யாவர்?



௨. "சமஸ்தமும் விசித்திரமாய்
சிருஷ்டித்து ஆண்டுவந்த,
என்றும் ஓயாத தொனியாய்
விண்ணோர் துதிக்கப்பெற்ற
மாதேவமைந்தனே இவர்,
சிருஷ்டிப்பின் ஆதிகாரணர்,
இக்கோலம் பூண்டதேனோ?

3. அநாதி ஜோதி மனுவாய்
இவ்வுலகில் பிறந்து,
அருவருப்பி தயவாய்
கார் கோலம் எடுத்து
பாவத்தின் சாபம் சுமந்தார்,
நிறைந்த மீட்புண்டாகிறார்,
என் ரட்சகர், என் தேவன்.

4. என் யேசுவே, நான் உமக்கே
இவ்வுலகில் பிழைப்பேன்;
நான் அன்பாய் தேவரீரையே
மரிக்கும்போதழைப்பேன்;
நீரே என் ஜீவன், என் கதி,
என் பாவம் போக்கும் மெய்பலி,
நீர் என்னை என்றும் ஆளும். ஆமென்.

## 24

1. என் இதயமே, விழி,
இயேசு தம்மை உனக்காக
தாற அன்பைக் கவனி,
அதையே தியானமாக
பார், இதோ, எக்கேடும் நீக்கும்
அவர் மீட்பினாலே நீங்கும்.

2. முள்முடி சூடினவரே,
சிலுவையில் கடாவப்பட்டார்,
தேவமைந்தன் தான் அல்லோ
காயப்பட்டு எண்ணமற்றார்,
அவர் உன்னை மீட்கச் சாகும்
நேசம் ஒப்பில்லாததாகும்.

3. மனமே, இப்போதும் நீ
என்ன செய்ய ஏற்றிருக்கும்?
பட்ட அவருக்கு நீ
அந்த எல்லா நேசத்துக்கும்
என்னத்தை செலுத்த வாராய்?
அவருக்கு என்ன தாராய்?

4. இயேசுவே, நான் உமக்கே
முழுதும் அடிமையாவேன்,
உம்மைப்பற்றி, உம்மையே
நான் பின்செல்லும் சீஷனாவேன்,
உம்மில் என்றும் ஜீவிப்பேன்,
உம்மில் சாவிலும் தரிப்பேன்.

5. நீர், நீரே, என் பொக்கிஷம்,
உம்மை என்றும் விடமாட்டேன்,
உமதைக்கமே சுகம்;
வேறொன்றும் என்னை ஆற்றிறது,
நான் நீர் மீட்ட ஏழைப்பிள்ளை,
ஆ, நீர் என்னைத் தள்ளதில்லை.

6. போரின் பின்பு எத்தனை
பாக்கியங்கள் என்றென்றைக்கும்
அங்குண்டாகும், எத்தனை
செல்வங்கள் அப்போ கிடைக்கும்!
என்றும் அங்கே நான் களிப்பேன்,
என்றும் கர்த்தரைத் துதிப்பேன். ஆமென்



## 25

1. வாழ்க, சிலுவையே, வாழ்க.
பாரமற்ற பாரமே,
கூறு உன்னை மனதார
தோள்மேல் ஏற்றுக்கொள்வேனே.

2. இந்த சிந்தை வச்சையல்ல,
இது வெட்கம் அல்லவே,
என்னனில் பொல்லாப்புக்கல்ல,
நீதிக்காக வந்ததே.

3. உலகத்தின் பொழுதான
இயேசுதாமும் சிக்ஷைக்கே
ஏதுவாகி, ஈனமான
சிலுவையில் மாண்டாரே.

4. சிலுவையின் கீழ் தவிக்கும்
தம்முடையவர்களை
இப்போதவர் ஆதரிக்கும்
பட்சம் அன்பும் எத்தனை!

5. இரத்தசாட்சிகளெல்லாரும்
இயேசுவின் சித்திரமாய்
பாடுபட்டபின் கொண்டாடும்
ஜீவிப்பு மகா சுகம்.

6. வாழ்க, சிலுவையே, வாழ்க,
மோட்சத்தின் முன்னதனே,
நீதிமான்கள் இனிப்போக
சேர்வழியாம் வாசலே.

7. யேசுவைப் பின்செல்வோமாக,
சிலுவையின் தோழரே,
அவரைப் புகழ்ச்சியாக
தோத்திரிப்போம் கோவிலே. ஆமென்.

## கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.

### 26

1. தேவமைந்தன் எழுந்தார், அல்லேலூயா
பாவநாசர் உயிர்த்தார், அல்லேலூயா
சாவின் கூரை ஒடித்தார், அல்லேலூயா
ஜீவ வாசல் திறந்தார். அல்லேலூயா

2. பாடிப்பாதம் பணிவோம், அல்லேலூயா
ஆடி ஆராதிப்போம், அல்லேலூயா
கூடிக்களிகூருவோம், அல்லேலூயா
நாடிப்புகழ் நாட்டுவோம். அல்லேலூயா

3. மண்ணோர் வாழ மரித்தீர், அல்லேலூயா
விண்ணோராக உயிர்த்தீர், அல்லேலூயா
மண்ணோர்க்காய் மன்றாடுநீர், அல்லேலூயா
விண்ணில் அரசாள்கிறீர். அல்லேலூயா

4. தேவனோடொன்றானோம், அல்லேலூயா
ஆவிக்காலயமானோம், அல்லேலூயா
பாவதோஷம் நீங்கினோம், அல்லேலூயா
ஜீவன், சுகம் அடைந்தோம். அல்லேலூயா

5. ஆதி பரஞ்சோதியே, அல்லேலூயா
பாதை, சத்யம், ஜீவனே, அல்லேலூயா
தூதர் போற்றும் வேந்தனே, அல்லேலூயா
நாதன் மானுவேலனே. அல்லேலூயா

ஆமென்.

### 27

1. இந்நாளில் இயேசு சுவாமியார்
பிரஸ்தாபமாய் வெளிக்கிறார்.
அல்லேலூயா, அல்லேலூயா.
எழுந்த அவர் என்றைக்கும்
இஸ்தோத்திரிக்கப்படவும்.
அல்லேலூயா, அல்லேலூயா.



பிசாசின் சக்தியை அவர்
முறித்துப்போட்ட பராக்கிரமர்.
அல்லேலூயா, அல்லேலூயா.
அனைவரும் அத்தருண்டாம்
கொடூரக்கைக்கு நீக்கலாம்.
அல்லேலூயா, அல்லேலூயா.

ஆ, பாவிகளின் மீட்பரே,
ஜெயித்த இயேசுக்கிறிஸ்துவே,
அல்லேலூயா, அல்லேலூயா.
பிசாசின் கீழே காக்களும்
இராப்படிக்கு ரட்சியும்.
அல்லேலூயா, அல்லேலூயா.

புவி இக்கட்டால் ரம்புது,
நீரோ அடியார் பூரிப்பு.
அல்லேலூயா, அல்லேலூயா.
நீர் மோட்சத்துக்கு வாசலே,
அங்கே அழையும், இயேசுவே.
அல்லேலூயா, அல்லேலூயா.

பகைஞர் யாவரும் இப்போ
முறுமுறுத்தும், அச்சமோ?
அல்லேலூயா, அல்லேலூயா.
பொல்லாத சத்துருவுக்கு
கேடான தோல்வி வந்தது.
அல்லேலூயா, அல்லேலூயா.

இத்தால் சந்தோஷமாகிறோம்.
இத்தயவைப்புகழுவோம்,
அல்லேலூயா, அல்லேலூயா.
திரியேகரே, எப்போதும் நீர்
துதிக்கப்படக்கடவீர்.
அல்லேலூயா, அல்லேலூயா. ஆமென்.

## 28

1. இந்நாளே கிறிஸ்து வெற்றியை
சிறந்தெல்லாப் பகைஞரை
சிறைபிடித்துக் கொண்டுபோம்
ஜெயமாவென்று பாடுவோம்.
அல்லேலூயா.

2. பேய், பாவம், சாவு, நரகம்
எங்கேயும் இன்றையத்தினம்
எழுந்த கிறிஸ்தின் காலுக்கு
கீழாய் விழுந்து கெட்டது.
அல்லேலூயா.

3. சாவால் விழுங்கப்பட்டபின்,
அவர் தெய்வீக ஜீவனின்
பலத்தால் சாவைப் போக்கினர்,
செத்தோருக்கும் உயிர்தாருர்,
அல்லேலூயா.

4. ஆகாசம், பூமி, பொழுதும்
மூன்றுக்கமாம் ஸாக்ஷிக்கடியும்
இக்காலில் லோகப்பிரபு
விழுந்ததால் மகிழுது.
அல்லேலூயா.

5. ஆ, எங்கள் ஆறுதலுக்கே
எழுந்த யேசுக்கிறிஸ்துவே,
ஜெயித்த உமக்கென்றைக்கும்
இஸ்தோத்திரம் உண்டாகவும்.
அல்லேலூயா.



## 29

1. அல்லேலூயா! அல்லேலூயா!
ஜீவநாதர் உயிர்த்தார்.
அல்லேலூயா! அல்லேலூயா!
தேவமைந்தன் எழுந்தார்.
சர்வ வல்ல லோக மீட்பர்
சாவின் கூரை ஒடித்தார்,
பாவ நாசர், நித்ய நேசர்,
ஜீவ வாசல் திறந்தார்.

2. பாவப்பலியாய் மரித்த
தேவ ஆட்டுக்குட்டியே!
சாவால் சாவை வென்று, சாகா
ஜீவன் தந்த யேசுவே!
ஆதம் எனை சாபம் நீக்க
மாதின் வித்தாய் தோன்றினீர்,
சர்ப்பத்தின் தலை நசுக்கி
அன்பர் எம்மை ரட்சித்தீர்.

3. பாவத்துக்கு நாங்கள் சாக
தேவரீர் தாம் மரித்தீர்,
என்றும் உம்மிலே பிழைக்க
மூன்றாம் நாளில் உயிர்த்தீர்.
கோடாகோடி தூதரோடே
பாடி உம்மைப்போற்றுவோம்,
சுத்தர், சுத்தர், சுத்தரென்று
பக்தியாகப் பணிவோம்.

4. நம்மை மீட்க மைந்தன் தந்த
தேவனும் பிதாவுக்கும்,
நம்மை மீட்க மாண்டுயிர்த்த
தேவனும் சுதனுக்கும்,
நம்மைப் பரிசுத்தம் செய்யும்
தேவனும் சுத்தாவிக்கும்,
அல்லேலூயா! அல்லேலூயா!
அல்லேலூயா! என்றைக்கும். ஆமென்.

## 30

1. அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா!
தேவாதி தேவன் உயிர்த்தார்,
பாவத்தின் சாபம் தொலைத்தார்,
ஜீவனின் வாசல் திறந்தார்.
அல்லேலூயா.

2. மரணக்கூர் ஒடிந்தது;
பரமசேனை வாழ்த்துது.
நரரின் கூட்டம் போற்றுது.
அல்லேலூயா.

3. சிறைப்பட்டோர் சிறை மீட்டீர்,
கறைகள் யாவும் நீக்கினீர்,
அருளின் மாந்தர் ஆக்கினீர்.
அல்லேலூயா.

4. விண்ணோரை ஆளும் தேவரீர்
மண்ணோருக்காய் மன்றாடுதீர்,
கண்மணிபோலக் காக்கிறீர்.
அல்லேலூயா.



5. அருமை மீட்பரே, இன்னும்
இருளில் தங்கும் யாவர்க்கும்
பரத்தின் ஜோதி வீசவும்.
அல்லேலூயா.

6. பசாசை வென்ற வேந்தரே,
இசரவேலின் மேய்ப்பரே,
விசேஷ ஸ்தோத்திரம் உமக்கே.
அல்லேலூயா. ஆமென்.

### கிறிஸ்துவின் பரமேறுதல்.

## 31

1. மகிழ், கர்த்தாவின் மந்தையே,
இதோ, கெம்பீரத்துடனே
பரத்துக்குன் அதிபதி
போய் ஏறினார், இஸ்தோத்திரி.
அல்லேலூயா.

2. பரத்தின் சேனை ஓசையாய்க்
கொண்டாடி, மா வணக்கமாய்
பணிந்து, இயேசு சுவாமிக்கு
ஆராதனை செலுத்துது.
அல்லேலூயா.

3. நாம் மோட்சத்தின் சுதந்தரர்,
வானோருக்கொப்புமானவர்,
இத்தால் மகிழ்ச்சியாய் வானோர்
எல்லாம் கர்த்தாவைப் போற்றுவோர்.
அல்லேலூயா.

4. இனி கெடோம், அதேனென்றால்,
கிறிஸ்தென்ற ரண்டாம் ஆதாமால்
பொல்லாப்பு, பாவம், சாவு, பேய்,
எச்சேதமும் வெல்லப்பட்டதே.
அல்லேலூயா.

5. இத்தேவ கிருபைகளும்
பெரிய ஆசீர்வாதமும்
கிறிஸ்தென்பவர் ஜெயத்துடன்
பரத்துக்கேறின பலன்,
அல்லேலூயா.

6. ஆகையினால் வானோரைப்போல்
சந்தோஷமாகப் பாடுங்கள்,
துதியும் ஸ்தோத்திரங்களும்
திரியேகருக்குண்டாகவும். ஆமென்.
அல்லேலூயா.

## 32

1. ஜெயித்த இயேசு சுவாமியார்,
அல்லேலூயா.
பரங்களுக்கு ஏறினோர்.
அல்லேலூயா.

2. பிதாவின் பாகத்தில் அவர்,
அல்லேலூயா.
விண்மண்ணை ஆளும் அரசர்.
அல்லேலூயா.

3. இதே முன் தாவீத் சொன்னது,
அல்லேலூயா.
அதிப்போ நிறைவேறிற்று.
அல்லேலூயா.



4. பிதாவோடே உட்கார்ந்தாரே,
அல்லேலூயா.
பகைஞர் கீழ்ப்படத்தானே.
அல்லேலூயா.

5. அத்தாலே ஆர்ப்பரிக்கிறோம்,
அல்லேலூயா.
களிப்பாய் கிறிஸ்தைப் போற்றுவோம்.
அல்லேலூயா.

6. திரியேகருக்கு ஸ்தோத்திரம்,
அல்லேலூயா.
கனம், புகழ்ச்சி, கீர்த்தனம்.
அல்லேலூயா. ஆமென்.

## 33

1. கர்த்தராம் கிறிஸ்துவே,
இந்தப் பூதலத்திலே
கொஞ்சகாலந்தான் தங்கினீர்,
மோட்ச வீட்டுக்கேகினீர்.
அல்லேலூயா.

2. வான ஆசனத்தினில்
வீற்றிருந்து, அதனால்
போற்றப்பட்டும், தேவரீர்
மாந்தரை நேசிக்கிறீர்.
அல்லேலூயா.

3. திருக்கரம் குவித்து,
திருக்காயம் காண்பித்து,
திருவாய் மலர்ந்து நீர்
மாந்தர்க்காய் மன்றாடுறீர்.
அல்லேலூயா.

4. இயேசுவே, நீர் பிரிந்தும்,
வானலோகம் போயினும்,
எங்கள் ஜெபம் கேட்கிறீர்,
அன்பாய் ஆசீர்வதிப்பீர்.
அல்லேலூயா.

5. நித்ய தேவ மைந்தனே,
தூதர் போற்றும் வேந்தனே,
உம்மைப்போல நாங்களும்
வென்று ஏற அருளும்.
அல்லேலூயா. ஆமென்.

## 34

1. ஆ, இயேசுவே, புவியிலே
இருந்திரக்கமாக
அடியாரை அங்கும்மண்டை
இழுத்துக்கொள்வீராக.

2. இழும், இழும், அடியார்க்கும்
பரகதி அளியும்,
அப்போதெல்லா உபத்திரவ
வருத்தங்கள் முடியும்.

3. ஆ, எங்களை நீர் உம்மண்டை
போம் பாதையில் நடத்தும்,
அடியார் கால் தப்பாய்ப் போனால்,
நீர் மோசத்தை அகற்றும்.

4. இவ்வுலகம் ஆகாததலம்,
இழும், அடியார் தேடும்
தலம் பரம், ஆ, அவ்விடம்
நீர் கொண்ட பேரைச்சேரும்.



5. நீர் ரட்சகர், நீர் மீட்டவர்,
நீரே இம்மானுவேலும்;
இரட்சியும், இழும், இழும்,
இவ்வேண்டுதலைக் கேளும். ஆமென்.

## பரிசுத்த ஆவியானவர்.

## 35

1. அடியார் நெஞ்சைத் தயவாய்
சந்தித்து ரப்பி, உமக்கே
பொருந்தும் அலங்காரமாய்
படையும், தேவ ஆவியே.

2. மெய்த் தேற்றரவளிக்கிற
பர சகாயிருக்கிறீர்,
வானுபிஷேகமாகிய
ஜீவாறும் சேசத்தியும் நீர்.

3. பல வரம் நடத்திய
நீர் தம்பிரானுடை விரல்,
தெய்வீக சொல் புறப்பட
உம்மால் படியும் பாஷைகள்.

4. வெளிச்சம் தாரும், அறிவில்
குடன்மை நெஞ்சிலே கொடும்,
சதையின் பலவீனத்தில்
பலம் உண்டாக்கியருளும்;

5. அடியார் எச்சரிக்கையாய்
நீர் ஏவும்போல் நடக்கவே,
பிசாசின் குதைத் தூரமாய்
விலக்கும், மனவாசரே.

6. பிதா சுதனையும் நன்றாய்
அறிந்து அண்டிக்கொள்ளவே,
நீர் எங்கள் தேவ வாத்தியாய்
இரும், இருவர் ஆவியே.

7. திரியேக தெய்வமாகிய
பிதா, குமாரன், ஆவிக்கும்
எப்போதென்றைக்கும் சகல
புகழ்ச்சியும் உண்டாகவும். ஆமென்.

## 36

1. வாரும், தேவ ஆவி, வாரும்!
எங்கள் ஆத்துமத்திலே
எங்களுக்குயிரைத்தாரும்,
வாரும், சுத்த ஆவியே;
உம்முடன் வெளிச்சமும்
சீரும் ஜீவனும் வரும்.

2. எங்கள் நெஞ்சிலே சற்புத்தி,
தேவ பயமும் வர
அதை நீர் முளைப்பித்தி,
தப்பு நினைவாகிய
யாவையும் அதில் நீரே
நீக்கும், தேவ ஆவியே.

3. மோட்சத்தின் வழியைக்காட்டி,
சகல தடையையும்
நீக்கி, எங்களைக் காப்பாற்றி,
நல்லோராக்கியருளும்;
நாம் இடறிற்றேயாகில்,
ஊக்கம் தாரும் மனதில்.



4. மனசெங்களில் கலங்கி,
"சுவாமி, எந்த மட்டுக்கும்?"
என்று நெஞ்சுப்போரிரங்கி,
அதை ஆற்றிக்கொண்டிரும்;
தீர்க்கவும் தரிக்கவும்
நீர் சகாயராயிரும்.

5. விசுவாசத்தை அவிக்க
சத்துருக்கள் பார்க்கச்சே,
அதை நீர் அதிகரிக்க
பண்ணும், தேவ ஆவியே;
நாங்கள் பொய்யைப் பார்க்கிலும்
தேவ வாக்கை நம்பவும்.

6. சாகுங்காலம் வந்தால், நாங்கள்
நித்திய மகிழ்ச்சியாய்
வாழப்போற மோட்சவான்கள்
என்றப்போ விசேஷமாய்
நிச்சயத்தை நெஞ்சிலே
தாரும், நல்ல ஆவியே. ஆமென்.

## 37

1. தேவ ஆவியே,
பூர்வ நாளிலே
பல பாஷை பேசும் நாவும்
மேன்மையான வரம் யாவும்
உம்மால் வந்ததே,
தேவ ஆவியே.

2. சத்ய ஆவியே,
போதகர் நீரே;
மீட்பர் அருமையைக் காட்டி,
அவர் சாயலாக மாற்றி,
என்னை ஆளுமே,
சத்ய ஆவியே.

3. ஜீவ ஊற்று நீர்,
என்னில் ஊறுவீர்;
பாவக்கறை யாவும் நீக்க,
ஆத்துமாவின் தாகம் தீர்க்க,
என்னில் ஊறுவீர்,
ஜீவ ஊற்று நீர்.

4. நேச ஆவியே,
ஏழை நெஞ்சிலே
பாவ இச்சை யாவும் மாள,
தேவ சமாதானம் ஆள,
வாசம் பண்ணுமே,
நேச ஆவியே. ஆமென்

## 38.

1. கர்த்தாவின் சுத்த ஆவியே,
நீர் எங்கள் ஆத்துமத்திலே
இறங்கி வாசம்பண்ணும்;
பரவெளிச்சமாகிய
உம்மாலே நாங்கள் சீர்ப்பட
தெளிந்த நெஞ்சும் கண்ணும்
தந்து, வந்து,
மெய்ஜெபத்தை, நற்குணத்தை போதித்தாற்றும்,
மெய்ச்சந்தோஷத்தை அளியும்.

2. வழித்துணையாம் கர்த்தரே,
நல்யோசனை அறியோமே,
நீரே வழியைக்காட்டும்;
எல்லா உபத்திரவத்திலும்
திடம், நிலைவரத்தையும்
அளித்து முசிப்பாற்றும்.
ஊரும், பாரும்,
கைசலித்து கட்டுவிட்டுப்போன யாவும்
சீர்ப்பட நீரே உதவும்.



3. ஜீவாவி, காக்கும் இயேசுவின்
பிரிய சுவிசேஷத்தின்
பேரின்பத்தால் நிறைந்து,
ரட்சிப்பின் நீளம், அகலம்,
நேச ஆழம், உயரம்
எதென்றுணர்வடைந்து,
பாவம், சாபம்
வென்ற கர்த்தா எங்கள் பத்தா என்றறியும்
திடநிச்சயம் அளியும்.

4. சற்போதே எங்கள் நாட்களை
நடத்த எங்கள் ஆவியை
பலப்படுத்தி வாரும்;
பொல்லாத ஆசை இச்சையை
விலக்கி, அது எங்களை
விழத்திடாதே காரும்;
ஆள வாரா
வாழ்க்கை காலம் நிறைத்தாரும், மோட்சங்காட்டும்,
அத்தால் எங்கள் நெஞ்சை ஆற்றும். ஆமென்.

## 39

1 சுத்த ஆவி, என்னில் தங்கும்
நாளும் சுத்தன் ஆகவே;
பாவ அழுக்கெல்லாம் நீக்கும்
உமதாலயமாகவே;
என்னை நீர் சிங்காரியும்,
என்னில் வாசம்பண்ணிடும்.

2. சத்ய ஆவி, என்னில் தங்கும்
நானும் சத்யன் ஆகவே;
தேவபக்தி என்னில் என்றும்
வளர்ந்தேறச்செய்யுமே;
என்னைக் கைவிடாதேயும்,
ஆண்டுகொள்ளும் நித்தமும்.

3. வல்ல ஆவி, என்னில் தங்கும்
நானும் வல்லோன் ஆகவே;
சாத்தான் எப்போ சோதித்தாலும்
உம்மால் ஜெயங்கொள்ளவே
நீர் என் பக்கத்தில் இரும்,
என்னை பெலப்படுத்தும்.

4. நல்ல ஆவி, என்னில் தங்கும்
நானும் நல்லோன் ஆகவே;
மேட்டிமை, பகை, விரோதம்,
துர்க்குணங்கள் யாவுமே
என்னை விட்டகற்றிடும்,
நற்குணங்கள் நாட்டிடும்.

5. தேவ ஆவி, என்னில் தங்கும்,
நானும் உம்மில் தங்கவே;
ஜீவ பாதையில் நடத்தும்,
உம்மோடென்றும் வாழவே
விண்ணின் ஜோதி காண்பியும்,
மோட்சானந்தம் அருளும். ஆமென்



## தேவஸ்துதி.

### 40

1. உம்மைத் துதிக்கிறோம், யாவுக்கும் வல்ல பிதாவே
உம்மைப் பணிகிறோம், சுவாமி ராஜாதி ராஜாவே,
உமது மா - மகிமைக்காக, கர்த்தா,
ஸ்தோத்திரம் சொல்லுகிறோமே.

2. கிறிஸ்தே, இரங்கும், குமாரனே, கடன் செலுத்தி
லோகத்தின் பாவத்தை நீக்கிற தேவாட்டுக்குட்டி,
எங்கள் மனு - கேளும், பிதாவினது
ஆசனத்தோழா, இரங்கும்.

3. நித்ய பிதாவின் மகிமையில், இயேசுவே, நீரே
பரிசுத்தாவியோடேகமாய் ஆளுகிறீரே,
ஏகமாய் நீர் - அர்ச்சிக்கப்படுகிறீர்,
உன்னத கர்த்தரே, ஆமென். ஆமென்.

### 41

1. எல்லாம் படைத்த நமது
தயாபர பிதாவுக்கு
படைப்பின் செய்கைக்காகவே
புகழ் செலுத்தும், மாந்தரே.

2. உலோகத்தார்க்கு மீட்பரும்
கர்த்தாவுமாம் சுதனுக்கும்
ரட்சிப்பின் செய்கைக்காகவே
புகழ் செலுத்தும், மாந்தரே.

3. சுதனிடத்தில் நெஞ்சத்தை
அன்பாய்த் திருப்பி, நம்பிக்கை
உண்டாகச் செய்யும் ஆவிக்கே
புகழ் செலுத்தும், மாந்தரே.

4. படைப்பு, மீட்பு, சுத்தத்தை
நடத்தும் மா திரியேகரை
சிருஷ்டி யாவும் அன்போடு
புகழ்ந்து போற்றத்தக்கது. ஆமென்.

## 42

1. அதிசயங்களை எல்லா இடமும் செய்யும்
கர்த்தனை வாக்கினால் இருதயத்திலேயும்
துதியுங்கள், அவர் நாம் ஜெனித்ததானே
முதல் இம்மட்டுக்கும் இரக்கம் செய்தாரே.

2. மா தயாபரர் முடிய ஆதரித்து
நற்சமாதானத்தால் மகிழ்ச்சியை அளித்து,
தயையை நம்முட[illegible] எந்நேரமும்
ரட்சித்து, தீமையை எல்லாம் விலக்கவும்.

3. உன்னதமாகிய விண்மண்டலத்திலுள்ள,
மாறாத உண்மையும் தயையும் அன்புமுள்ள
பிதா, சுதனுக்கும், திவ்விய ஆவிக்கும்
எத்தேசகாலமும் துதி உண்டாகவும். ஆமென்.



## 43

1. எல்லாம் சிருஷ்டித்த நமது
தயாபர பிதாவுக்கு
அனந்த காலமாக
அல்லேலூயா, மகத்துவம்,
பெலன், துதி, இஸ்தோத்திரம்
உண்டாயிருப்பதாக;
பார்ப்பார், காப்பார்,
வல்லமையும் கிருபையும் அன்பும் என்றும்
அவர் செய்கையால் விளங்கும்.

2. இக்கீசருக்கு மீட்பரும்
பத்தாவுமாம் சுதனுக்கும்
ரட்சிப்பின் அன்புக்காக
அல்லேலூயா, புகழ்ச்சியும்,
அனந்த ராஜரீகமும்
உண்டாயிருப்பதாக;
பாவம், சாபம்,
எத்தத்தீங்கும் அத்தால் நீங்கும், என்றென்றைக்கும்
பாக்கியம் எல்லாம் கிடைக்கும்.

3. மனந்திருப்பி, எங்களை
பத்தாவாம் இயேசுவினண்டை
அழைத்து, சேர்த்தியாக
சிங்காரிக்கும் தேவாவிக்கும்
அல்லேலூயா, புகழ்ச்சியும்,
வணக்கமும் உண்டாக.
வாறு பார
வாழ்விலும் செல்கைத்தாலும் தேற்றி வாறார்,
அதின் முன்ருசியைத்தாறார்.

4. எல்லாச் சிஷ்டிகளாலேயும்
பிதா, குமாரன், ஆவிக்கும்
அனந்த காலமாக
அல்லேலூயா, மகத்துவம்,
பெலன், துதி, இஸ்தோத்திரம்
உண்டாயிருப்பதாக.
ஆமென், ஆமென்,
அவர் அர்த்தம், அருமத்தம், பரிசுத்தம்,
பரிசுத்தம், பரிசுத்தம். ஆமென்.

## 44

1. பூலோகத்தாரே, யாவரும்
கர்த்தாவில் களிகூருங்கள்;
ஆனந்தத்தோடே ஸ்தோத்திரம்
செலுத்தி பாட வாருங்கள்.

2. பராபரன் மெய்த்தேவனே;
அவரே நம்மை சிஷ்டித்தார்;
நாம் ஜனம், அவர் ராஜனே;
நாம் மந்தை, அவர் மேய்ப்பனார்.

3. கெம்பீரமாய் தேவாலய
பிரகாரம் வந்து சேருங்கள்;
மகிழ்ந்து அவர் திவ்விய
நல் நாமம் போற்றிப் பாடுங்கள்.

4. கர்த்தர் தயாளர், இரக்கம்
அவர்க்கு என்றும் உள்ளதே;
அவர் அநாதி சத்தியம்
மாறாமல் என்றும் நிற்குமே. ஆமென்.



## 45

1. ஆ, என்னில் நூறு வாயும் நாவும்
இருந்தால், கர்த்தர் எனக்கு
அன்பாகச் செய்த நன்றை யாவும்
அதுகளால் பிரசங்கித்து,
அநேகரோடே சொல்லுவேன்,
ஓயாத்தொனியாய்ப் பாடுவேன்.

2. என் சத்தம் வானமளவாக
போய் எட்டவேண்டுமென்கிறேன்;
கர்த்தாவைப் போற்ற வாஞ்சையாக
என் ரத்தம் பொங்க ஆசிப்பேன்,
ஒவ்வொரு மூச்சும் நாடியும்
துதியும் பாட்டுமாகவும்.

3. ஆ, என்னில் சோம்பலாயிராதே,
என் உள்ளமே, நன்றாய் விழி;
கர்த்தாவை நோக்கி ஓய்வில்லாதே
கருத்துடன் இஸ்தோத்திரி,
இஸ்தோத்திரி, என் ஆவியே,
இஸ்தோத்திரி, என் தேகமே.

4. என் நாவு பேசும் நாள் மட்டாக,
என் நெஞ்சசையும் மட்டுக்கும்
நான் உமதன்மையைப் பூரிப்பாக
இஸ்தோத்திரிப்பேன் நித்தமும்;
என் வாய் ஓய்ந்தாலும் ஓய்ந்திரேன்;
என் உள்ளத்தாலே போற்றுவேன்.

5. நான் மண்ணில் பாடும் ஏழையின்
துதியை ஏற்றுக்கொள்ளுமேன்;
நான் விண்ணில் தூதருக்கொப்பான
பிற்பாடு நன்றாய்ப் போற்றுவேன்;
அப்போ நான் வானோர் கும்புடன்
புதிய பாட்டாய்ப் பாடுவேன். ஆமென்.

## 46

1. மகா அதிசயங்களை
செய்தென்னைப் பூரிப்பித்து,
உபத்திரவத்தின் பாரத்தை
இரக்கமாய்க் கழித்து,
ரட்சிக்கிற தயாபரர்
இஸ்தோத்திரிக்கப்பட்டவர்;
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி.

2. கர்த்தாதி கர்த்தா, தேவரீர்
எல்லாத்தையும் நன்றாக
சிஷ்டித்து திட்டம்பண்ணினீர்,
என்றும்மைப் பணிவாக
விண் மண் கடல், ஆகாசத்து
சேனைமுகங்கள் போற்றுது;
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி.

3. சிஷ்டித்ததை பராபரன்
காப்பாற்றி, நித்தம் தாமே
அன்புள்ள பராமரிப்புடன்
நடத்த சித்தமாமே,
அவருட விசாரிப்பு
குறையில்லாததானது;
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி.



4. கர்த்தர் எக்காலும் தமது
ஜனத்தைக் கைவிடாரே,
கண்ணோக்கி, தேற்றி, கடாட்சித்து,
சகாயராய் வாறாரே,
இருளில் இடறவொட்டார்,
தாய் போல் கை தந்தழைக்கிறார்;
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி.

5. நாம் தேவசன்னிதியிலே
மகா மகிழ்ச்சியாக
வந்துன்னத கர்த்தாவையே
வணக்கம் செய்வோமாக;
பராபரனைப்போல ஆர்
எல்லாத்தையும் நன்றாக்கிறார்?
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி. ஆமென்.

## 47

1. என் ஆத்துமமே, விழி, உட்கருத்தாக
மகிமையுள்ள கர்த்தரைப் புகழுவாயாக,
வீணைகளே, சுரமண்டலமே,
போற்ற விழிப்பீர்களாக!

2. கர்த்தரைப்போற்று, விநோதமாய் உன்னை
சிஷ்டித்தார்,
மெத்த அதிசய மீட்பினால் உன்னை ரட்சித்தார்,
உன்னைத்தாமே - தமது கைகளிலே
ஏந்தி அனுக்கிரகித்தார்.

3. கர்த்தரைப்போற்று, எல்லாத்தையும்
சிறக்கமைத்தார்,
உன்னைக் காப்பாற்றி, சுகத்தைத்தந்தரவணைத்தார்,
மோசம்வந்தால் - தமது செட்டைகளால்
உன்னை எப்போதும் மறைப்பார்.

4. கர்த்தரைப்போற்று,அன்பாய்உன்னை ஆதரித்தார்
நேசவாய்க்கால்களைப்பாய்ச்சிஉன்மேல்வாரிவிட்டார்
கர்த்தரின்கை - வல்லது என்று நினை,
தயவாய் உன்னைச் சந்தித்தார்.

5. கர்த்தரைப்போற்று,என் உள்ளமே,ஜாக்கிரதையாக
சகல சிஷ்டியும் அவரைப் போற்றுவதாக,
ஆத்துமமே, உன் உபகாரியையே
போற்ற மறந்திராயாக. ஆமென்.

## 48

1. வாழ்க, தேவதேவனே, ஓ, வாழ்க, மைந்தனே,
வாழ்க, தேவ முத்திரையான
சுத்த ஆவியே, ஓ, வாழ்க,
ஏக திரித்துவமே!

சோபனம் சுபசோபனம்
சுபசோபனம் பாடுவோம்.
தோத்திரம் துதிதோத்திரம்
துதிதோத்திரம் சொல்லுவோம்.

2. வானம் பூமியும் படைத்த வல்ல தேவனே,
ஞான ஜீவனையடைய,
வானஜோதியால் நிறைய
ஞானம் தந்திடுவீர். சோபனம்

3. மானிடர் அழைக்க வந்த மானுவேலனே,
ஞான ராஜ்ஜியம் பலக்க,
ஞாலம் யாவுமே செழிக்க,
நாதனே, அருள்வீர். சோபனம்



4. ஜீவநாதனே, அருள்வீர் சேசத்தியையே,
பாவ சாபமே ஒழிய,
ஆவியின் கனி பெருக
ஆவியை அளிப்பீர். சோபனம்

5. வாழ்க, தேவதேவனே, ஓ, வாழ்க, மைந்தனே,
வாழ்க, தேவ முத்திரையான
சுத்த ஆவியே, ஓ, வாழ்க,
ஏக திரித்துவமே! சோபனம்
ஆமென்.

## 49

1. எல்லாருக்கும் மா உன்னத
கர்த்தாதி கர்த்தரே,
மெய்யான தேவமனிதன்
நீர் வாழ்க, யேசுவே.

2. தேவாதி தேவ மைந்தன் நீர்
பாதகர்க்காகவே
மண்ணில் இறங்கி மரித்தீர்,
நீர் வாழ்க, யேசுவே.

3. பசாசு, மாம்சம், உலகம்
இச்சத்துருக்களை
அழித்துப்போக மிதியும்,
நீர் வாழ்க, யேசுவே.

4. நீர் வென்றபடி நாங்களும்
வென்றேறிப் போகவே
அன்பாய்ப் பிதா முன் மன்றாடும்,
நீர் வாழ்க, யேசுவே.

5. விண்ணோர்களோடும் மனுஷரானோர்,
என்றைக்கும் வாழ்க்கையை
பாம வாசல் திறந்தோர்
நீர் வாழ்க, யேசுவே. ஆமென்.

## கிறிஸ்துவின் மாட்சிமை.

## 50

1. மாசில்லாமல் தூய்மையான
பளிங்கிலேயும் தெளிவான
சுத்தாங்க ஊற்றே, இயேசுவே,
கேருபீன்கள் தூய்ய சீரின்
பிரகாசம் யாவும் தேவரீரின்
முன்பாக மங்கிப்போகுதே,
என் பாவத்தின் இருள் அனைத்தும் உமக்குள்
தொலையட்டும்;
ஆ, இயேசுவே. நான உமக்கே
ஒப்பாய்ச் சுத்தாங்கமாகவும்.

2. மனசார சாவுமட்டும்
பிதாவின் சித்தமே ஆகட்டும்
என்றீர், உயர்ந்த இயேசுவே;
என் மனமும் தேவசித்தம்
என் தன்மை என்றதற்கு நித்தம்
கீழ்ப்பட்டடங்க, உம்மையே
பின்பற்ற தேவரீர் சகாயம் பண்ணுவீர்.
என் சாவிலும்,
என் இயேசுவே, நான் உமக்கே
ஒப்பாய் விழித்திருக்கவும்.



3. சீர் நிறைந்த செருமன்னோர்,
எல்லாரின் மேலும் தயவுள்ளோர்,
மகா அன்புள்ள இயேசுவே,
உம்மால் தீயோர்மேலேயும்
பகல் உதிக்கும், மாரி பெய்யும்,
பெரிய உபகாரியே,
ஆ, இந்த உமது குணம் என் மனது
அடையட்டும்,
என் இயேசுவே, நான் உமக்கே
ஒப்பாய் அன்பாய் இருக்கவும்.

4. தேவரீருடைய பிரிய
தெய்வீக சாயலை அணிய
இச்சிக்கிறேன், என் ஜீவனே,
அதற்குமதாவியாலும்
பலத்த சத்துவத்தினாலும்
சகாயம் செய்யும், இயேசுவே,
நான் உமக்கேற்ற கனிகொடுத்திட,
எக்காலமும்
நான் உம்மிலே நிலைக்கவே
சகாயம் கட்டளையிடும். ஆமென்.

## 51

1. என்னைத் தேவ சாயலான
சிருஷ்டியாக்கி, பின்பு நான்
கெட்டபோதென் மீட்பரான
கர்த்தரே, நீர் நேசம்தான்.
நேசமே, நான் என்றைக்கும்
உம்முடையோராகவும்.

2. என்னை அப்போதான் தெரிந்து,
காலம் நிறைவேறின
போதென் ரூபையே அணிந்து,
நர ஜென்மமாகிய
நேசமே, நான் என்றைக்கும்
உம்முடையோனாகவும்.

3. எனக்காகப் பாடுபட்டு,
சிக்ஷையுண்டாகிய
சாவால் பரமண்டலத்து
பாக்கியத்தைத் தேடின
நேசமே, நான் என்றைக்கும்
உம்முடையோனாகவும்.

4. எனக்கொளியும், வழியும்,
சத்தியமும், நித்திய
ஜீவனும், பரகதியும்,
சகலமுமாகிற
நேசமே, நான் என்றைக்கும்
உம்முடையோனாகவும்.

5. என் துர்ச்சிந்தைகளை அறுத்து,
என்னை வென்று, என்னுடை
உள்ளத்தை எல்லாம் இழுத்து
பரவசமாக்கின
நேசமே, நான் என்றைக்கும்
உம்முடையோனாகவும்.

6. என்றும் என்னை உண்மையாக
நேசித்து, பிதாவுட
பாரிசத்தில் எனக்காக
வேண்டிக்கொண்டிருக்கிற
நேசமே, நான் என்றைக்கும்
உம்முடையோனாகவும்.



7. என்னை மண்குழியை விட்டு
எழச் சொல்லி, பரம
ஜோதியால் அலங்கரித்து
சேர்க்கச் சித்தமாகிய
நேசமே, நான் என்றைக்கும்
உம்முடையோனாகவும். ஆமென்.

## 52

1. மகா அருளின் ஜோதியை
பாராட்டும் வெள்ளி நத்தனை
பிரகாசமாய் விளங்கும்
தாவீதின் மைந்தன் இயேசுவே,
நீர், நீர் என் மணவாளனே,
என் பொக்கிஷம், என் பங்கும்;
முற்றும், சுற்றும்
தயவாலும் உண்மையாலும் நீர் நிறைந்தோர்,
மேன்மை நாமமும் அடைந்தோர்.

2. என் முத்தே, என் கிரீடமே,
உம்மோடே, தேவபிள்ளையே,
நான் ஐக்கியமாக வேணும்;
உயர்ந்த ராஜா, உமது
சற்சுவிசேஷம் எனக்கு
அமிர்தம், பாலும் தேனும்;
ஓசன்னா, ஜய
தேவ ஆவியே, வாடாப்பூவே, நீரே யாவும்
ஜீவ அப்பமும் மெய்ப்பானமும்.

3 நேசமுள்ள பார்வையால்
அடியேனை நீர் நோக்கினால்,
பரம் வெளிச்சம் காட்டும்;
நீர் சொல்லும் இன்பச் சொற்களும்
தரும் சரீரம் இரத்தமும்
என் ஆத்துமத்தை ஆற்றும்;
நேர, நேர
கிட்டும் எனை நற்றிடைந் தத்தையும்,
அன்புமாய் அரவணையும்.

4. மகிழ்வேன், என் சிநேகிதர்
அல்பா ஓமேகா என்பவர்,
என் நேசர் ஆதியந்தம்;
இனி மோட்சானந்தத்திலே
நான் அவரண்டை சேர்வேனே,
என் பாக்கியம் அனந்தம்.
ஆமென், ஆமென்,
வா, ரட்சிப்பே, வா, கெலிப்பே, உனக்காக
வாஞ்சிப்பாயேன், சேர்வாயாக. ஆமென்

## 53

1. பிரியமான இயேசுவே,
என் நெஞ்சைத் தயவாக
நீர் பூரிப்பாக்கி, என்னிலே
பலத்த தேற்றலாக
தெய்வீக அன்பை ஊற்றிய
படியினால், நான் உம்முட
துதியைச் சொல்வேனாக.

2. நீர் என் வெளிச்சம், உம்மால் நான்
திறந்த முகமாக
பிதாவின் இன்ப நெஞ்சைத்தான்
என் ஆத்துமத்துக்காக
காண்கிறேன், ஆ, தயவாய்
நீர் என்னை வாக்கா ஜோதியாய்
பிரகாசிப்பிப்பீராக.



3. நீர் மோட்சத்துக்குப் போம் வழி,
இதற்குள்ளான ஆரும்
தப்பாய்ப் போகான், இதே சரி,
விலகினோரெல்லாரும்
அழிந்துபோனவர்கள்தான்,
வழியாம் சுவாமி, உம்மில் நான்
நிலைக்க என்னைக் காரும்.

4. நீர் சத்தியம், நான் உம்மையே
தெரிந்துகொண்டிருப்பேன்,
பொருளும் சாரமும் நீரே,
வீண் மாய்கையை வெறுப்பேன்,
உம்மாலே பாக்கியம் வரும்,
மெய்யே, என் நெஞ்சை என்றைக்கும்
நான் உமக்கே கொடுப்பேன்,

5. நீர் ஜீவன், என்னை நீர், நீரே
தரும் பெலன் எழட்டும்,
இடைவில்லா அக்கோரமே
என் நெஞ்சை நீர் நடத்தும்;
அப்போது வாழ்ந்து தேறுமே,
இத்தேவ ஜீவன் என்னிலே
மென்மேல் பெலன் கொள்ளட்டும். ஆமென்.

## 54

1. நீர் வானத்தப்பம், இயேசுவே,
பசி உம்மாலே ஆறும்,
நான் போம் வனாந்தரத்திலே
என் மனதும்மை நாடும்;
பிதாவின் ஈவாம் மன்னாவே,
நீர் என்னை வேறே இச்சைக்கே
விலக்கமாகக் காரும்.

2. நீர் ஜீவ ஊற்று, உம்மிலே
குடித்தால் தாகம் தீரும்,
நீர் தாற ஈவு நித்தமே
சுரக்கிற தண்ணீரும்;
ஆ, என்னை நம்பிக் கடாட்சித்து
இரும், அத்தால் உண்டாவது
ஆரோக்கியம் நற்சீரும்.

3. நீர் என்னை ஜோடிக்கும் உடை,
நீர் என் அலங்கரிப்பு;
நாம் உம்முடைய நீதியை
அணிவதென் இச்சிப்பு;
பூலோகத்தின் சிங்காரமாம்
விநோத சம்பிரமம் எல்லாம்
கனமில்லா தரிப்பு.

4. நீர் நான் சுகித்துத் தங்கிற
அரண்மனையும் வீடும்;
புசல் அடித்தும் விருதா,
பேய் வீணாய் என்னைச் சீறும்;
நான் உம்மில் நிற்பேன், ஆசையால்
கெடேன், பொல்லார் எழும்பினால்
நீர் என் வழக்கைத் தீரும். ஆமென்.

## 55

1. ஆ, இயேசுவே, என் மேய்ப்பர் நீர்,
என் மேய்ச்சலும் நீர்தாமே;
காணாமற்போன என்னை நீர்
மா அன்பாய் மீட்டோராமே;
இனி இவ்வாட்டை என்றைக்கும்
நீர் சிதறவொட்டாதேயும்,
நான் உம்முடையோனே.



2. நீர் என்றைக்கும் நான் வாஞ்சையாய்
பணிந்துகொள்ளும் பத்தா;
நீர் என் ஆசாரியருமாய்
பலிபோல் மாண்ட கர்த்தா;
நீர் என்னை ஆளும் ராஜாவும்;
உம்மாலே எந்தப் போரிலும்
ஜெயிப்பேன், மா சமர்த்தா.

3. நீர் உத்தம சிநேகிதர்,
என் நெஞ்சம்மண்டை சாயும்;
நீர் உண்மையாம் சகோதரர்,
நீர் என்னைப் பார்க்கும் தாயும்;
நீர் நோயில் பரிகாரியே,
உம்மாலே ஆறிப்போகுதே
என் காயமும் விடாயும்.

4. படையில் நீர் சேனாபதி,
வில், கேடகம், சீராவும்;
கருங்கடலில் நீர் வழி
காண்பிக்கும் சமுக்காவும்;
எழும்பும் கொந்தளிப்பிலே
நீர் என் நங்கூரம், இயேசுவே,
நான் உட்படும் குடாவும். ஆமென்.

## 56

1. நீர் ஜீவனின் விருட்சமும்,
நீர் செல்வங்கள் பொழியும்
பூங்காவனமும், என்றைக்கும்
சுகம் தரும் கனியும்;
முள்ளான பள்ளத்தாக்கிலே
என் ஆவிக்கு நீர், இயேசுவே,
குளிர்ந்த பூஞ்செடியும்.

2. நீர் ராவில் என் நட்சத்திரம்,
இருளில் என் தீவட்டி;
குறைவில் என் ஐசுவரியம்,
என் தாழ்வில் என் உயர்த்தி;
கசப்பிலே என் மதுரம்,
நான் தொய்ந்தால் மீண்டும் என் மனம்
பெலக்க நீர் என் சக்தி.

3. நீர் துக்கத்தில் என் ஆறுதல்,
நீர் வாழ்வில் என் களிப்பு;
நீர் வேலையில் என் அலுவல்,
பகலில் என் சிந்திப்பு;
நீர் ராவில் என் அடைக்கலம்,
நீர் தூக்கத்தில் என் சொப்பனம்,
விழிப்பில் என் குறிப்பு.

4. ஆ, ஒப்பில்லாத அழகே,
நான் எத்தனை சொன்னாலும்
என் நாவினால் முடியாதே,
நான் என்ன வாஞ்சித்தாலும்,
அதெல்லாம் நீரே, இயேசுவே;
ஆ, தயவுள்ள நேசரே,
நீர் என்றும் என்னை ஆளும். ஆமென்.

## 57

1. பாவியே, உன் ரட்சகர்,
சாவை வென்ற நாயகர்,
என்னில் அன்புகூர்வாயா
என்னும் வார்த்தை கேட்குதா?



2. சிந்தின என் ரத்தத்தால்
சொந்தமானாய், ஆகையால்
என்னில் அன்புகூராயோ
என்னும் நேசர் சேராயோ?

3. உன்னை மீட்க மரித்தேன்,
என்னைப் புசிக்கத் தாறேன்,
உன்தன் நெஞ்சைத் தாராயோ
என்கிறார் பின் செல்லாயோ?

4. பாவப்பாரத்தால் நொந்தும்,
தேவசாபம் அடைந்தும்,
அழைப்பைத் தள்ளாதவர்
இளைப்பாறல் பெறுவர்.

5. பாவி சாக விரும்பார்,
பாவிக்காய் மன்றாடுறார்,
அவர் பாடு, மரணம்
பாவத்தின் நிவாரணம்.

6. தேவா, உம்மின் பொற்பாதம்
பாவி என் அடைக்கலம்;
தேவரீரை நேசிப்பேன்,
சாவுமட்டும் பின்செல்வேன். ஆமென்.

## 58

1. கதிக்கெல்லாம் மேலான
கதியாம் இயேசுவே,
ஒப்பற்ற அந்தமான
பத்தாவே, உமக்கே
என் நெஞ்சை வாஞ்சையாலே
ஒப்புக்கொடுக்கிறேன்;
என், உமது நோவாலே
ஆரோக்கியமானேன்.

2. ஆ, உமது குளிர்ந்த
முகத்தைக் காண்பியும்,
என் மனதில் மிருந்த
அன்பாய் ஒளி வீசும்;
நீர் என்னண்டை தரித்தால்,
வாழ்வேன் என் ஜீவனே;
அடியேனை நீர் விட்டால்,
வாழ்வொன்றும் இல்லையே.

3. இதோ, பிழைக்க சாக
என் நெஞ்சு உமக்கு
கொடுத்திருப்பதாக,
நீரே என் பூரிப்பு;
ஆம், உம்மையன்றி வாழும்
களிப்பைப் பார்க்க நான்
உம்மோடடையும் பாடும்,
இக்கட்டும் வாசி தான்.

4. மண் மகிமையை யாவும்
வெறுப்பாய்ப் பார்க்கிறேன்,
என் ஆவி உம்மைத் தாவும்,
பரத்தை நோக்குவேன்;
என் இயேசுவே, நீர் தாமே
என் செல்வமானவர்,
உம்மால் மெய் வாழ்வுண்டாமே,
மண் வாழ்வெல்லாம் பதர்.

5. என் பொழுதே, உதியும்;
ஆ, என்னை உம்மண்டை
அழைக்கத் தீவிரியும்.
நான் இந்த லோகத்தை
சந்தோஷமாக விட்டு
போவேன், என் ஜீவனே,
உம்மண்டையில் சுகித்து
இருப்பேன், கர்த்தரே.

ஆமென்.



## 59

1. ஆ, மறுமைக்குப் பின்னையும்
நான் கிட்டி வந்ததாலே
நான் உம்மைப் போற்றி, இப்போதும்
புதிய வாஞ்சையாலே
உம்மண்டைக்கு வாறேன், நீரே
எக்கிருபைக்கும் ஊற்றாமே,
என் ஜீவனும் நீர்தாமே.

2. நீர் என்னிலும் நான் உம்மிலும்
இருக்கும்படியாக;
நான் நேசக்கட்டால் என்றைக்கும்
உம்மோடே ஐக்கமாக
இணைக்கப்பட்டிருந்தாலும்,
அதிகமாய் எந்நேரமும்
நான் உம்மைப் பற்றிக்கொள்வேன்.

3. கைகள் நெகிழ்ந்து, முழங்கால்
தளர்ந்தால், நீர் அன்பாக
என் விசுவாசத்துக்கும்மால்
பெலன் கொடுப்பீராக;
அப்போ நான் புது ஊக்கமாய்
மோட்சானந்தத்துக்கு நேராய்
நடந்து ஏறிப்போறேன்.

4. என் நெஞ்சே, பயமற்றிரு;
நீ விசுவாசத்தாலே
பலத்து, உன்னை உலகு
தன் இச்சைகளிலே
வாவென்றழைத்தால், பின்னையும்
நீ இயேசுவுக்கு முழுதும்
ஆதீனமாவாயாக.

5. என் ஆத்துமம், ஆ, இயேசுவே,
அப்போதே உம்மண்டைக்கு
பறந்து ஏறிப்போகசுதே;
நான் இனி மறுமைக்கு
அடுத்தவன், இவ்வுலகு
என் ஸ்தானம் அல்ல, இம்மைக்கு
இனி நான் பரதேசி. ஆமென்.

## 60

1. ஞானப் பத்தாவே,
பாவர் கேட்டிலே
சாரும் என்னைத் தப்புவித்து
சேர்த்த உம்மை நான் துதித்து
போற்ற வேணுமே,
ஞானப் பத்தாவே.

2. அன்பின் ரூபு நீர்,
என்னைத் தேவரீர்
அன்பாய்ப் பார்த்தால், அதிலே
என்னை மெய் மகிழ்ச்சியாலே
பூரிப்பாக்கிறீர்,
அன்பின் ரூபு நீர்.

3. நீர் என் கன்மலை,
நேசப் பத்தியை
உம்மில் ஊன்றக் கெட்டியாக்கும்,
இது உம்மை நெஞ்சம் வாக்கும்
கேட்கும் கிருபை,
நீர் என் கன்மலை.

4. உம்மைப் பற்றினேன்,
என்றைக்கும் விடேன்;
உம்மை விசுவாசத்தாலே
நான் தரித்தேன், ஆகையாலே
லோகத்தை நாடேன்,
உம்மைப் பற்றினேன்.



துக்க நாளிலே
என்னை, இயேசுவே,
நீர் அனுபவித்த பாடும்
நோவும் பார்த்தன்பாய் தற்காரும்,
ஆறுதல் நீரே
துக்க நாளிலே.

6. என் கிரீடமே,
சுவாமி, என்னிலே
உமக்குப் புகழ்ச்சியாக
யாவும் சீர்ப்படுவதாக,
ஆமென், இயேசுவே,
என் கிரீடமே. ஆமென்.

# கிறிஸ்தவ நம்பிக்கை.

## 61

1. ஏன் சலிப்பேன், கிறிஸ்து நிற்பார்,
இவ்வித பரம
முத்தை ஆர் பறிப்பார்?
எனக்கங்கே வைத்திருக்கும்
மோட்சத்தை எவன் கை
கொள்ளையிட்டெடுக்கும்?

2. ஆஸ்தி, ஜீவன், தேகம், ரத்தம்,
தம்பிரான் கையில் நான்
ஈவாய்ப் பெற்ற தத்தம்;
அவர் மீளவும் எடுத்தும்,
பாக்கியம்; என் மனம்
தோத்திரம் செலுத்தும்.

3. மா சுமை என் மனதுக்கு
வரச்சே, நெஞ்சிலே
துக்கம் என்னைத் தாக்கு?
அதை வரப்பண்ணும் கர்த்தர்
தயவாய், லேசமாய்
நீக்கவும் சமர்த்தர்.

4. பல இன்பத்தை இம்மட்டும்
தந்தாரே, வாழ்த்தேனே,
துன்பமும் வரட்டும்;
அவர் தண்டனைகள் சாது;
அவர் கை அத்தனை
கூர்மையாய் வெட்டாது.

5. என்னுடையோர் நீர், கர்த்தாவே,
உம்மையே நெஞ்சிலே
பற்றினேன், பத்தாவே;
என்னைச் சாகும்போதன்பாக
மோட்சத்து வாழ்வுக்கு
நீர் அழைப்பீராக! ஆமென்.

## 62

1. என் மேய்ப்பர் கர்த்தரானவர்,
நன்றாகக் காத்து வாறார்;
அனைத்தையும் என் ரட்சகர்
குறைவில்லாமல் தாறார்;
எல்லாத்திலும் ருசிகர
தெய்வீக வார்த்தையினுட
நல் மேய்ச்சல் எனக்குண்டு.



2. நீரோடை கால்வாய்களை
எனக்கு அவர் காட்டி,
என் ஆத்துமத்தின் தாகத்தை
அத்தால் நன்றாக ஆற்றி,
தாம் இயேசு என்னப்பட்டதில்
அடியானை நற்பாதையில்
நேரே நடத்தி வாறார்.

3. ஓர் வேளை ஜோதியின்றியே
நான் மரணக்கெடியின்
இருண்ட பள்ளத்தாக்கிலே
நடந்தும், அவதியின்
பொல்லாப்புக்குப் பயப்படேன்,
நீர் நீட்டும் கோலைப் பற்றுவேன்,
அது வழியைக் காட்டும்.

4. அடியேனுக்கோர் பந்தியை
பகைஞர்க்கெதிராக
வைத்தெண்ணெயால் என் சிரசை
மகா கடாட்சமாக
நீர் அபிஷேகம் செய்கிறீர்,
அடியேனை நீர் மறவீர்,
என் பாத்திரம் நிரம்பும்.

5. என் ஜீவனுள்ளமட்டுக்கும்
தேவரீரை நான் உணரும்
படிக்கு, என்னை நன்மையும்
கடாட்சமும் தொடரும்;
கர்த்தாவின் வீட்டில் இங்கேயும்,
பிற்பாடு அங்கே என்றைக்கும்
நிலைத்துக்கொண்டிருப்பேன். ஆமென்.

## 63

1. கர்த்தாவை நம்புவோரை
ஒருக்காலும் கைவிடார்,
பொல்லாரின் சீறுமாறை
வீணாக்கிப்போடுவார்.
தன் மார்க்கரைப் பலத்த
கையால் தயாபரர்
ரட்சித்து, தாழ்ச்சியற்ற
அன்பாய் விசாரிப்பார்.

2. கர்த்தாவின் சித்தத்துக்கு
கீழ்ப்பட்டடங்குவேன்,
அப்போ நான் ஜீவனுக்கு
நேரே நடக்கிறேன்;
லௌகீக வாழ்வின் பாதை
வேண்டாம், நான் இயேசுவை
பின்சென்று, இங்கே வாதை
சகித்தால் தாவினே.

3. கசப்பும் கர்த்தராலே
வரும், நான் பின்வாங்கேன்;
ஜெபத்தின் ஆசையாலே
விண்ணப்பம் பண்ணுவேன்,
அப்போது தயவாக
காப்பாரே, கைவிடார்;
இக்கட்டு பெரிதாக
போம்போது தேற்றுவார்.

4. என் இயேசுவை நான் பற்றி
இருக்கிறேன், அவர்
என் சாபத்தை அகற்றி
விலக்கும் ரட்சகர்;
நான் தப்ப எனக்காக
தம் ரத்தம் சிந்தினர்,
அத்தன்மை உண்மையாக
ஆர் என்னை கெலிப்பார்?



5. என் ஜெயப்பாட்டித்தோடே
முடியும், இயேசுவே,
அடியேனுக்கப்போடே
மோட்சானந்தத்திலே
சுதந்திரம் அளியும்,
அப்போ பிழைக்கிறேன்,
எல்லாவித கதியும்
அடைந்து வாழுவேன். ஆமென்.

## 64

1. இயேசுகிறிஸ்து என்கிற
ஆட்டுக்குட்டி நம்மை மீட்பார்;
சிலுவையில் நம்முடை
பாவத்தின் கடனைத் தீர்த்தார்,
மனஸ்தாபத்தால் தன்னாலும்
நெஞ்சு கிறிஸ்தின் சாவால் ஆறும்.

2. நாம் பகைஞராகச்சே
கிறிஸ்து நமக்காய் மரித்தார்,
இத்தால் தமதன்பையே
தம்பிரான் விளங்குவித்தார்;
கிறிஸ்தால் நீதியாக்கப்பட்டோர்
என்றென்றைக்கும் சாபமற்றோர்.

3. நாம் பகைஞராம் அப்போ
சுவாமி அவர் சாவுக்காக
தயவானால், இப்போவோ
எத்தனை அதிகமாக
நாம் சேர்ப்பட்டபின் அப்பாலே
வாழ்வோம் அவர் ஜீவனாலே!

நாம் அவருக்குள்ளேயும்
அவர் நமக்குள்ளுமாமே,
அவராலே முற்றிலும்
பாவத் தீங்கழிவதாமே;
வெகு மேன்மையை அடைந்தோம்,
தேவமைந்தராய் அமைந்தோம்.

5. ஆ, பிதாவே, உமக்கு
ஸ்தோத்திரம், கனம், துதியும்;
இன்னம் பாவமானது
கண்டால் துயரம் அளியும்;
உமதாவியால் நன்றாக
யாவும் சுத்தமாவதாக. ஆமென்.

## 65

1. இவ்வேழைக்காகப் பலியான
என் இயேசுவினுடைய தயை
நான் என்றும் நிற்கத்தக்கதான
உறுதியான கன்மலை;
விண் மண் ஒழிந்தும், இதுவே
அசைவில்லாமல் நிற்குமே.

2. அவர் தயை என்றைக்கும் நிற்கும்,
அதளவற்றிருக்குமே,
அவர் கை நரரை ரட்சிக்கும்
படிக்கு நீட்டப்பட்டதே,
வராதே போனால், அவர்க்கு
மா அங்கலாய்ப்பிருக்குது.

3. ரட்சிக்கப்படுவதற்காக
இரக்கமாய்த் தயாபரர்
நரரின் மனதை நன்றாக
தட்டிக்கொண்டே யிருப்பவர்;
அதேனென்றால் இரட்சகர்
அனைவரையும் மீட்டவர்.



அவர் அனைவருக்குமாக
மீட்கும் பொருளைத் தந்தாரே,
குணப்படும் எல்லாருக்காக
பாவமன்னிப்புண்டாகுமே;
ஆ, இயேசுவால் உண்டானது
அளவில்லாத தயவு.

5. நான் உயிரோடிருக்கும் மட்டும்
நீர், கர்த்தரே, என் நம்பிக்கை;
என் விசுவாசம் உம்மைப் போற்றும்,
இதே என் பிரதிக்கினை;
ஆம், என் அடைக்கலம் நீரே,
இரக்கமுள்ள இயேசுவே. ஆமென்.

## 66

1. நான் உம்மை முழு மனதாலே
நேசிப்பேன், என் இயேசுவே;
நான் உம்மை நித்தம் வாஞ்சையாலே
பின்செல்லுவேன், என் ஜீவனே;
குலை பதைக்கும் மட்டும் நீர்
என் நெஞ்சில் தங்கிடீர்.

2. நான் உம்மை நேசிப்பேன், நீர்தாமே
என் உத்தம சிநேகிதர்;
நீர் தேவ ஆட்டுக்குட்டியாமே,
நீர் என் பத்தாவுமானவர்;
நான் என்றும் உம்மை நேசிப்பேன்,
தினமும் போற்றுவேன்.

3. ஆ, அழகே, என் மீட்புக்காக
உதித்த தேவமைந்தனே,
நான் உம்மை இத்தனை நாளாக
அறிந்ததில்லை என்பதே
இப்போதென் ஆத்துமத்துக்கு
நோவாயிருக்குது.

4. என் கண்கள் இன்பமாய்க் கண்ணீரை
உதிர்க்கவும், எந்நேரமும
என் மனவாஞ்சை தேவரீரை
நேசத்தாலே தாவவும்,
நீர் என்னை அன்பாய் ஈர்த்தருளும்
எழுப்பும், இயேசுவே.

5. நான் உம்மை ஜீவனுள்ள நாளும்
நேசிப்பேன், என் கர்த்தரே;
நான் உம்மை அவதி வந்தாலும்
நேசிப்பேன், என் இயேசுவே;
குலை பதைக்கும் மட்டும் நீர்
என் நெஞ்சில் தங்கிடீர்.

ஆமென்.

## 67

1. கர்த்தாவை நல்ல பக்தியாலே
எப்போதும் நம்பும் நீதிமான்
எத்திக்கிலேயும் அவராலே
அன்பாய்க் காப்பாற்றப்படுவான்;
உன்னதமான கர்த்தரை
சார்ந்தோருக்கவர் கன்மலை.

2. உன் காரியத்தை நலமாக
திருப்ப வல்லவருக்கு
நீ அதை ஒப்புவிப்பாயாக,
விசாரிப்பார், அமர்ந்திரு;
மா திட்டமாய் தயாபரர்
உன் தாழ்ச்சியை அறிந்தவர்.

3. நீ கர்த்தரால் கைவிடப்பட்டோன்
என்றாபத்தில் நினையாதே,
எப்போதும் பாடும் நோவுமற்றோன்
பிரியனென்றும் எண்ணாதே;
அநேக காரியத்துக்கு
பின் மாறுதல் உண்டாகுது.



4. நிதியுள்ளோனை ஏழையாக்கி,
மகா எளியவனையோ
திரவிய சம்பன்னனாக்கி
உயர்த்த சுவாமிக்கரிதோ?
தாழ்வாக்குவார், உயர்த்துவார்,
அடிக்கிறார், அணைக்கிறார்.

5. மன்றாடிப் பாடி கிறிஸ்தோனாக
நடந்துகொண்டுன் வேலையை
நீ உண்மையோடே செய்வாயாக,
அப்போ தேவாசீர்வாதத்தை
திரும்பக் காண்பாய்; நீதிமான்
கர்த்தரால் கைவிடப்படான்.

ஆமென்.

## 68

1. சேதமற யாவுமற
கர்த்தர் பராமரிக்கிறார்,
காற்றடித்தும், கொந்தளித்தும
இயேசுவை நீ பற்றப் பார்.

2. இயேசு பாரார், அவர் காரார்,
தூங்கிறார் என்றெண்ணாதே;
கலங்காதே, தவிக்காதே,
நம்பினோனை விடாரே.

3. கண்மூடாத, உறங்காத
உன் கர்த்தாவைப் பற்றி, நீ
அவர்தாமே காப்பாராமே
என்று அவரைப் பணி.

4. உன் அன்பான கர்த்தரான
இயேசுவின் மிலாறை நீ
பகையாமல், வெறுக்காமல்
முத்திசெய், அதே சரி.

5. சீரில்லாத, உன் ஆகாத
மனதன்னை ஆள்வது
நல்லதல்ல, அதுக்கல்ல,
கர்த்தருக்குக் கீழ்ப்படி.

6. கிறிஸ்துவுக்கு துரோகஞ் செய்து
சிலுவையை வெறுத்தோர்
வெட்கத்தோடும் திகிலோடும்
இடப்பக்கத்தில் நிற்போர்.

7. சிலுவையை ஏற்று, அதை
தாங்கியே பின்சென்றவர்
இயேசுவாலே கிரீடத்தாலே
ஜோடிக்கப்படுபவர்.

8. ஆமென், நித்தம் தேவசித்தம்
செய்யப்பட யாவையும்
நீர் குறித்து, நீர் கற்பித்து,
நீர் நடத்தியருளும். ஆமென்.

## 69

1. கர்த்தர் என் வசமானால்
ஏன் பயப்படுவேன்?
உபத்ரவம் உண்டானால்
ஜெயம்பண்ணுகிறேன்,
அப்போதென் மேலே வாற
பொல்லா வினை எல்லாம்
ஜெயிக்கப்பட்டுத் தாழ
விழுந்தவத்தமாம்.



2. நான் நிற்கும் அஸ்திபாரம்
என் இயேசு, இவரால்
மிகுந்த உபகாரம்
வரும்; ஆகையினால்
என் ஆஸ்தி அவர் தானே,
என் ஜீவனின் பெலன்
அவர் தான், என்னில் நானே
ஒன்றுமில்லாதவன்.

3. என் நீதி இயேசு தானே;
அவர் இல்லாவிட்டால்
பிதாவுக்கு முன் நானே
நான் பாவியானதால்
விழிக்கவும் கூடாதே,
என் இயேசுவன்றியே
ரட்சிப்பு கிடையாதே,
என் மீட்பர் அவரே.

4. என் சாவு இயேசுவாலே
விழுங்கப்பட்டது;
இவர் இரத்தத்தாலே
என் பாவக்கேட்டுக்கு
நான் முற்றும் நீங்கலானேன்,
நான் நியாயத்தீர்ப்புக்கும்
பயப்படாதோனானேன்,
வாழ்வெனக்கு வரும்.

5. என் மனது களிக்கும்,
நான் துக்கமாவேனோ?
என் இயேசென்மேல் உதிக்கும்
பகலோன் அல்லவோ?
பரத்தில் வைக்கப்பட்ட
அனந்த பூரிப்பு
என் ஆவிக்குப் பலத்த
திடன் உண்டாக்குது. ஆமென்.

## 70

1. நான் தேவரீரை, கர்த்தரே,
துதிப்பேன், அடியேன்
எல்லாரின் முன்னும் உம்மையே
அறிக்கை பண்ணுவேன்.

2. ஆ, எந்தப் பாக்கியங்களும்
உம்மால் தான் வருதே,
உண்டான எந்த நன்மைக்கும்
ஊற்றானவர் நீரே.

3. உம்மாலே வருஷாந்தரம்
நன்றாய்ப் பிழைக்கிறோம்;
உம்மாலே நாசன் விக்கினம்
வந்தாலும், தப்பினோம்.

4. பாவிகளான எங்களை
கறுக்காய்த் தண்டியீர்,
உம்முடையோரின் பாவத்தை
அன்பாய் மன்னிக்கிறீர்.

5. இக்கட்டில் நாங்கள் கூப்பிட்டால்,
நீர் கேட்டிரங்குவீர்,
நீர் எங்களை மாதயவால்
ரட்சித்துத் தாங்கிறீர்.

6. அடியார் அழுகைக்கெல்லாம்
செவிகொடுத்து, நீர்
எங்கள் கண்ணீர்களை எல்லாம்
எண்ணி இருக்கிறீர்.



7. ஆனந்த வாழ்வையும் இனி
கொடுக்கப் போறீரே;
அடியாருக்கு அக்கதி
அப்போதுண்டாகுமே. ஆமென்.

## 71

1. ஆ, களிகூர்ந்து பூரித்து
மகிழ், என் உள்ளமே,
பராபரன் தான் உனது
அனந்த பங்காமே.

2. அவர் உன் பங்கு, உன் பெலன்,
உன் கேடகம், நன்றாய்
திடப்படுத்தும் உன் திடன்,
நீ கைவிடப்படாய்.

3. உன் நெஞ்சு ராவும் பகலும்
துக்கிப்பதென்ன, நீ
உன் கவலை அனைத்தையும்
கர்த்தாவுக்கொப்புவி.

4. கர்த்தாவின் ஆளுகை எல்லாம்
தப்பற்றதல்லவோ?
ஆம், அவர் செய்கிறதெல்லாம்
நன்றாய் முடியாதோ?

5. ஆகையினால் கர்த்தாவுக்கு
நீ பிள்ளைப்பத்தியாய்
எப்போதும் கீழ்ப்படிந்திரு,
அப்போதான் நீ வாழ்வாய். ஆமென்.

## 72

1. பூலோக செல்விக்கையும் பொன்னும்
மிஞ்சுக்கும் எனக்கு வேண்டாம்;
என் ஆவிக்காகும் நன்மை ஒன்றும்
இங்கில்லை, யாவும் மாய்கையாம்.
பொருளல்லாததை நாடேன்,
நான் இயேசுவை நேசிப்பேன்.

2. என் பொன்னும் செல்வமும் கதியும்
என் பொக்கிஷமும் அவரே;
என் ஆவி அவர்முன் பணியும்,
ஆம், அவர் என் மகிழ்ச்சியே.
பொருளல்லாததை நாடேன்,
நான் இயேசுவை நேசிப்பேன்.

3. என் ஜீவனும் என் ஆவிக்கான
அடைக்கலமும் அவரே;
நான் என்றைக்கும் பிழைப்பதான
ரட்சிப்பு அவரால் உண்டே.
பொருளல்லாததை நாடேன்,
நான் இயேசுவை நேசிப்பேன்.

4. தம்மோடே என்னையும் பரத்தில்
மா மேன்மையாய் உயர்த்துவார்,
அடியேனுக்கு அவ்விடத்தில்
வாசஸ்தலம் சம்பாதித்தார்.
பொருளல்லாததை நாடேன்,
நான் இயேசுவை நேசிப்பேன்.

5. நான் இங்கே தங்கிறவரையில்
தினம் உபத்திரவப்பட்டும்,
பிற்பாடு அங்கே மகிமையில்
அனந்த பூரிப்பு வரும்.
பொருளல்லாததை நாடேன்,
நான் இயேசுவை நேசிப்பேன். ஆமென்



## 73

1. சீர்கெட்ட லோகமே,
உன் வாழ்வு எனக்கேது?
என் இயேசு என் கதி.
நான் உன்னைச் சார்வதேது?
என் ஆஸ்தி இயேசு தான்,
என் செல்வம் அவரே,
உன் குப்பையை நாடேன்,
சீர் கெட்ட லோகமே.

2. லௌகீக வாழ்வெல்லாம்
புகையைப்போல் கழியும்,
நிழலைப்போலே போம்,
கதையைப்போல் முடியும்;
என் இயேசு நித்தியர்,
ஒர்க்காலும் மாறாரே,
நீ எனக்கு வேண்டாம்,
சீர் கெட்ட லோகமே.

3. பூலோகத்தாருக்கு
மகிழ்ச்சியும் மினுக்கும்
செருக்கும் மோட்சம்போல்
சந்தோஷமாயிருக்கும்;
என் மோட்சம் நித்தியம்,
என் இன்பம் கர்த்தரே.
உன் செல்வம் மாறாது,
சீர் கெட்ட லோகமே.

4. ஓர் நிமிஷத்திலே
பூலோக வாழ்வழியும்,
சாவணுகில் எல்லா
மகிழ்ச்சியும் முடியும்;
ஆனால் நான் பாக்கியன்,
என் வாழ்வு இயேசுவே,
உன் செல்வத்தைத் தேடேன்,
சீர்கெட்ட லோகமே.

5. என் இயேசு என் கதி,
என் இயேசு என் களிப்பு,
என் இயேசு என் கனம்,
என் இயேசு என் ரட்சிப்பு;
என் ஜீவன் அவரே,
என் மோட்சம் அவரே,
நீ சாரமற்றது,
சீர் கெட்ட லோகமே. ஆமென்

## 74

1. உன் நெஞ்சிலே உண்டான
விசாரங்களை நீ
கர்த்தாவின் உண்மையான
கரத்துக்கொப்புவி;
விண் மண்ணை ஆண்டிருக்கும்
பர தயாபரர்
உன் காரியங்களுக்கும்
வழி உண்டாக்குவார்.

2. ஜெயமடைந்து வாழ
கர்த்தாவைப் பிள்ளைபோல்
நீ நம்பி, மனதார
பணிந்து பற்றிக்கொள்;
உன் கவலைகளாலே
பயம் ரட்டிக்குது:
வேண்டாம், ஜெபத்தினாலே
நீ வேண்டிக்கொண்டிரு.

3. இக்கட்டுகளினாலே
கலங்கினோனே, நீ
திடன் கொள், கர்த்தராலே
இக்கட்டின் ராத்திரி
சந்தோஷமாக மாறும்,
சற்றே பொறுத்திரு;
நீ பூரிப்பாய்க் கொண்டாடும்
நாள் வரப்போகுது.



4. உன் கவலைகளுக்கு
இன்றே விடைகொடு,
இனி விசாரத்துக்கு
இடம் கொடாதிரு;
நீ ஆளும் தேவனல்ல,
நீ பூச்சி என்றறி;
சருவத்துக்கும் வல்ல
கர்த்தர் அதிபதி.

5. கர்த்தாவே, எங்களுக்கு
எல்லா இக்கட்டிலும்
ரட்சிப்பளிப்பதற்கு
துணையாய் வந்திரும்;
ஆ, எங்களைத் திடத்தும்,
பரகதிக்குப் போம்
வழியிலும் நடத்தும்,
அப்போ பயப்படோம். ஆமென்.

## 75

1. கர்த்தாவின் செயல் நல்லது;
தப்பற்ற நியாயமாக
விளங்கப்போற அதுக்கு
கீழ்ப்பட்டிருப்பேனாக;
இக்கட்டிலே ரட்சிப்பாரே,
புசல் தெளியும் மட்டும்
என் தம்பிரான் ஆளட்டும்.

2. கர்த்தாவின் செயல் நல்லது;
எத்தற்ற உண்மையான
அவருடைய தயவு
நான் நம்பத்தக்கதான
நங்கூரமாம், பொறுக்கலாம்,
பிதாவால் எந்தத் தீங்கும்
ஆங்காலம் வந்தால் நீங்கும்.

3. கர்த்தாவின் செயல் நல்லது;
நான் கெட்டுப்போகப் பாரார்,
பிதாவானோர் மருந்துக்கு
பதிலாய் நஞ்சை வாரார்;
பயப்படேன், நான் நம்புவேன்,
நற்காப்பார், அவர் தாமே
என் வைத்தியருமாமே

4. கர்த்தாவின் செயல் நல்லது;
சந்தோஷ நாள் வந்தாலும்,
என் நன்மைக்கவர் எனக்கு
இக்கட்டனுப்பினாலும்,
அவர்க்கு நான் ஆதீனம் தான்,
கர்த்தாவின் அன்பு என்றும்
வெளிச்சமாய் தெரியும்

5. கர்த்தாவின் செயல் நல்லது;
நான் அதுக்கு அடங்கி
குடிக்கிற கசப்புக்கு
என் மனது கலங்கி
இருப்பானேன், அமருவேன்,
முடிவிலே நோவாறும்,
தித்திப்புயாக மாறும்.

6. கர்த்தாவின் செயல் நல்லது;
நான் அதில் ஊன்றும் மட்டும்
என்மேல் இக்கட்டு, ஆபத்து,
எத்துன்பமும் வரட்டும்;
இப்பிள்ளையை பிதாவின் கை
அணைத்துக் கொண்டெந்நாளும்
எல்லாம் நன்றாக ஆளுர். ஆமென்.



## பாவ அறிக்கை.

### 76

1. நான் பாவிதான்,—எனக்காய் நீர்
மாசற்ற ரத்தம் சிந்தினீர்,
வா என்று என்னைக் கூப்பிட்டீர்,
என் மீட்பரே, வாறேன்

2. நான் பாவிதான்,—என் நெஞ்சிலே
கறை பிடித்துக் கெட்டேனே,
என் கறை நீங்க, இயேசுவே,
என் மீட்பரே, வாறேன்.

3. நான் பாவிதான்,—பயத்தினால்
அலைந்து, பாவப்பாரத்தால்
அமிழ்ந்து, மாண்டுபோவதால்,
என் மீட்பரே, வாறேன்.

4. நான் பாவிதான்,—இருப்பினும்,
சீர், நேர்மை, இன்பம், மோட்சமும்
அடைவதற்கு உம்மிடம்,
என் மீட்பரே, வாறேன்.

5. நான் பாவிதான்,—என்றாலும் நீர்
அணைத்துக் காத்து ரட்சிப்பீர்,
அருளாம் செல்வம் தருவீர்,
என் மீட்பரே, வாறேன்.

6. நான் பாவிதான்,—அன்பாக நீர்
நீங்காத் தடைகள் நீக்கினீர்;
உமக்குச் சொந்தமாக்கினீர்,
என் மீட்பரே, வாறேன். ஆமென்.

## 77

1. இயேசுவே, எத்தன்மையான
கேடென்னில் இருக்காதோ?
நான் ஆதாமுட வித்தான
துர்க்குணத்தான் அல்லவோ?
பாவி நான் என்றடியேனும்
வெட்கத்தோடே சொல்லவேணும்.

2. என் வழிகள் தாறுமாறு,
என் குணம் பொல்லாதது,
நன்மைக்கு அது ஆகாது,
தீமைக்கது சுருசு;
என் மனம் இத்தால் உண்டாகும்
கேட்டுக்கெப்போ நீங்கலாகும்?

3. பாவத்தால் நான் இங்கே தாழ
செத்தோனாய்க் கிடக்கிறேன்,
உயர இருந்து வாற
ஜீவனுக்கு அடியேன்
ஏங்கிறேன், நீர் தயவாக
என்னை உயிர்ப்பிப்பீராக.

4. மாமிசத்தின் இச்சையாலே
தீட்டென்மேல் வராமல், நான்
ஆவியின் பலத்தினாலே
அதை வெல்வதற்குத்தான்
புது நெஞ்செனக்குண்டாக்கும்,
ஆவியைப் பலமுமாக்கும்.

5. நான் விழித்துக்கொண்டதோடே
வேண்டிக்கொண்டு, சித்தமும்
என் பொல்லாத இச்சையோடே
நான் எதிர்த்து நிற்கவும்,
அதைக் கொல்லவும் அன்பாக
திராணியை அளிப்பீராக.



6. நான் போராடிக்கொண்டிருக்கும்
போரில் ஒருவேளையும்
நான் விழுந்தால், நீர் கொடுக்கும்
திராணியால் திரும்பவும்
வென்று, முடிவு மட்டாக
உம்மிலே நிலைப்பேனாக. ஆமென்.

## 78

1. ஆ, கர்த்தரே, பொல்லாப்பிலே
அமிழ்ந்த பாவியானேன்,
இக்கோவெனில் இவ்வுலகில்
சகாயம் எங்கும் காணேன்.

2. நால்திக்கிலும் மா தூரமும்
போனாலும், என் அழுக்கும்,
என் கிலேசமும் ஆராலேயும்
நீங்காததாயிருக்கும்.

3. தன்னுங்க நான் நோஸ்தன்தான்,
என் கையோ கிறிஸ்தைப் பற்றும்;
தயாபரா, நான் உம்முட
குமாரனால் தப்பட்டும்

4. தகப்பனே, என் நோவிலே
நான் பிள்ளைபோல் அடங்கும்
குணத்தையே என் நெஞ்சிலே
நீர் தந்தென்மேல் இரங்கும்.

5. இங்கே எல்லாம் நீர் உமக்காம்
பிரிய சித்தமாக
நடப்பியும், தண்டித்திரும்,
அங்கென்னைத் தள்ளீராக.

6. என் தேகமும் என் ஆவியும்
பிரிந்தும் உம்மில் நிற்பேன்,
அப்போ வரும் கெதியையும்
உம்மோடனுபவிப்பேன்.

7. இரியேகரே, என் சுவாமியே,
நான் நம்பினோர் நீர்தாமே;
உம்மில் திடன் உடையவன்
பிழைப்பது மெய்யாமே. ஆமென்.

## 79

1. இயேசு பாவிநேசர் தாம்;
வழி தப்பிப்போன யாரும்
அவரால் திரும்பலாம்,
அவரால் எக்கேடும் மாறும்;
அவரால் ரட்சிப்புண்டாம்,
இயேசு பாவிநேசர் தாம்.

2. நாம் மகா அபாத்திரர்.
அவர் கிருபை புரிந்தோர்,
ரட்சிப்போம் என்றாண்டவர்
சத்தியமிட்டே மொழிந்தோர்;
அவர் கிருபாசனம்;
இயேசு பாவிநேசர் தாம்.

3. துக்கப்பட்டேன் பாவத்தை
நான் அறிக்கைபண்ண வந்தேன்,
மீட்பரே, நீர் கிருபை
செய்யும், அப்போ மீட்பைக் கண்டேன்,
போயிற்றென் வியாகுலம்,
இயேசு பாவிநேசர் தாம்.



4. பாவம் சிவப்பாயினும்
பஞ்சைப்போலாம், எக்கறையும்
அவர் ரத்தம் கழுவும்;
நீதியின் வெள்ளங்கியையும்
தாறார், அது நிச்சயம்;
இயேசு பாவிநேசர் தாம்.

5. இயேசு பாவிநேசர் தாம்;
அவர் என்னையும் நேசித்தார்,
நானும் வந்து சேரலாம்,
எனக்கும் மன்னிப்பளித்தார்;
சாவிப்போ ஆதாயமாம்,
இயேசு பாவிநேசர் தாம் ஆமென்,

## 80

1. நிர்ப்பந்தமான பாவியான
நான் இங்கே தேவரீருக்கே
முன்பாக மா கலக்கமான
பயமாய் வாறேன், கர்த்தரே
இரங்குமேன். இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

2. ஆ, என் கொடிய பாவத்தாலே
மகா திகில் இருக்குது;
ஆ, சுவாமி, துயரத்திலே
விடறந்த எழைப்பிள்ளைக்கு
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

3. பிதா இதயமே, மன்னியும்;
என் நோவுக்கும் தவிப்புக்கும்
இரங்கி ஆறுதல் அளியும்;
ஆ, கோபமாயிராதேயும்.
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

4. என் குற்றத்துக்குத் தக்கதாக
செய்யாமல் தயவாயிரும்;
பிதாவே, என்னைப் பிள்ளையாக
திரும்ப நோக்கியருளும்.
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

5. "இனி நீ பாவம் செய்யாயாக,
மன்னித்தோம்" என்றோர் சொல்லையே
அடியேனுக்குச் சொல்வீராக;
அப்போ பிழைப்பேன், கர்த்தரே.
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

6. என் நெஞ்சிலே திகில் தணியும்,
நீர் என்னைக் கேட்டருளுவீர்;
ஆம், சுவாமி, ஆறுதல் அளியும்,
பிதாவே, என்னைக் கைவிடீர்.
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

ஆமென்

## 81

1. மா பொல்லாப்பை நடப்பித்தேன்,
பாவக்கேடு மிஞ்சிற்று,
நல்வழியை விட்டுவிட்டேன்,
அதினால் இப்போது உமது
கோபத்துக்கு பயமாக
நிற்கிறேன், திகைப்புமாக.



2. நான் கடலைத்தான் கடந்தும்,
ஆழத்தில் இறங்கியும்,
காற்றின் வேகமாய்ப் பறந்தும்,
எவ்விடத்திலாகிலும்
தப்பேன்; என்னை எந்தத் திக்கும்
தேவரீரின் கை பிடிக்கும்.

3. ஆகையால் என் துரோகம் கண்ட
உம்மைத்தான் பணிகிறேன்,
பிள்ளைப்பாக்கியம் இழந்த
பாவிக்கு இரங்குமேன்,
என் திரள் பொல்லாப்புக்காக
அப்புறம் எரியீராக.

4. கல்நெஞ்செனக்குள் நிறைந்து,
கண்ணீர் என் முகத்திலே
வெள்ளம் வெள்ளமாய்ப் புரண்டு
பாய்ச்சலானால் வாசியே;
ஆனால் இப்படிக் காணாது,
ரத்தம் ஓடியும் போதாது.

5. என் சுமையை நீர் ஒழித்து,
ஆழமாய்க் கடலிலே
தள்ளி, என்னை ஆதரித்து,
சுத்தமாக்கும், இயேசுவே;
என்னை உம்மில் ஆக்கம் மாற்றும்,
உமதாவியால் காப்பாற்றும்.

ஆமென்

## 82

1. பெலவீனரின் பெலனும்,
துக்கப்பட்டிருக்கிற
பாவிகளுடை திடனும்,
வைத்தியருமாகிய
இயேசுவே, என் எஜமானே,
கேட்டை நீக்கும், பலவானே.

2. என் இதயம் ஜென்ம பாவம்
ஊறிய ஊற்றானது,
என்னுடைய முழுச் சுபாவம்
நன்மைக்கு விரோதித்து,
பாவத்தின் விஷத்தினாலும்
ரம்பும் கெட்ட இச்சையாலும்.

3. நோயாம் பாவிகளுக்கான
பரிகாரி, இயேசுவே,
அப்புறம் இவ்வாதையான
கேட்டைத் தாங்கமாட்டேனே,
ஆ, என் பேரிலே இரங்கும்,
உம்மால் கேடெல்லாம் அடங்கும்.

4. உம்முடைய ரத்தத்தாலே
குற்றம் நீக்கி ரட்சியும்,
எனக்குமதாவியாலே
நற்குணத்தை அருளும்,
கர்த்தரே, இப்படியாக
சொஸ்தத்தை அளிப்பீராக.

5. என் இருதயத்தில் வந்து
தங்கும், என் சகாயரே,
அப்போ துக்கத்தை மறந்து
வெற்றியை அடைவேனே,
உமக்குத் துதி உண்டாக
என் ஜெபத்தைக் கேட்பீராக. ஆமென்.

## 83

1. அருளின் ஊற்றும் இயேசுவே,
நோவும் வியாகுலமும்
நிறைந்த என் நெஞ்சத்திலே
இருக்கும் கேட்டைப் பாரும்;
என் பாவங்கள் அகோரமே,
உம்மால்தான் அவை தீருமே,
என்னை அன்பாய் கண்ணோக்கும்.



2. குருசில் தொங்கி, மாந்தர்க்காய்
நீர் பட்ட பாட்டைப் பாரும்;
என் நோவை நீக்கி, தயவாய்
ரட்சிப்பளிக்க வாரும்;
மா துக்கத்தாலே சாகிற
நான் தாழ்மையாகச் செய்கிற
மன்றாட்டை அன்பாய்க் கேளும்.

3. நொறுங்குண்ட என் நெஞ்சத்தை
நீர் ஏற்கும் பலியாக்கும்;
வதைந்து நொந்த ஆவியை
நீர் தேற்றி, துக்கம் மாற்றும்;
உம் பாதம் தேடி, தாழ்மையாய்
வாறேன், உம் ரத்தத்தால் அன்பாய்
என் பாவம் யாவும் போக்கும்.

4. உம் ஆவியின் கடாட்சத்தால்
இவ்வேழையைக் காப்பாற்றும்;
உம் பாடு, துன்பம், சாவினால்
என் சாவில் என்னைத் தேற்றும்;
என் நெஞ்சில் விசுவாசத்தை
முடியக் காத்து, உம்மண்டை
மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளும். ஆமென்.

## 84

### *Litany of Penitence.*

1-ம் பங்கு.

1. பாவச் சுமையால் மெலிந்து,
ஆவி தன்னாடி கலிந்து,
தேவா! நின் குருசோரத்தில்
கூவியழுது நிற்கிறோம்.

மைந்தர்கள் எந்தனின் கண்ணீர்
சொந்தமல்லவோ உமக்கு?
சிந்தை குலைந்து நிற்கிறோம்,
பந்தம் அறுத்து ரட்சிப்பீர்;
சிந்தையின் கண்ணீரை யென்றும் நீக்குவீர்.
ஏவைஸ்திரீயின் வித்தாம் பாவிகள் மத்யஸ்தா!
பாவி என் மன்றாட்டைக் கேளும்.

2. சித்தம் எம் மதியீனத்தால்,
நித்தம் எம் முரட்டாட்டத்தால்,
சுத்தனும் உமதாவியை
துக்கப்படுத்தினோமையா.
இப்போ துணைப்படுகிறோம்—உனின்
சொற்போல் நடக்க ஆசிப்போம்;
எப்போதும் திருப்ரசன்னம்
இப்பாவியிடம் தகவே
பொற்பாதம் துணையருள், போதனே!
ஏவைஸ்திரீயின் வித்தாம் பாவிகள் மத்யஸ்தா!
பாவி என் மன்றாட்டைக் கேளும்.

3. மாம்ச இச்சை போர் பக்கம்,
லோகத்தின் ஆசை போர் பக்கம்,
சாத்தானின் சேய்நடை போர் பக்கம்,
தாக்க மடிந்து வீழ்ந்தோமே.
தாக்கி நிலைநிறுத்துவீர்—துயர்
நீக்கி பலப்படுத்துவீர்;
போக்கிடமற்று நிற்கிறோம்-தேவ
வாக்கையே நம்பிக் கேட்கிறோம்,
பாக்கியம், பெலனருள்வீர்; வேண்டினோம்.
ஏவைஸ்திரீயின் வித்தாம் பாவிகள் மத்யஸ்தா!
பாவி என் மன்றாட்டைக் கேளும். ஆமென்.



## ௨-ம் பங்கு.

1. பாவிகளான எமக்காய்
பாவ சொரூபமானவா!
தீமை நிறைந்த எமக்காய்
தீமை யநுபவித்தையா!
பாரும் எம் மனவேதனை;
தீரும் எம் பாவசோதனை;
வாரும் நல்லோசனை-நிதம்
காரும், எமதாவி நலனை-கிருபை
தாரும்; காப்பாரும்; கலி தீருமே.
ஏவைஸ்திரீயின் வித்தாம் பாவிகள் மத்யஸ்தா!
பாவி என் மன்றாட்டைக் கேளும்.

2. உம்முடை மனவேதனை
எம்முடை இதய இன்பமாம்;
உம்முடை ரத்தம் சிந்துதல்
எம்முடை ஆத்ம மீட்பல்லவா?
உம்முடை இரக்கங்கள்
எம்முடை அரண் கோட்டையாம்;
உம்முடை திரு மரணம்
எம்முடை நித்திய ரட்சிப்பாம்-பாவி
என்ன இதற்கு ஈடு செய்குவேன்?
ஏவைஸ்திரீயின் வித்தாம் பாவிகள் மத்யஸ்தா!
பாவி என் மன்றாட்டைக் கேளும்.

3. மண்ணில் ஜெனித்த நாள் முதல்
என்னைத் தொடர்ந்த நேசமே!
விண்ணிலிருந்து சேர்க்க எண்ணியே
கண்ணைப்போற் காத்த நேசமே!
வீடாம் நற் பரமதிலே-நிதம்
கூட இருந்து வாழவே
பாடாம் இவ்வுலகை விட்டு-திரு
பீடம் முன் பணிந்து நின்று
நேசன் உம்மிடம் வர ஏங்குகிறேன்.
ஏவைஸ்திரீயின் வித்தாம் பாவிகள் மத்யஸ்தா!
பாவி என் மன்றாட்டைக் கேளும். ஆமென்.

## விண்ணப்பம்.

### 85

1. தெய்வன்புக்காக உன்னத
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி;
என், பாவக்கேட்டை நீக்கின
அது மகா திரட்சி;
மெய்ச்சமாதானம் என்றைக்கும்,
நரர்கள் மேல் பிரியமும்
உண்டாம், இரக்கம் பெற்றோம்.

2. மாறாமல் ஆண்டிருக்கிற
மகத்துவ பிதாவே,
துதியோடும்மைக் கும்பிட
பண்ணுகிறோம், கர்த்தாவே;
அளவில்லாப் பலமாய் நீர்
நினைத்த யாவும் செய்கிறீர்,
மா பாக்கியர் அடியார்.

3. ஆ, இயேசு, தெய்வ மைந்தனே,
கடன்களைச் செலுத்தி
கெட்டோரை மீட்ட மீட்பரே,
மாசற்ற ஆட்டுக்குட்டி!
மா கர்த்தரே, தயாபரா,
நீர் எங்கள் சத்தம் கேட்டெல்லா
சபையின் மேல் இரங்கும்.

4. மெய்யாகத் தேற்றும் உன்னத
தேவாவி, நீர் அன்பாக
இறங்கி, கிறிஸ்து தம்முட
சாவால் பிரியமாக
மீட்டோரைச் சாத்தான் கண்ணியில்
விழாதே காத்து, துன்பத்தில்
ஜெயிக்கப்பண்ணும், ஆமென். ஆமென்.



### 86

1. பாதை காட்டும், மா யேகோவா,
பரதேசியான நான்
பலவீனன், அறிவீனன்,
இவ்வுலோகம் காடுதான்;
வானாகாரம்
தந்து, என்னைப் போஷியும்.

2. ஜீவத் தண்ணீர் ஊறும் ஊற்றை
நீர் திறந்து தாருமேன்;
தீப மேக ஸ்தம்பம் காட்டி
நேர்வழி நடத்துமேன்;
வல்ல மீட்பர்!
என்னைத் தாங்கி ரட்சியும்.

3, சாவின் அந்தகாரம் வந்து
என்னை மூடும் நேரத்தில்,
சாவின்மேலும் வெற்றி தந்து
சேர்த்திடும் பரதீசில்;
கீத வாழ்த்தல்
உமக்கென்றும் பாடுவேன். ஆமென்.

### 87

1. ஆடுகளின் உண்மையான
மேய்ப்பரே, இரங்குமேன்,
நானும் உம்மைச் சேர்ந்ததான
உமதாடாகட்டுமேன்;
ஆடுகளுக்காய் அன்பாலே
ஜீவனை நீர் தந்ததாலே
என்னையும் மீட்டீரல்லவோ?
அந்த அன்புக்கொப்புண்டோ?

2. மந்தைக்கும் நல் மேய்ப்பனுக்கும்
ஒன்றுக்கொன்று அன்புண்டே,
அப்படி இங்கேயிருக்கும்;
என்மேல் நேசத்தை நீரே
வைக்கக்கொள்ள, உம்மை நானும்
என் கர்த்தாவும் மேய்ப்பனும்
என்று பற்றி, உண்மையே
நேசிப்பேன், என் நேசரே.

3. தங்கள் மேய்ப்பனை நன்றாக
ஆடுகள் அறியுமே;
மேய்ப்பனும் [illegible]மாக
தனது மந்தையிலே
எந்த ஆட்டையும் அறிந்து
காக்கும்போல், [illegible]
பிறப் பார்த்த என்னை நீர்
காத்துக்கொண்டிருக்கிறீர்.

4. மேய்ப்பன் காட்டும் சத்தத்துக்கு
ஆடுகள் செவிதரும்;
ஆடு கூப்பிட்டால், அதற்கு
மேய்ப்பன் களிப்புறும்
உண்டு, ஆ, நீர் சத்தமிட்டால்
கேட்பேன், என்னை நீர் கண்டித்தால்
நீர் அடைவேன், எனக்கும்
அன்பாய் நீர் செவிகொடும்.

5. ஆம், நான் கூப்பிட்டால் நீர் கேளும்,
உண்மையுள்ள மேய்ப்பரே,
மந்தையில் ஒவ்வொன்றின்மேலும்
மூர்க்கமாம் [illegible]க்கே
தப்ப, உம்மைக் கருத்தாக
நான் மன்றாடிவருகைக்கு
என்னை ஏவும், என்னை நீர்
அப்போதாற்றித் தேற்றுவீர்.



6. எனதாவி உம்மைப் பற்றும்,
கர்த்தரான இயேசுவே,
வேண்டிக்கொண்டு தேடித் தட்டும்
என்னைத் தயவுடனே
கேட்டு ஆதரிப்பீரென்றும்,
உம்மால் நான் சுகிப்பேனென்றும்,
இயேசுவே, நான் நம்பினேன்,
நம்பி ஆமென் என்கிறேன். ஆமென்.

## 88

1. ஆ, இயேசுவே, நீர் எங்களை
அன்பாய்ச் சேர்க்குமதாவியை,
அருள் அனுக்கிரகத்தையும்
தந்தெங்கள் மேய்ப்பராயிரும்.

2. பரத்தில் நாங்கள், சுவாமியே,
நீர் சுத்தர், சுத்தர், சுத்தரே
என்றோதி உம்மை என்றைக்கும்
களிப்பாய்ப் பார்க்குமளவும்;

3. வாய் உம்மைப் போற்றி, மனது
தேவன்பை நன்றாய் யோசித்து,
உணர்வும் விசுவாசமும்
பலிக்கக் கட்டளையிடும்.

4. ஒன்றாக ஆண்டிருக்கிற
திரியேக தெய்வமாகிய
பிதா, குமாரன், ஆவிக்கும்
இஸ்தோத்திரம் உண்டாகவும். ஆமென்.

## 89

1. தேவ ஆட்டுக்குட்டியே,
லோகத்தாரின் மீட்பரே,
உம்மால் மீட்கப்பட்ட நான்
தேவரீர்க்குச் சொந்தந்தான்;
நீர் என் கோட்டை, தஞ்சமாம்,
யார் என் வாழ்வை நீக்கலாம்?

2. உம்மைப் பற்றும் நேசத்தை,
உம்மில் வைக்கும் பக்தியை
பேயும்கெட்ட லோகமும்
மூர்க்கமாய் விரோதிக்கும்,
லோக இன்பதுக்கங்கள்
சாத்தான் வைக்கும் கண்ணிகள்.

3. கர்த்தரே, என் உள்ளத்தில்
ஒளி வீசி, மனதில்
அந்தகாரம் நீக்கிடும்,
அன்பின் சுவாலை எற்றிடும்;
ஆவி வரம் யாவையும்
பூர்த்தியாக அளியும்.

4. எந்த நாழிகையிலே
நீர் வந்தாலும், இயேசுவே,
உம்மை நானும் சந்தித்து,
கண்ணால் கண்டு களித்து
வாழ்வதற்கு, தினமும்
உம் அருள் கடாட்சியும். ஆமென்.



## 90

1. தயாபரா, எல்லா
நல் ஈவின் ஊற்றும் நீரே,
உண்டானதையெல்லாம்
அளித்தோர் தேவரீரே;
என் தேகம் ஆவிக்கும்,
என் மனச்சாட்சிக்கும்
சீராயிருக்கிற
ஆரோக்கியம் கொடும்.

2. எப்போதும் எற்றதை
நான் வசனிப்பேனாக,
வீண் பேச்சென் நாவிலே
வராதிருப்பதாக;
என் உத்தியோகத்தில்
நான் பேசவேண்டிய
சொல் விதனமில்லா
பலத்தைக் காண்பிக்க.

3. அனைவரோடேயும்
கிறிஸ்தோனுக்கேற்கும் மட்டும்
நேசம் அன்புமாய்
நான் ஜீவனம் பண்ணட்டும்;
நீர் ஆஸ்தியைத் தந்தால்,
அத்தோடே என்றைக்கும்
அநியாய உடைமை
சேராதிருக்கவும்.

4. என் சாவில், கிறிஸ்துவின்
சாவால் ஜெயிப்பேனாக;
பிரிந்த ஆவியை
உம்மண்டை சேர்ப்பீராக;
உடலுக்கோவெனில்,
நல்லோர் கிடக்கிற
குழிகளருகே
இடம் அகப்பட.

5. செத்தோரை நீர் அந்நாள்
எழுப்பும்போதன்பாக
என் மண்ணின் மேலேயும்
வாவென்ற சத்தமாக
கை நீட்டி, எனக்கு
நீர் ஜீவனுடனே
வானோரின் ரூபத்தை
அளியும், கர்த்தரே. ஆமென்.

## 91

1. கர்த்தாவே, உமக்கு
நான் கீழ்ப்படிந்தோனாக
நடக்கும் சிந்தையை
நீர் தந்த அன்புக்காக
உமக்கு ஸ்தோத்திரம்;
இப்போதும், நித்தமும்
நீர் அதற்கெனக்கு
ஒத்தாசையாயிரும்.

2. நீர் யாவும் காண்கிறீர்,
இதை நினைப்பேனாக;
உமக்கேற்காததை
நான் செய்தால், அதற்காக
தண்டிப்பீர், ஆகையால்
எந்நேரக்காலமும்
நான் தேவரீருக்கு
பயந்திருக்கவும்.



3. அடியேனை நீரே
நடத்திக்கொள்வீராக,
என் மனதின்படி
நான் போனால், மோசமாக
முடியும்; ஆனால் நீர்
என் வேலையிலெல்லாம்
என்னை நடத்தினால்,
மா பாக்கியம் உண்டாம்.

4. நான் சகலத்தையும்
வெறுத்து உம்மைப் பற்றி,
என் மாமிசத்துட
குணத்தையே அகற்றி,
நான் உமதைக்கத்தை
எப்போதும் தேடவும்,
என் முழு மனதை
நீர் உம்மண்டைக்கிழும்.

5. ஆ, என்னில் உமது
கிருபையே வீணாக
இராப்படிக்கு, நான்
உம்மில் நிலைப்பேனாக;
அப்போதும்மோடே நான்
மோட்சானந்தத்திலும்
இருக்கும் பாக்கியம்
எனக்ககப்படும். ஆமென்.

## 92

1. இயேசுவே, நீர் தாழ்ந்தோரான
நாட்களில், கும்போடே நீர்
உம்மால் நோயைத் தீர்ப்பதான
சத்தி பாயுது என்றீர்;
இப்போதுன்னதத்தில் ஆளும்
ராஜாவான நீர் இந்நாளும்
சத்தியை என்பேரிலும்
பாயப்பண்ணியருளும்.

2. உமக்கதிகாரம் யாவும்
தரப்பட்டிருக்குதே,
தேவரீரை எந்த நாளும்
கர்த்தர் என்கவேண்டுமே;
யாவும் உமக்குப் பணியும்,
பெருமையெல்லாம் [illegible],
உம்மால் கடைசியிலே
சாவும் வெல்லப்படுமே.

3. ஆ, இவ்வேழைக்கும் இரங்கும்,
தேவ பரிகாரியே,
என்னைப் பாரும், என்னில் எங்கும்
புண்ணும் ரோகமும் உண்டே;
பாவமும் பொல்லா வினையும்
நீங்க என்மேல் கையை வையும்,
சொஸ்தமாகென்றெனக்கும்
நீர் அன்பாகச் சொல்லவும்.

4. உம்முடைய வஸ்திரத்தின்
ஓரத்தைத் தொடுகிறேன்,
நீர் ரட்சிக்கிற பலத்தின்
சத்துவத்தை நம்புவேன்,
நீர் உரைத்ததைப் பிடிப்பேன்,
உமக்கென்னை ஒப்புவிப்பேன்,
மீட்போமென்று சொன்னீரே,
மீட்டுக்கொள்ளும், இயேசுவே.

5. ஆமென், என் ஜெபத்தைக் கேட்பீர்,
என்னைச் சுத்தம் பண்ணுவீர்,
என்னைக் கண்பார்த்தென்னைச் சேர்ப்பீர்,
தேற்றி, அன்பைக் காண்பிப்பீர்;
அத்தால் நித்தம் நித்தமாக
உமக்குப் புகழ்ச்சியாக
தோத்திரம் செலுத்துவேன்,
ஆமென், ஆமென் என்கிறேன். ஆமென்



## 93

1. உன்னதமாகிய
என் கர்த்தரே, நீர் தாமே
மெய்விசுவாசத்தை
கொடுக்கிறவராயே;
இப்போதும் உம்மண்டை
நான் சேருவதற்கு,
அவிதவனில் மிகவும்
குறைப்படுது.

2. என் நம்பிக்கையெல்லாம்
பட்சயம் இருக்கும்,
என் விசுவாசத்தை
பேய் மிகவும் தடுக்குது;
மகா தயாபரா,
சகாயம்பண்ணுமேன்
என்றிவ்விக்கட்டிலே
நான் கெஞ்சிக் கேட்கிறேன்.

3. ஆ, உமது பலம்
நிறைந்தபடியாக
என் பலவீனத்தில்
என்னோடிருப்பதாக,
என் நம்பிக்கை மென்மேல்
வளர்ந்து வரவே
நீர் என்னை உம்மண்டை
இழும், என் கர்த்தரே.

4. எச்சோதனையிலும்
அடியேன் கெட்டியாக
நிலைத்து, ஜெயமாய்
போர் செய்கிறதுக்காக,
என் விசுவாசத்தின்
பொறி மென்மேலைக்கும்
எறிவதற்கதை
நீர் ஊதிக்கொண்டிரும்.

5. நான் விசுவாசத்தின்
மகா மகிழ்ச்சியான
பலன்களை இனி
பரகதியில் காண,
என் வேண்டுதலுக்கும்
என் கூக்குரலுக்கும்,
கர்த்தாவே, தேவரீர்
அன்பாய்ச் செவிகொடும். ஆமென்.

## 94

1. நான் வாஞ்சையாய் என் மனதை
அண்ணாரப்பண்ணி, பாவத்தை
பகைக்க, சுத்த நெஞ்சை நீர்
என்னில் சிஷ்டிக்கக்கடவீர்.

2. என்னில் பேயால் பாழானதை
நீர் புதிதாக்கி, மனதை
வெல்லப்படாத கெட்டியும்
பலமுமாக்கியருளும்.

3. இச்சையின் மோசம் என்னிலே
செய்த பொல்லாப்பைக் கண்டீரே,
என் நெஞ்சு துயரப்படும்;
ஆ, கோபமாயிராதேயும்.



4. ஆ, உம்முடைய ஆவியை
நீர் உமது அடியேனை
விட்டெடுக்காமல், யாவையும்
இரக்கமாய் மன்னிக்கவும்.

5. அவர் திரும்ப எனக்கு
திடன் அளித்து, உமது
முகத்தின் ஆறுதலையும்
அடியேனுக்குத் தரவும்,

6. மனக்கலக்கமற்றோனாய்,
நான் உமக்கேற்ற பத்தியாய்
இருந்து, நித்த நித்தமும்
சன்மார்க்கமாய் நடக்கவும்.

7. பிதா, குமாரன், ஆவியே,
இரக்கமுள்ள கர்த்தரே,
உமக்கென்றைக்கும் அடியேன்
இஸ்தோத்திரம் செலுத்துவேன். ஆமென்.

## 95

1. இயேசுகிறிஸ்துவே,
உலகத்திலே
கெட்டுப்போனவர்கட்கான
ஒளியும் உயிருமான
ரட்சகர் நீரே,
இயேசுகிறிஸ்துவே.

2. என்னை மீட்க நீர்
ஜீவனை விட்டீர்,
குற்றத்தை எல்லாம் அடக்க,
தீங்கை எனக்கு விலக்க,
எனக்காக நீர்
ஜீவனை விட்டீர்.

3. எங்கள் மீட்புக்கு
லோகத் தோற்றத்து
நாவின் முன்னே வார்த்தை தந்தீர்,
காலமாகையில் பிறந்தீர்,
பாவிகளுக்கு
மீட்புண்டாச்சுது.

4. வெற்றி வேந்தரே,
பாவம், சாபம், பேய்,
நரகத்தையும் ஜெயித்தீர்,
நாங்கள் வாழ நீர் மரித்தீர்,
உம்மால் துஷ்ட பேய்
வெல்லப்பட்டதே.

5. நான் விழிக்கவும்,
நித்திய சித்தமும்
செருகவும், நீரே அன்பாலே
உமது நல்லாவியாலே
என்னை நித்தமும்
ஏவியருளும்.

6. ஆஸ்தி ஜீவனும்
சகலத்தையும்
உமக்காக நான் வெறுக்க
தைரியம் உண்டாயிருக்க,
என்னை மிகவும்
நீர் திடத்தவும்.



7. சாகும் வேளையில்
நீரே அண்டையில்
நின்று, என்னை நீர் இருக்கும்
வாழ்வுக்கும் சந்தோஷத்துக்கும்
கொண்டுபோய், அங்கே
தேற்றும், இயேசுவே. ஆமென்.

## 96

1. தேவ கிருபையைத் தேட
நீ போராடிக்கொண்டிரு,
ஆவி பரமற்று ஏற
நன்றாய் ஜாக்கிரதைப்படு.

2. வாசலானது இடுக்கம்,
தாழ்மையாகி உட்படு;
ஜீவனின் வழி நெருக்கம்,
லோக நேசத்தை விடு.

3. நல்ல சேவகத்தைப் பண்ணி
ராச்சியத்துக்குட்படு,
பேய் எதிர்த்தால், பயமின்றி
நின்று, வகிக்கொண்டிரு.

4. பத்தி முழு லோகத்துக்கு
உன்னை நீங்கலாக்கவே
பார்த்துக்கொள், பங்கிட்டிருக்கும்
நேரம் சுவாமிக்கேற்காதே.

5. வேண்டுதலினால் போராடி,
ஆண்டவரின் தயவு
காணும் மட்டுக்கும் மன்றாடி,
கூப்பிட்டுக்கொண்டேயிரு.

6. கர்த்தர் உன்னை தயவோடே
ஏற்றுக்கொண்டபிறகு,
பாவம் உன்னிலே வேரோடே
செத்ததென்றெண்ணியிரு.

7. ஜீவனுள்ள நாள் மட்டாக
மோசங்கள் இருக்குது;
திகிலும் பயமுமாக
உன் ரட்சிப்பைக் காத்திரு.

8. உனதிச்சையை அடக்கு,
அது உன்னை ஆளச்சே
கிருபையுட விளக்கு
மங்கிப்போய் அவியுமே.

9. உண்மையுள்ளோன் உலகத்தில்
உன்னதைச் சிநேகியான்;
அவன் பொக்கிஷம் பரத்தில்
உண்டு, அங்கே ஏகுவான்.

10. இதை நாம் நினைப்போமாக;
ஆ, நற்சேவகரைப்போல்
பந்தயம் பெறும் மட்டாக
ஓடிப்போவோம், வாருங்கள். ஆமென்.

## தேவாராதனை

### 97

1. சபையின் அஸ்திபாரம்
கிறிஸ்தேசு நாதர்,
அதின்மேல் நித்திய நேசம்
வைத்திங்கே வந்தனர்;
மெய்ஞ்ஞானத்தால் திரும்ப
சிஷ்டித்து, போதித்தார்,
தம் சாவால் மீட்டன்பாக
ஜீவன், பெலன் தாரூர்.



2. எத்தேசத்தார் சேர்ந்தாலும்
திருச்சபை ஒன்றே;
விஸ்வாசம், கர்த்தர், ஸ்நானம்
எல்லாருக்கும் ஒன்றே;
ஒரே பிதாவின் நாமம்
எல்லாரை இணைக்கும்,
ஒரே தெய்வீக அப்பம்
எல்லாரை போஷிக்கும்.

3. புறமதஸ்தர் விரோதம்
பயம் விளைக்குது,
பேர்க்கிறிஸ்தோர் செய்யும் துரோகம்
வெட்கம் உண்டாக்குது;
விண் மண்ணின் பக்தர் ஜெபம்
கேட்கும் கர்நாள் வரும்,
அப்போ அழுகை, துக்கம்
களிப்பாய் மாறிடும்.

4. லோகெங்கும் போரில் வெற்றி
சிறந்து, விண்ணவரிலும்
கர்த்தாவைக்கண்டு, போற்றி,
களிக்கும் நாள் மட்டும்,
திருச்சபை மா அன்பாய்
யாவையும் சகித்து,
தன் நேசர் வருகைக்காய்
ஏங்கித் தவிக்குது.

5. போராடும் சபையோர்க்கு
திரியேகர் கடாட்சமும்,
வெற்றி சிறந்தோரொடு
ஐக்கியமும் உண்டென்றும்;
மெய்பாக்ய தூயோரோடு,
கர்த்தாவே, நாங்களும்
விண்ஜோதியில் உம்மோடு
தங்கக் கடாட்சியும். ஆமென்

## 98

1. பெருகு, பெருகு,
சீயோனே, சன்மார்க்கத்தில்;
முற்சேகத்தீது விடாதே,
கிறிஸ்துக்குள் வேரூன்றி நில்;
அசதிக்குணம் ஆகாதே,
ஓய், இடுக்க வாசற்படி,
பெருகு, பெருகு.

2. உத்தரி, உத்தரி;
சீயோனே, இக்கட்டுக்கு
நீ அஞ்சாமல் சாவுமட்டும்
நல்ல உண்மையாயிரு;
ஜீவகிரீடம் லக்காகட்டும்,
நிந்தை யாவையும் அனுபவி,
உத்தரி, உத்தரி.

3. சீர் அறி, சீர் அறி;
சீயோனே, உன் மனதை
இந்த அந்தப் பக்கமாக
சாய விடும் ஆவியை
பின்செல்லாதிருப்பாயாக
நேரே போ, எல்லாத்தை நன்றாய் நீ
சீர் அறி, சீர் அறி.

4. தேடிப்போ, தேடிப்போ;
சீயோனே, பலப்படு,
மற்றோர்போலே செத்திராதே,
கிறிஸ்துக்குள் செழித்திரு;
மாயம் வேஷமும் போதாதே,
ஜீவனும் பெலனும் வேண்டாமோ?
தேடிப்போ, தேடிப்போ.



5. தொய்யாதே, தொய்யாதே;
சீயோனே, உன் சீரைக் கா,
வெதுவெதுப்பாயிராதே,
பந்தயத்தை நோக்கிப்பார்,
போ, பின்னானதை எண்ணாதே,
சீயோனே, கடை இக்கட்டிலே
தொய்யாதே, தொய்யாதே. ஆமென்.

## 99

1. ஆ, சகோதரர் ஒன்றாய்
ஏகமான சிந்தையாய்
சஞ்சரித்தால் எத்தனை
நேர்த்தியான இனிமை!

2. அது ஆரோன் சிரசில்
வார்த்து, கீழ் வடிகையில்
கந்தம் வீசும் எண்ணெய்க்கு
ஒத்தாயிருக்குது.

3. அது எர்மோன் மேலேயும்
சீயோன் மேடுகளிலும்
பெய்கிற ஆகாசத்து
நற்பனிக்கும் ஒத்தது.

4. ஆனால் உலகத்திலே
நேசம் அபூருவமே,
தன் உயிரைப்போலே ஆர்
மன்னுயிர்க்கிரங்கிறார் ?

5. விண்ணில் ஆளும் ராசே,
பிரிவினையால் இங்கே
காணும் கேடனைத்துக்கும்
பரிதாபமாயிரும்.

6. மேய்ப்பரே, நீர் கிருபை
செய்து, சிதறுண்டதை
மந்தையாக்கி, யாவையும்
சேர்த்தணைத்துக்கொள்ளவும்.

7. எங்கள் நெஞ்சில் சகல
நற்குணங்களும் வர
தேவ அன்பை அதிலே
ஊற்றும், இயேசுகிறிஸ்துவே. ஆமென்.

## 100

1. அலங்கார வாசலாலே
கோவிலுக்குள் போகிறேன்,
தேவ வீட்டின் நன்மையாலே
ஆத்துமத்தில் பூரிப்பேன்,
இங்கே தேவசமுகம்,
மெய் வெளிச்சம், பாக்கியம்.

2. கர்த்தரே, உம்மண்டை வந்த
என்னண்டைக்கும் வாருமேன்
நீர் இறங்கும் போதனந்த
இன்பத்தால் மகிழுவேன்,
என்னுட இதயமும்
தேவஸ்தலமாகவும்.

3. பயத்தால் உம்மண்டை சேர,
என் ஜெபம் புகழ்ச்சியும்
நல்ல பலியாகவே,
உமதாவியைக் கொடும்;
தேகம் ஆவி யாவையும்
சுத்தமாக்கியருளும்.



4. விசுவாசத்தை விடாமல்
அதில் பலப்படவும்,
ஒருக்காலும் தவறாமல்
உம்மை நான் பின்செல்லவும்,
மெய் வெளிச்சத்தை நீரே
என்னில் வீசும், கர்த்தரே.

5. சொல்லும், கர்த்தரே, நான் கேட்பேன்,
நீர் இப்பாழ் நிலத்திலே
பெய்யும் மன்னாவை நான் சேர்ப்பேன்
நல் தியானத்துடனே;
தாரும் ஜீவ பானத்தை,
தீரும் பசி தாகத்தை. ஆமென்.

## 101

*The Lord's Day.*

1. கர்த்தாவின் நாளைக் காண
பக்தர் விரும்பாரோ?
கிறிஸ்தேசு நாதர் போற்ற
சிறந்த நாளல்லோ?
துன்பத்தால் இளைத்தோர்க்கு
அந்நாள் பேரின்பமும்,
பாரம் சுமப்பவர்க்கு
தேறுதலும் தரும்.

2. நந்நாளே, உன்னில் தேவன்
மின் ஜோதி சிஷ்டித்தார்,
உன்னில் எம் நித்ய வேந்தன்
வென்றுலகை மீட்டார்;
உன்னில் தம் சிநேகர்க்காவி
அன்பாய் அளித்தவர்
நம்மை இன்றிங்கே நாடி
தம்மாவி அருள்வர்.

3. புவியில் கஷ்டப்பட்டு
தவித்து நிற்போர்க்கு
பரம காருணன் இன்று
பிறந்திருக்குது;
விண்ணோர் பணிந்து போற்றும்
மண்ணோரின் மீட்பரே
தம் சொந்த மாம்சம், ரத்தம்
தந்தான வாருரே.

4. இந்நாள் ஒய்த்துமதன்மை
நன்றாய் தியானிக்கவும்,
திருவிருந்தில் உம்மை
பெறவும் அருளும்;
இவ்வாலயத்தில் உம்மை
எவ்வேளை தன்னிலும்
தரிசிக்க வந்தோரை
பரத்தில் சேர்த்திடும். ஆமென்

## 102

### *Church Festival.*

1. வானம், பூமி, சிஷ்டி யாவும்
ஞானமாய்ப் படைத்தவா,
தேவரீரைக் கொள்ளும் ஸ்தானம்
பூவுலகெங்கும் உண்டா?
மாந்தர் கட்டும் ஆலயத்தை
இச்சை கொண்டு, தங்கேயும்
வீற்றிருக்கும் உமதன்பை
போற்றிப் பாடுவோம் என்றும்.

2. தேவா, இந்த ஆலயத்தை
பாவ மாந்தர் கட்டினோம்,
விண்ணோர் செய்யும் ஆராதனை
மண்ணோர் செய்யத் துணிந்தோம்;
மாந்தர் கூடி ஜெபிக்கையில்
வந்து கேட்போம் என்றீரே,
இந்த எங்கள் ஜெபவீட்டில்
வந்தெம் ஜெபம் கேளுமே.



3. இங்கெம் மேய்ப்பர் சுவிசேஷம்
பாங்காய் போதித்தூட்டவும்,
சாக்ரமெந்தால் எங்கள் தாபம்
நீக்கவும் நீர் அருளும்;
எங்கள் நெஞ்சில் தேவ ஆவி
தங்கி வாசஞ்செய்யவும்,
மாசில்லா மெய்ஞ்ஞான ஜோதி
வீசவும் கடாட்சியும்.

இந்த ஆலயத்தில் உம்மை
வந்து தொழும் யாவர்க்கும்,
பாடுபட்ட மீட்பர் அன்பை
தேடும் எந்தப் பாவிக்கும்,
பாவ பாரம், துன்பம் நீக்கி
ஜீவன், இன்பம் தந்திடும்,
வென்ற வேந்தர் பாதம் கூடி
என்றும் வாழச் செய்திடும். ஆமென்.

## 103

### *Processional.*

1. கிறிஸ்து சபையோரே, ஏகமாய்க் கூடும்,
குருசால் பிசாசை ஜெயிக்க வாரும்,
வெற்றி வேந்தர் முன்னே போகிறார், பாரும்,
சற்றும் பயமின்றி பின்செல்வோம் நாமும்.
கிறிஸ்து சபையோரே, ஏகமாய்க் கூடும்,
குருசால் பிசாசை ஜெயிக்க வாரும்.

2. எரிகோவின் கோட்டை பலத்திருந்தும்,
பேரிகை முழக்க வீழ்ந்ததே முற்றும்;
பேயின் கொத்தளங்கள் எங்கும் சிறந்தும்,
ஜெயகீதம் பாட நாசமாய் விடும்.—கிறிஸ்து

3. லோகத்தாரெல்லாரும் நம்மை அழிக்க
ஏகமாய்ச் சேர்ந்தாலும், நாம் பயப்படோம்;
நித்ய கன்மலைமேல் நாட்டப்பட்டுள்ள
கத்தோலிக் சபையில் என்றும் வாழுவோம்.
—கிறிஸ்து

4. தேசம், பாஷை, ஜாதி, வெவ்வேறாயினும்,
இயேசுவின் அடியார் யாவரும் ஒன்றே;
தேவன், மீட்பர், வேதம், ஞானஸ்நானமும்
ஜீவ அப்பம், பானம், மோட்சமும் ஒன்றே-கிறிஸ்து

5. சத்யத்தைக் கெடுக்கும் கொள்கை பேதமும்,
சத்ருவால் உண்டாகும் அன்புத்தாழ்ச்சியும்
நீங்கி, மெய்ச்சந்தோஷம், ஐக்யமும் அன்பும்
ஓங்கும் காலம், இதோ, சீக்கிரம் வரும்—கிறிஸ்து

6. இந்த தேசத்தாரே, ஏகமாய் வாரும்,
பிந்தினோராலும் முந்தினோராவோம்;
ஆதிச்சபை மூப்பர், தீர்க்கர், தூயரும்
ஜோதியாய் இலங்கும் மோட்சம் நாடுவோம்.
கிறிஸ்து சபையோரே, ஏகமாய்க் கூடும்,
குருசால் பிசாசை ஜெயிக்க வாரும். ஆமென்

## 104.

1. தேவ ஆசீர்வாதத்தோடே
அடியாரை அனுப்பும்,
வார்த்தை என்னும் அப்பத்தாலே
போஷித்து வளர்ப்பியும்.

2. இப்போ தும்மை தேடிச் சேர்ந்து
மனதாரப் போற்றினோம்,
மோட்சலோகத்தில் களித்து
உம்மை வாழ்த்தித் தொழுவோம். ஆமென்



# பரிசுத்த நற்கருணை.

## 105

1. ஆத்துமாவே, உன்னை ஜோடி,
அந்தகாரத்தை விட்டோடி
ஒளியண்டை வந்து சேரு,
மகிமை அடைந்து தேறு;
உனக்கின்று கடாட்சமுள்ள
கர்த்தர் தம்மை அன்பாய் இந்த
பந்தியில் புசிக்கத் தாறார்,
உன்னண்டைக்குத் தங்க வாறார்.

2. பொக்கிஷங்களை அளிக்கும்,
தயவாக வந்து நிற்கும்
உன் பத்தாவுக்காசையோடு
சீக்கிரம் எதிர்கொண்டோடு;
நெஞ்சின் வாசலைத் திறந்து,
நேசரே, என் கிட்ட வந்து
வாசம்பண்ணுமென்று சொல்லு,
அவரைப் பணிந்துகொள்ளு.

3. ஆ. இப்போஜனத்தின்மேலே
வாஞ்சை உண்டுமாறுவேலே,
நீர் சஞ்சீவியாய்க் கொடுக்கும்
ஊணின்மேல் பசியிருக்கும்;
இந்த ஜீவ பானத்தாலே
தாகம் தீர்க்க ஆசையாலே
எங்கிறேன், அத்தால் நன்றாக
நான் உம்மோடே ஐக்கமாக.

4. இயேசுவே, மகிழ்ச்சிக்கான
அன்பும் கிருபையுமான
பகலோனே, வானராஜா,
உண்மையான விசுவாச
பத்தியாய் என் ஆவி தேற
இந்தப் பந்திக்கு நான் சேர,
கடாட்சம் கூரும் என்றதாக
கேட்கிறேன் சாஷ்டாங்கமாக.

5. வான மகிமையை விட்டு
சிலுவையிலே மரித்து
உம்முடைய ரத்தம் சிந்த
உம்மில் தீயைப்போல் எரிந்த
அன்பினாலே நான் நிறைய,
எனக்கு நீர் உம்முடைய
மாமிசத்தை உண்கத் தாரீர்,
ரத்தமும் இறைக்க வாரீர்.

6. ஜீவனின் மெய் அப்பமான
இயேசுவே, ரட்சிப்புக்கான
இந்தப் பந்திக்கு வீணாக,
அல்லதெனக்குக் கேடாக,
நான் சேராமல், இதினாலே
உம்முடைய நேசத்தாலே
நம்பி, வானோரோடென்றைக்கும்
சாப்பிட எனக்களியும். ஆமென்.

## 106

1. என் பாவத்தின் நிவிர்த்தியை
உண்டாக்க, அன்பாய் ஜீவனை
கொடுத்துச் சிலுவையிலே
மரித்த தேவமைந்தனே!



2. அநேக பாவம் செய்தோனாய்
மா ஏழையும் ஈனனுமாய்
இப்போஜனத்துக்கு வரும்
அடியேனைத் தள்ளாதேயும்.

3. நீர் பாவிக்கு இரட்சகர்,
நீர் யாவையும் உடையவர்,
நீர் பரிகாரி, நீர் எல்லாம்;
குணம் தர உம்மாலேயாம்.

4. அதிப்படியிருக்கச்சே,
குணம் அளியும், இயேசுவே,
அசுத்தமான யாவையும்
நிவிர்த்தியாக்கியருளும்.

5. நான் உம்மை, வானத்தப்பமே,
மகா வணக்கத்துடனே
புசித்து, உம்மை என்றைக்கும்
நினைத்துக்கொண்டிருக்கவும்.

6. பொல்லாத துர்க்குணங்களை
அவித்து, என் இதயத்தை
அன்பாலும் பத்தியாலேயும்
நிரப்பி, ஜோடித்தருளும்.

7. நல் நாற்றை என்னிலே நடும்,
ஆகாததைப் பேர்த்தருளும்;
என் நெஞ்சில் வந்து, என்னிலே
எப்போதும் தங்கும், இயேசுவே.

8. நான் இவ்விருந்தின் நன்மையால்
சுத்தாங்கனும், பிதாவினால்
மன்னிப்பை, கிருபையையும்
அடையக் கட்டளையிடும்.

9. நான் சாகும்போதென் ஆவியை
மோட்சானந்தத்தில் உம்மண்டை
சேர்த்தென்னை உம்மால் என்றைக்கும்
திருப்தியாக்கியருளும். ஆமென்.

## 107

1. ஆ, இயேசுவே, உம்மாலே
நான் மீட்கப்பட்டவன்;
உம் திரு ரத்தாலே
நான் சுத்தமானவன்;
ஜீவனை உத்தரித்து
என் பாவத்தைத் தீர்த்தீர்,
உம் சாவால் சாவை வென்று
நீர் என்னை ரட்சித்தீர்.

2. நான் உம்மால் என்றும் வாழ,
இப்பந்தியில் நீரே
என் ஆவிக்கேற்றதான
அமிர்தம் தாறீரே;
அன்பாய் என்னைக் கண்பார்த்து
என் பாவம் மன்னியும்,
என்னை அரவணைத்து
ஆசீர்வதித்திடும்.



3. நீர் இன்னும் என்னில் காணும்
பொல்லாங்கு யாவையும்
அகற்றிப்போட வாரும்,
என் நெஞ்சில் தங்கிடும்;
நான் உம்மைப் பற்றிக்கொள்ள
எனக்கருள் செய்யும்,
மிகுந்த தாழ்மையான
நெஞ்சென்னில் சிஷ்டியும்.

4. நல் மீட்பரே, உம்மோடே
நான் ஐக்கியமாகவும்,
உம் மாம்சம், ரத்தத்தாலே
நான் தேற்றப்படவும்,
உம் ஆவியை அன்பாக
என் மேல் பொழிந்திடும்,
சாமட்டும் உண்மையாக
சேவிக்க அருளும். ஆமென்.

## 108

1. தேவா, இன்றும்மைத் தாழ்மையாய்
சேவித்தடியார் செய்திடும்
ஜெபங்களுக்கிரக்கமாய்
செவிகொடுத்து, ரட்சியும்.

2. பசியால் சாகும் மாந்தர்க்கு
புசிக்கத் தாறேன் என்றீரே;
உம் வார்த்தை நம்பி, பந்திக்கு
வந்தோம், பசியை ஆற்றுமே.

3. தவனத்தால் களைத்தோரை
ஜீவத் தண்ணீர்க்கழைத்தீரே;
என்றைக்கும் ஊறும் நீரூற்றை
இன்றெங்கள் நெஞ்சில் தாருமே.

4. பாரச் சுமை சுமந்தோரை
வாருமென்றன்பாய்க் கூப்பிட்டீர்;
இன்றெங்கள் பாவப்பாரத்தை
அன்பாக நீக்கித் தேற்றுவீர்.

5. உம் மாம்சம், ரத்தம் உட்கொண்டால்
சம்பூர்ண ஜீவன் உண்டென்றீர்;
உம் ஆவியின் அருளினால்
உம்மை இப்பந்தியில் தாரீர்.

6. அன்பே, இச்சாக்ரமெந்தினால்
எம் நரகம், பாவம் நீங்கவும்,
அதினால் உண்டாகும் பெலத்தால்
சாத்தானை வெல்லவும் செய்யும். ஆமென்.

## 109

1. அன்பாம் பிதாவே, எங்கள்
மன்றாட்டுக்கிரங்கும்,
உன்னத ஆசீர்வாதம்
எங்கள்மேல் பொழியும்;
சித்தம் வைத்தடியார்க்கு
சுத்தாங்க நெஞ்சமும்,
தோத்ரபலி செலுத்த
பாத்ரமும் அருளும்.

2. கிறிஸ்தேசுவே, இந்நேரம்
கிருபையாய் வாரும்,
நீர் வழிகாட்டியானால்
சோர்வின்றி செல்லுவோம்;
தஞ்சமென்றடைந்தோர்க்கு
தாரகம் என்றீரே,
மன்னாவே, ஜீவஊற்றே,
இன்றெம் கதி நீரே.



3. சுத்தாவியே, சிஷ்டிகா,
சித்தம் வைத்திறங்கும்,
மாசுகள் யாவும் சுத்த
இருளைப் போக்கிடும்;
அருள் மழை அன்பாய் நீர்
பொழிந்தால், நாங்களும்
கிறிஸ்தேசுவின் சரீரம்
பெற்றுய்யில் தங்குவோம்.

4. திரியேக தேவா, சுவாமி,
அருளின் மெய் ஊற்றே,
இத்திருப்பந்தி சேர
பாத்ரர் இங்கில்லையே;
மாறா உம் அன்பை நோக்கி,
மா தாழ்மையாய் வாறோம்,
எம் பாவம் யாவும் போக்கும்,
அப்போ பயப்படோம். ஆமென்.

# ஞானஸ்நானம்.

## 110

1. இளைஞர் சேரட்டும்,
தடுக்கவே வேண்டாம்,
பரத்திலே சுதந்தரம்
இவர்களுக்குண்டாம்.

2. என்றேசு பாலரை
அன்பாக ஏந்தினார்,
அவர்கள்மேல் தம்கரத்தை
வைத்தாசீர்வதித்தார்.

3. ஆ, இயேசுவே, அன்பாய்
இப்பிள்ளை எற்றிடும்,
உமக்கே என்றும் பிள்ளையாய்
இருக்கச் செய்திடும்.

4. பாவத்தை வெறுத்து,
உம்மை நேசிக்கவும்,
சாத்தானோடென்றும் போர்செய்து
ஜெயிக்கவும் செய்யும்.

5. உம்மையே சேவித்து,
உம்மில் நிலைக்கவும்,
மோட்சத்தில் என்றும் உம்மோடு
ஆளவும் அருளும். ஆமென்.

## 111

1. ஆ, சுவாமி, என் பிறப்பினால்
உமக்குத் தூரமான
நான் மீண்டும் ஞானஸ்நானத்தால்
உமக்குப் பிள்ளையான
சீர்மாறுதல் மா பாக்கியம்,
ஆ, உமக்கென்றும் தோத்திரம்,
பிதா, குமாரன், ஆவி!

2. நீர் என்னைத் தள்ளிப்போடவும்
தண்டிக்கவும் என் பாவம்
என்னை நேரஸ்தனாக்கியும்,
நீர் என்மேல் பரதாபம்
வைத்தென்னை உம்மண்டையிலே
அன்பாகச் சேர்த்துக்கொண்டீரே,
ஆ, தயவுள்ள சுவாமி!



3. இத்தாலே என் பிதா நீரே,
நான் உம்முடைய பிள்ளை,
பலட்சயத்தை என்னிலே
நீர் கண்டும் மோசமில்லை;
நான் பக்தியாய் என் தாழ்மையில்
மன்னிப்புக் கேட்டுக்கொண்டால்,
நீர் என் ஜெபத்தைக் கேட்பீர்.

4. திரியேகரான உம்மையே
நான் முழு பக்தியாக
பணிந்து, உமக்கேற்கவே
நடப்பேன் என்றதாக
ஞானஸ்நானத்தால் அடியேன்
உடன்படிக்கை பண்ணினேன்,
இதை நினைப்பேனாக.

5. பிதா, குமாரன், ஆவியே,
நான் உம்மைப் பற்றி வந்து,
நான் அன்று தந்த வார்த்தைக்கே
இசைவாய்த்தான் நடந்து,
முடிய பாவத்துக்கென்னில்
இடம் கொடாமல், மோட்சத்தில்
உம்மண்டை சேர்வேனாக. ஆமென்.

# திடப்படுத்தல்.

## 112

1. என் நெஞ்சை, சுவாமி, உமக்கே
ஈவாய்ப் படைக்கிறேன்,
நீர் இந்தக் காணிக்கையையே
கேட்டீர் என்றறிவேன்.

2. என் மகனே, உன் நெஞ்சைத் தா,
நீ இக்கட்டினைத் தீர்,
வேறொன்றும் நீ சுகப்பட
மாட்டாயே, என்கிறீர்.

3. அப்பா, நீர் அதைத் தயவாய்
அங்கீகரிக்கவும்;
நான் அதை உள்ளவண்ணமாய்
தாறேன், அன்பாயிரும்.

4. நான் உண்மையாய்க் குணப்பட
அதை நொறுக்குமேன்,
இத்தயவை நீர் காண்பிக்க
பணிந்து கேட்கிறேன்.

5. ஆம், என் கல் நெஞ்சை நீர் நன்றாய்
உருக்கி, முழுதும்
புலம்பலும் கண்ணீருமாய்
கரையப் பண்ணவும்.

6. உபத்திரவங்கள் வரச்சே
நீர் ஆதரித்திரும்,
நீர் என்னை நம்பிக்கையிலே
நற்கெட்டியாக்கவும்.

7. நீர் என்னைக் கிறிஸ்தின் சாயலாய்
எல்லாருக்குள்ளேயும்
மென்மேல் புறம்பும் உள்ளுமாய்
நற்சாந்தமாக்கவும்.

8. போ, லோகமே, போ, பாவமே;
என் நெஞ்சு உமக்கு
எக்காலத்துக்கும், இயேசுவே,
கொடுத்திருக்குது.

ஆமென்.



## திரு விவாகம்.

## 113

1. தேவாதி தேவா, சர்வ
ஜீவ காருண்யரே,
ஆதாமுக்கேவை தந்து
ஏதேனில் வைத்தீரே.

2. இப்பெண்ணை, மாப்பிள்ளையை,
அப்பா, நீர் தயவாய்
அணைத்தாசீர்வதித்து,
இணைத்திடும் ஒன்றாய்.

3. ஒன்றான தேவமைந்தா,
இன்றெங்கள் தஞ்சம் நீர்;
அன்பாய் இவர்க்கிரங்கி,
இன்பங்கள் அருள்வீர்.

4. கானாக் கல்யாண வீட்டில்
பானக் குறை தீர்த்தீர்
இங்கும் அருள்பிரசன்னம்
தங்கத் தயை செய்வீர்.

5. சுத்தாவியே, இவர்க்குள்
சித்தம் நிலைத்திருப்,
முற்றும் நிறைந்த பாக்யம்
பெற்றோங்கச் செய்திடும்.

6. பிதா, சுதன், ஆவிக்கு
சதா காலங்களும்
மங்காப் புகழ்ச்சி, கீர்த்தி
என்றும் உண்டாகவும்.

ஆமென்.

## சுவிசேஷ வேலை.

### 114

1. ஆதியில் இருளை
அகற்றி, ஒளியை
சிருஷ்டித்த நீர்,
வேதத்தின் ஒளியை
பரப்பி, மருளை
அழித்து, செங்கோலை
செலுத்திடும்.

2. மீட்பை உண்டாக்கவும்
மாந்தரைக் காக்கவும்
பிறந்த நீர்,
பாவத்தை அழித்து,
சாத்தானை மிதித்து,
எல்லாரை ரட்சித்து,
காப்பாற்றிடும்.

3. பாவியின் நெஞ்சத்தை
திருப்பி, ஜீவனை
கொடுக்கும் நீர்,
சபைகள் யாவையும்
ஆண்டு நடத்தவும்,
ஒன்றாய் இணைக்கவும்
இறங்கிடும்.

4. ஞானம் நிறைந்தவர்,
அன்போடு வல்லவர்,
திரியேகரே!
ராஜ்ஜியம், வல்லமை,
நித்திய மகிமை
உமக்கே உரிமை,
என்றைக்கென்றும்.

ஆமென்.



### 115

1. மெய் ஒளியான இயேசுவே,
இருளிலுள்ளோர்மேலே
இரங்கி, அவர்களுக்கும்
வெளிச்சம் காட்டியிடும்.

2. பொய்ப்போதகத்தால் ஆருக்கு
தப்பாயிருக்கும் நினைவு
உண்டோ, அவர்கள் நெஞ்சிலே
மெய் வரப்பண்ணும், இயேசுவே.

3. காணமற்போன பாவியை
அன்பாய் நீர் தேடி, அவனை
குணப்படுத்தியருளும்,
கெடாப்படிக்கு ரட்சியும்.

4. செவியைச் செவிடருக்கும்,
ஊமையருக்கு வாயையும்
நீர் தாரும், உம்மைத்தான் அப்போ
பின்செல்லுவார்கள் அல்லவோ?

5. பிரிந்துபோன யாவரை
பார்த்தவர்கள் மயக்கத்தை
தெளியப்பண்ணியருளும்,
அந்தகருக்குக் கண் கொடும்.

6. அடியாரோடெவர்களும்
அவ்வன்புக்காக என்றைக்கும்
கர்த்தராம் உம்மையே அப்போ
புகழுவார்கள் அல்லவோ?

ஆமென்.

## 116

1. பலத்த தேவ வார்த்தையை
எல்லா இடமுமாக,
ரட்சிப்பின் சுவிசேஷத்தை
எல்லாருக்குள்ளுமாக
விளங்கப்பண்ணும், இயேசுவே,
எல்லாரையும் ரட்சிக்கவே
பூலோகத்தில் பிறந்தீர்.

2. கர்த்தாவே, பொய் மதங்களை
நியாயந்தீர்த்தழித்து,
கெட்டோர்க்கு ஜீவ மார்க்கத்தை
அன்பாகவே காண்பித்து,
எல்லாவகைத் துன்மார்க்கமும்
ஒழிந்துபோகச் செய்திடும்,
அதற்காய் பாடுபட்டீர்.

3. கர்த்தாவே, எந்தத் தேசமும்
உமக்குள்ளாவதாக,
உம்மை எல்லா ஜனங்களும்
வணங்குவார்களாக;
நீர் மாத்திரம் மெய்த்தேவனே,
புகழ்ச்சி யாவும் உமக்கே,
நீர் என்றும் எங்கும் ஆள்வீர். ஆமென்.

## 117

1. தேசத்தார்கள் யாரும் வந்து
சத்ய சுவிசேஷத்தை
கேட்டு, ஜோதியால் உணர்ந்து,
ஏற்றுக்கொள்வார் என்றீரே;
ஆ, கர்த்தாவே,
வாக்கை நிறைவேற்றிடும்.



2. வையகம் எல்லாம் மிகுந்த
இருளால் நிறைந்தது,
அதனால் மாந்தர்க்குள் புகுந்த
கேடு அளவற்றது;
ஆ, கர்த்தாவே,
மாந்தரைக் கண்பார்த்திடும்.

3. உம்முடைய வார்த்தை கூற
போகும் போதகர்களை
நீர் பலப்படுத்தி, நல்ல
ஞானம் தாரும், மீட்பரே;
உமதாவி
மெய்ப்பர் மேலே ஊற்றிடும்.

4. வார்த்தை கேட்கும் ஊர் ஜனங்கள்
சத்யத்தை அறியவும்,
அவர்க்குள்ள பொய் மதங்கள்
யாவும் நீங்கிப்போகவும்,
உமதாவி
எல்லார் மேலும் ஊற்றிடும். ஆமென்.

### மரணம்.

## 118

1. என் ஜீவன் கிறிஸ்துதாமே,
அத்தாலே எனக்கு
என் சாவாதாயமாமே,
நெஞ்சே, மகிழ்ந்திரு.

2. நான் இயேசு வசமாக
சேர்ந்தென்றும் வாழவே,
மகா மகிழ்ச்சியாக
பிரிந்து போவேனே.

3. பாடற்றுப்போம் இக்காலே
என் நோவின் முடிவு;
என் பாவம் இயேசுவாலே
நிவர்த்தியாயிற்று.

4. நான் பேச்சு மூச்சில்லாமல்
குளிர்ந்து போகச்சே,
என் ஆசையைத் தள்ளாமல்
கண்ணோக்கும், கர்த்தரே.

5. விளக்குடை கொழுந்து
அவியும்போல், என்னில்
விளுவெல்லாம் அறுந்து
கலைந்து போகையில்,

6. அப்போ என்றும் அமைந்து
கலக்கம் அன்றியே,
நான் நித்திரை அடைந்து
தூங்கட்டும், இயேசுவே.

7. நான் உம்மைக் கெட்டியாக
பிடித்தும்முடனே
அனந்த பூரிப்பாக
வாழட்டும், இயேசுவே. ஆமென்.

## 119

1. நாள் போகுது, போகட்டுமேன்
அநித்தியத்தை நான் நாடேன்;
நான் பற்றிக்கொள்ளும் நித்திய
பொருள் என் பரம பிதா.



2. என் ஆவிக்கென் நெருக்கமும்
என் நோவும் பாரமாகியும்,
பாக்கியின் நினைவு
மா ஆறுதல் உண்டாக்குது.

3. இக்கட்டால் என் மனதிலே
வியாகுலம் உண்டாகச்சே,
அதென்னை மோட்ச ஊருக்கு
நேரே நடக்க ஏவுது.

4. இழவுக்குக் கோவில் மணி
அடிபடுகிற தொனி
என் ஆவிக்கின்பம், எனக்கு
பாத்தை நினைப்பூட்டுது.

5. ஓர் நேசன் சென்று போகையில்
நான் துக்கப்பட்டும், மோட்சத்தில்
நானும் இனி பிரவேசிப்பேன்
என்றென்னை ஆற்றித் தேற்றுவேன்.

6. சவங்கள் கல்லறைகளில்
இக்கட்டும் நோவுமன்னியில்
கிடக்கும், நானும் அப்படி
கிடந்து தூங்குவேன் இனி.

7. எத்துன்பத்துக்கும் நீங்கலாய்
என் ஆவி இயேசுவசமாய்
இருக்கும், என் எலும்புக்கும்
புது உயிர் தரப்படும்.

8. என் சாவில்தான் என் செல்வமும்
அளவில்லா மகிழ்ச்சியும்
துவக்குது, புவியை நான்
விடும்போதே நான் மோட்சவான்.

9. அப்போ பிரிந்த ஆத்துமம்
நல்லதானாலே பாக்கியம்
நிறைந்த பரதீசுக்கு
கொண்டுபோகப்படுகுது.

10. அத்தால் நல்லாறுதல் உண்டே,
என் ஆவிக்கு அச்சமே
கர்த்தரைப் பார்க்கும் மேன்மைக்கு
வழி திறந்துபோகுது.

11. அவர்க்கும் ஆட்டுக்குட்டிக்கும்
எல்லா வணக்கத்தோடேயும்
அங்கே ஏராளமானவர்
துதி செலுத்தி நிற்கிறார்.

12. என் ஆவியில் அப்பரம
இன்பதாகத்தீர்க்கக் கேட்கிற
நான் இந்த லோகத்தை இனி
இச்சித்துக்கொள்வதெப்படி?

13. என் மீட்பரை என் ஆவியால்
நான் பற்றிக்கொண்டபடியால்,
இப்பூமியின் நலம் பொலம்
எல்லாம் பின்னான காரியம்.

14. அங்கே சேர்ந்தோரின் பாக்கியம்
மா உறுதி, மா பத்திரம்;
பரத்தின் நன்மை என்றைக்கும்
இருக்கும், இன்பத்தைத் தரும்.

15. மோட்சானந்தத்தின் ஒளிவு
அங்கே வந்தேறினோருக்கு
மா ஆச்சரிய அழகும்
சோதியுமாய்ப் பிரகாசிக்கும்.



16. ஆதிமுதல் பரகதி
அடைந்தவர்களோடினி
நான் அங்கே வாழ்வதெனக்கு
மா இன்பமாயிருக்குது.

17. வெண்வஸ்திர சிங்காரத்தை
தரித்த மோட்சவான்களோ
நான் சேர்ந்து, அவர்களோடே
சகவாசம் பண்ணப்பெற்றவன்.

18. நான் இரத்தசாட்சிகளும்
மகாத்துமாக்கள் யாவரும்
பெரிய மகிமையுடன்
இருக்கும் வாழ்வைப் பார்ப்பவன்.

19. நானும் அவர்களோடினி
தேவாட்டுக்குட்டிக்குத் துதி
செலுத்தப் போகிறேன், எனக்கும்
அப்பாக்கியம் அகப்படும்.

20. இரட்சிக்கப்பட்ட ஜீவனே,
என் ஆவி நாடும் செல்வமே,
உன்னால் எப்போ நான் பூரிப்பேன்?
எப்போ நான் அங்கே சேருவேன்? ஆமென்.

## 120

1. என்னை மீட்டுத் தாங்கிய
இயேசு ஜீவனுள்ளோராமே;
அவரை அறிந்த
நான் மகிழ்ந்திருக்கலாமே;
என்னைச் சாவின் ராத்திரி
ஏன் கலக்குது இனி?

2. ரட்சகர் பிழைக்கிறார்,
நானும் அவரோடிருந்து
வாழ்வேன். சாவை நீக்குவார்,
எனக்கென்ன பயமுண்டு?
சிரசை அவயவம்
சேர்வது அவசியம்.

3. நம்பிக்கையின் கட்டினால்
அவரோடே கட்டப்பட்டேன்,
விசுவாசப் பத்தியால்
அவரை அணைக்கக் கற்றேன்;
சாவால் நானும் அவரும்
வெவ்வேறாகோம் என்றைக்கும்.

4. நான் சதைதான், ஆகையால்
எப்போதோ தூளாகச் சாவேன்,
ஆனால் மீண்டும் அவரால்
மண்ணை விட்டுயிர்த்தேறுவேன்,
நித்தம் மகிமையிலே
அவரோடிருக்கவே.

5. இங்கே நான் தவிக்கிறேன்,
அங்கே மகிமை தரிப்பேன்;
மண்ணில் மண்ணாய்த் தங்கினேன்,
விண்ணில் விண்ணோனாய்க் கெலிப்பேன்;
ஜீவ கூறுடைய நான்
அங்கே ஆவி அங்கத்தான்.

6. ஆனால் லோக இச்சையை
இப்போதான் மிதித்துப்போடு,
ஆவியே, நீ இயேசுவை
சேர்ந்து, என்றும் அவரோடு
தங்கும் வாழ்வுக்கு
போக ஆயத்தப்படு. ஆமென்.



## 121

1. ஜீவநாதா, லோகம் மீட்க
பாவப்பலியான நீர்,
சாவின் சாபத்தைத் தொலைக்க
உயிர்த்தீர்.

2. மரணம் அலைக்கழிக்கும்
தருணத்தில், தேவா, நீர்
சரணமென்றோடி வாறோம்,
தேற்றுவீர்.

3. துன்பம், சோதனை முடித்து,
இன்பலோகம் சேர்த்திடும்
அன்பின் தூதன் சாவு என்று
நம்பவும்.

4. பாவப்பலன் சாவென்றாலும்,
தேவரீரைப் பற்றினோர்
சாவா ஜீவன் பெற்று, என்றும்
வாழுவார்.

5. திக்கற்றோர்க்கு நீரே தஞ்சம்,
இக்கட்டில் சகாயர் நீர்;
துக்கிப்போரின் கண்ணீர் யாவும்
மாற்றுவீர்.

6. சத்துருவை எதிர்த்து வென்று
நித்திரை செய்வோர் ஆத்துமம்
நித்திய ஒளியண்டை சேர்ந்து
பூரிக்கும்.

7. எங்கள் உற்றார் முன்னே சென்று
தங்கும் பதிசேரும்
பங்கெமக்கன்பாய் அளித்து,
சேர்த்திடும்.

8. நீதி வெண் உடை தரித்து,
ஜோதியாய்ப் பிரகாசிப்போம்;
அந்நேரம் உம்மைப் பணிந்து,
போற்றுவோம். ஆமென்.

## நியாயத்தீர்ப்பு.

## 122

1. எல்லாரை நியாயந்தீர்ப்பவராய்,
கர்த்தாவின் குமாரனை
அதிபதி பிரஸ்தாபமாய்
இறங்கி வாறதான
நாள் கிட்டும், அப்போ தீயிலே
எல்லாம் கரைந்து போகச்சே,
களைப்பு அரிதாகும்.

2. எக்காளத்தின் முழக்கங்கள்
எத்திக்கிலும் தொனிக்கும்,
அசுப்பில் செத்தவர் திரள்
எல்லாம் எழுந்து நிற்கும்,
உயிருடன் இருந்தோரோ
ஓர் நிமிஷத்திலே அப்போ
அழியா ரூபமாவார்கள்.



3. எல்லாரின் சிந்தை செய்கையும்
வெளிப்படுவதற்கு,
இரண்டு புஸ்தகங்களும்
திறந்தவர் அவர்க்கு
நடந்ததுக்குத் தக்கதாய்
பலன் அளிக்க காலமாய்
கொடுக்கப்பட்டுப் போகும்.
4. கர்த்தாவின் வேத வார்த்தையை
எண்ணாமல், உலகத்து
பொய்வாழ்வு மேன்மை செல்வத்தை
தொடர்ந்துவந்தோர்பற்று
இச்சித்தவர்களுக்கையோ!
அவர்கள் சாத்தானோடப்போ
உபாதைக்குள்ளாவார்கள்.
5. நான் நீதிமான்களுடனே
நீர் எங்களுக்குத் தேடி
இறந்த பரதீசிலே
சந்தோஷமாக ஏறி
பிழைக்க, என்னை நீர்தாமே,
ஆசீர்வதிக்கப்பட்டோனே,
வா, என்றப்போதழையும். ஆமென்.

## மோட்சம்.

## 123

1. ஓய், எருசலேமியாரே,
விழியுங்கள், மெய் மார்க்கத்தாரே;
இப்பாதி ராத்திரியிலே
பர்த்தா வாறார்; வேகமாக
எழுந்திருங்கள், புத்தியாக
இருக்கும் கன்னிகள் எங்கே?
தீவட்டிகளையே எடுத்தெதிர்கொண்டே
போம் நேரமாம்
என்றிரவில், அலங்கத்தில்
நிற்பாரின் கூக்குரல் உண்டாம்

.2. சீயோனுடைய மனைவி
சந்தோஷம் மனதில் பாவி,
விழித்தெழுந்திருக்கிறாள்;
அவள் நேசர் மேன்மையோடும்
மிகுந்த தயவோடும்
வெளிப்படுகிறதினால்
இலேசாய் நிற்கிறது, ஆ, சுவாமி, உமக்கு
ஓசியன்னா,
அடியாரும் செம்பிக்கும்
கதிக்கு வாரோமே, கர்த்தரே.

3. சரமண்டலங்களாலும்
நரர் அதரங்கள் நாவினாலும்
துதிக்கப்பட்டோர் தேவரீர்;
மோட்ச நகர் மகா விருந்துக்கு,
நீர் எங்களை வானோர்களுக்கு
உம்மாலே தோழராக்கினீர்;
அவ்வாழ்வைக் கண்டோர் ஆர்?
காதாலே கேட்டோர் ஆர்?
நாம் உன்னத
சந்தோஷமும் மகிழ்ச்சியும்
அடைகிறோம், அல்லேலூயா. ஆமென்.

## 124

1. புல்லைப்போல் எல்லாரும் வாடி
போகிறோம், சாசார் இல்லையே;
சாவில்லாமல் சீரும் மாறி
புதிதாகக் கூடாதே;
நீதிமான்கள் பூலோக
வாழ்வின் மகிமைக்குப் போக
இச்சரீர பாவமெல்லாம்
முன் அழியத் தேவையாம்.



2. ஆகையால் சந்தோஷமாக
சுவாமிக்கேற்கும் வேளையில்
நானும் போகிறேன், இதுக்காக
துக்கம் இல்லை. எனெனில்
எனக்காய் குத்துண்டிறந்த
இயேசுவால் மன்னிப்பைக் கண்ட
எனக்கவர் காயங்கள்
சாவில் போர்க்க ஆறுதல்.

3. இயேசு எனக்காய் மரித்தார்,
அவர் சாவென் லாபமாம்;
எனக்கு ரட்சிப்பளித்தார்,
ஆகையால் சிங்காரிப்பாய்;
மேன்மை தேவ மண்டலத்தை
சேர்ந்து, ஏகதிரித்துவத்தை
நித்தம் பார்க்க, மண்ணை நான்
விட்டுப்போக ஆசை தான்.

4. அங்கே மெய்ச் சந்தோஷமுண்டு,
அங்கே கோடி நீதியர்
வான ஜோதியால் சூழுண்டு
அப்போதே கொண்டாடுவார்;
தூதரோடொன்றாய்க் குலாவி
ஆ, பிதா, குமாரன், ஆவி,
சுத்தர், சுத்தர், சுத்தரே
என்று பாடுவார்களே.

5. அங்கே கோத்திரப் பிதாக்கள்,
ஞானதிவ்விய புருஷர்,
இயேசு சுவாமியின் சீஷர்கள்,
யாவர் வாசம்பண்ணுவர்;
சகல சன்மார்க்கத்தார்கள்
அங்கே சேர்ந்திருக்கிறார்கள்,
அங்கே என்றும் புதிய
இன்பச்சொல், அல்லேலூயா.

6. ஆ, எருசலேமே, வாழ்க,
உன் மினுக்கே அழகு;
உன்னில் தோத்திர இன்னார
வாத்தியம் தொனிக்குது;
ஆ, சந்தோஷம், ஆ, களிப்பு,
இப்போ பகலோன் உதிப்பு,
இப்போ நித்த ஒளிவு
எனக்கு விடியுது.

7. அந்த மோட்ச மகிமையை
அப்போதே கண்ணோக்கினேன்,
வானவரின் வெண் உடையை
பெற்று, பூண்டுகொள்ளுவேன்;
நான் பொற்கிரீடத்தைத் தரிக்க,
மானா வாழ்வுமாய் செலிக்க,
சுவாமி ஆசனத்துக்கு
சேரும் வேளை வந்தது. ஆமென்.

## 125

1. எருசலேம் என் ஆலயம்,
ஆசித்த வீடதே;
நான் அதைக் கண்டு, பாக்கியம்
அடையவேண்டுமே.

2. பொற்றளம் போட்ட வீதியில்
எப்போதுலாவுவேன் ?
பளிங்கு போன்ற ஸ்தலத்தில்
எப்போது பணிவேன் ?

3. எந்நாளும் கூட்டம் கூட்டமாய்
நிற்கும் அம்மோட்சத்தார்
கர்த்தாவைப் போற்றிக் களிப்பாய்
ஓய்வின்றிப் பாடுவார்.



4. நானும் அந்நன்ன கூட்டத்தில்
சேர்ந்தும்மைப் போற்றவே
வாஞ்சித்து, லோக துன்பத்தில்
களிப்பேன், இயேசுவே.

5. எருசலேம் என் ஆலயம்,
நான் உன்னில் வாழுவேன்;
என் ஆவல், என் அடைக்கலம்,
எப்போது சேருவேன் ? ஆமென்.

## பரிசுத்தவான்களின் திருநாள்.

## 126

1. மெய்பக்தரே, போர் முடித்து
ஓய்ந்தீர் மா வெற்றி சிறந்து;
சர்வாயுதத்தைக் களைந்தீர்,
தேவாதி தேவன்முன் வைத்தீர்.
மெய்ப்பாக்யர் நீர், என்றும் வாழ்வீர்,
நம் மீட்பர்பாதம் சேர்ந்தோய்ந்தீர்.

2. மெய்பக்தரே, உம் ஜீவோட்டம்
முடிந்ததால் இளைப்பாறும்;
நோய், துன்பம், கஷ்டம், கவலை,
ஓயாப் பயமும் அங்கில்லை;
மெய்ப்பாக்யர் நீர், என்றும் வாழ்வீர்,
மேலோக வீடு போய்ச் சேர்ந்தீர்.

3. மெய்பக்தரே, உம் கப்பலை
ஜெயமாய்ச் சேர்த்தீர் அக்கரை;
காற்றடித்தலை மோதியும்
சற்றும் விட்டீரோ தைரியம்?
மெய்ப்பாக்யர் நீர், என்றும் வாழ்வீர்,
நித்யானந்தத் துறை சேர்ந்தீர்.

4. மெய்பக்தரே, மண்ணும் தேகம்
உயிர்த்தெழும்பும் நாள்மட்டும்,
எம் இயேசு வேந்தர் ஆணைக்காய்
ஏங்கித் தவிக்கிறீர் மெய்யாய்;
மெய்ப்பாக்கியர் நீர், ஆர்ப்பரியும்,
மணாளர் வாரார் சீக்கிரம்.

5. அருளாம் தேவா, கண்பாரும்,
கிறிஸ்தேசுவே, கேட்டருளும்,
சுத்தாவி, எங்களை என்றும்
சத்ய வழியில் நடத்தும்;
மெய்பக்தராய் உம்மோடென்றும்
மோட்சத்தில் வாழச் செய்திடும். ஆமென்.

## 127

1. லோக ஜீவன் நிலையற்ற
புகைக்கு ஒப்பானதே:
வாடிப்போகும் பூவைப்போல
அது மாறிப்போகுதே;
நெஞ்சமே, பரத்தைப் பார்;
இயேசு சாவை ஜெயித்தார்.

2. லோகம், மாம்சம், சாத்தானோடு
பூமியில் போராட்டமாம்;
விண்ணில் வெற்றி சிறந்தோர்க்கு
நீங்காச் சமாதானமாம்;
நெஞ்சமே, பரத்தைப் பார்,
இயேசு சாத்தானை வென்றார்.



3. ஆசனத்தைச் சூழ நிற்கும்
தூதர் கோடா கோடியாய்
மீட்பர் அன்பைப் போற்றி, என்றும்
பாடுவார்கள் இன்பமாய்;
நெஞ்சமே, பரத்தைப் பார்,
இயேசு வாசல் திறந்தார்.

4. அந்தத் தூத சேனையோடு
பக்தர் சேர்ந்து பாடுவார்,
தம்மை மீட்ட அன்பைப் போற்றி
தேவனை ஆராதிப்பார்;
நெஞ்சமே, பரத்தைப் பார்,
இயேசு என்றும் ஆள்கிறார். ஆமென்.

## 128

1. வெண்மை அங்கி தரித்து
சுடர் ஒளியுள்ளோர் யார்?
தேவனை ஆராதித்து
பூரிப்போர் களிப்போர் யார்?
சிலுவையை எடுத்து,
இயேசுவின் நிமித்தமே
யுத்தம் பண்ணிப் பொறுத்து,
வென்றோர் இவர்கள் தானே.

2. மா துன்பத்திலிருந்து
வந்து, விசுவாசத்தால்
தேவ நீதி அணிந்து
சுத்தமானோர், ஆகையால்
ஓய்வில்லாமல் கர்த்தரை
கிட்டி நின்று சேவிப்பார்,
கர்த்தர் சுத்தவான்களை
சேர்த்து ஆசீர்வதிப்பார்.

3. அவர் ஜெயங்கொண்டோராய்
இனி சோதிக்கப்படார்;
தீமை நீங்கி சுத்தராய்
பசிதாகம் அறியார்;
மத்தியான உஷ்ணம்
இனிப் பட மாட்டாதே,
அவர்கள் மெய்ப்பாக்கியம்
வளர்ந்தோங்கும் நித்தமே.

4. தேவ ஆட்டுக்குட்டியும்
அவர்களைப் போஷிப்பார்;
ஜீவதருக் கனியும்
ஜீவ நீரும் அளிப்பார்;
துன்பம் துக்கம் அழித்து
குறை யாவும் நீக்குவார்,
கண்ணீரையும் துடைத்து
அன்பினால் நிரப்புவார். ஆமென்.

## 129

பரி. கன்னிமரியம்மாள்.

1. தேவாதி தேவ மைந்தனும்
ஜீவனுமானவர்
கன்னியின் கர்ப்பத்தில் நின்றும்
இந்நிலம் தோன்றினார்.

2. நம் பாவசாபம் நீக்கிடும்
இம்மானுவேலரை
பெற்ற தாயாரின் பாக்கியம்
மற்றெவர்க்கும் இல்லை.



3. மனுஜர்க்குள் பாக்யர் என்றன்பாய்
தூதரும் வாழ்த்தினார்,
அவரோ முற்றும் தாழ்மையாய்
தேவனைப் போற்றினார்.

4. தேவா, எவ்வாழ்விலும் உம்மை
சேவித்துப் போற்றவும்,
அடியாராய் உம் சித்தத்தை
நடத்தவும் செய்யும்.

5. துன்பம் வந்தென்றன் ஆத்மத்தை
அம்பாய் ஊடுருவும்
தருணம், உம் சமுகத்தை
குருசில் தேடவும்.

6. சுத்தாவியால் உம் வார்த்தையை
காத்துக் கைக்கொள்ளவும்,
திருத்தாயாரின் பாக்யத்தை
பெறவும் அருளும். ஆமென்.

## 130

பரி. தேவதூதர்.

1. விண் ஜோதியாய் பிரகாசிக்கும்
எண்ணில்லா தூதர் சேனையும்
கிருபாசனத்தின் முன் நின்று,
திரியேக தேவன் போற்றுது.

2. சுத்தர், சுத்தர், சுத்தரென்று
பக்தியாய்ப் பாடும் தூதர்க்கு,
பூலோகத்தாரைத் தாங்கிடும்
வேலையைத் தாறார் தேவன்தாம்.

3. சாத்தானின் கண்ணி தப்பவும்
சத்ய வழி அடையவும்
பிதாவை நோக்கிக் கெஞ்சுவோர்
தூதரால் தைரியம் பெறுவர்.

4. இக்கட்டு, துன்பம், துக்கத்தில்
பக்கத்தில் நின்று ஆறுதல்
சொல்லி, மனதைத் தேற்றவும்
நல் தூதர் உண்டு நமக்கும்.

5. மரணத்தின் அவஸ்தையில்,
இருள் படரும் நேரத்தில்,
கர்த்தாவின் வாக்கை நெஞ்சிலே
தற்காப்போர் காவல் தூதரே.

6. பிரிந்துபோகும் ஆவியை
பரதீஸ் சேர்த்து, மீட்பரை
பணிந்து போற்றி வாழவே
துணைசெய்வோரும் தூதரே.

7. தூதரைத் தந்து நம்மையும்
ஜோதிக்கழைத்துச் சேர்த்திடும்
அன்பாம் திரியேக நாதர்க்கு
என்றும் புகழ்ச்சி தக்கது. ஆமென்

## பாலர் கீதங்கள்.

### 131

1. துள்ளித் துள்ளி, பாலனே,
கீதம் பாடி ஆடியே
இயேசுவண்டை ஓடி வா,
நேசர் அவர் அல்லவா?



2. பெத்லகேமில் பிறந்தார்,
பெற்றோருக்கு அமைந்தார்,
தீயதான குணங்கள்
உண்டோ? இல்லை, பாருங்கள்.

3. சிறுபிள்ளை நீயும் வா,
நெஞ்சை இயேசுவுக்குத் தா,
அவர் கையில் ஏந்துவர்,
ஆசீர்வாதம் தருவர்.

4. வாரும், சிறு பாலரே,
அஞ்சவேண்டாம், நேசரே;
துன்பம், துக்கம் நீக்குவார்,
கண்ணீர் யாவும் துடைப்பார்.

5. குற்றமில்லாப் பிள்ளையும்
தாழ்ந்த சிந்தையுள்ளோரும்
மோட்ச வீட்டில் சேரலாம்,
மீட்பரோடு வாழலாம்.

6. பொற்கிரீடம் அவரே
சூட்டுவார், என் தோழரே,
தேவதூதரோடும் நீர்
கீதம் பாடிப் போற்றுவீர். ஆமென்.

### 132

1. ஏழைப்பிள்ளை ஆயினும்
கர்த்தர் அன்ன வஸ்திரம்
தந்து என்னைக் காக்கிறார்,
என்னில் நேசம் வைக்கிறார்.

2. சித்திரை விழிப்பிலும்
வேலை செய்யும்போதிலும்
கர்த்தர் கூட இருப்பார்,
என்னை நித்தமும் காப்பார்.

3. வானம் ஆளும் ஆண்டவன்
என்னைப்போலப் பாலகன்
ஆகி, என்னை மீட்கவே
ஏழை ரூபெடுத்தாரே.

4. கூடு உண்டு பட்சிக்கு,
குழி உண்டு நரிக்கு,
தலை சாய்க்கத் தமக்கே
இடம் இல்லை என்றாரே.

5. இக்கிருக்குமட்டவர்
என்னை ஆசீர்வதிப்பர்;
ஜீவன் போகும் நேரத்தில்
சேர்த்துக்கொள்வர் மோட்சத்தில். ஆமென்;

## 133

1. என்னிடத்தில் பாலர் யாரும்
வரவேண்டும் என்றாரே;
வானராஜ்ஜியத்தோர் யாரும்
இப்பேர்ப்பட்டோர் ஆவாரே
என்று சொல்லி, திருக் கையில்
ஏந்திக்கொண்ட இயேசுவை
பாலர் யாரும் பூதலத்தில்
போற்றுவது கடமை.



2. "தாவீதின் குமாரனுக்கு
ஓசன்னா, மா ஸ்தோத்திரம்;
தேவனுக்கென்றும் மகிமை,
பூமியில் சமாதானம்,
மாந்தர்மேல் பிரியம்" என்று
நாமும் பாடிப் போற்றுவோம்,
"சுத்தர், சுத்தர், சுத்தர்" என்று
நாமும் பாடிப் பணிவோம்.

3. பாலனாய்ப் பிறந்த மீட்பர்
ராஜாவாக வருவார்;
கூடவரும் தேவதூதர்
மேகத்தின்மேல் தோன்றுவார்;
நல்லோர் தீயோர் இயேசுவாலே
தீர்ப்படையும் நேரத்தில்,
பாலர்போன்ற தன்மையோரே
பங்கடைவார் மோட்சத்தில். ஆமென்.

## 134

1. மா ஆரலோகத்தில் ஆனந்தமாய்,
மாசற்ற மோட்சத்தில் மின் ஜோதியாய்
நின்றென்றும் பாடுவார்,
மீட்பரையே போற்றுவார்,
கெம்பீரம் கொள்ளுவார்
வானோர்களே.

2. பேரின்ப வாழ்வையே நாடுங்களேன்;
நாம் அதில் சேரவே தாமதம் ஏன்?
நாம் களிகூருவோம்,
பாவம், துக்கம் நீங்குவோம்,
நிறிஸ்துவோடே தங்குவோம்,
என்றென்றுமே.

3. அங்குள்ளோர் எப்போதும் சந்தோஷிப்பார்,
இயேசுவின் பாலரும் சேர்ந்திருப்பார்,
வெற்றி சிறந்தோராய்,
பொற்கிரீடம் பெற்றோராய்,
நாதர்கள் தோழராய்
வாழ்ந்திருப்போம். ஆமென்.

## NATIONAL ANTHEM.

1. விண்மண்ணின் ராஜனே,
எம் சக்கரவர்த்தியை
காத்தருளும்;
எங்கெங்கும் வெற்றியும்,
செல்வம், நற்கீர்த்தியும்
நீண்டும் பெற்றாளவும்
கடாக்ஷியும்.

2. தேவா, உம் பேரருள்
பொழிந்து, தீர்க்காயுள்
ஈந்தருளும்;
செங்கோன்மை நீடிக்க,
க்ஷேமமும் பூரிக்க,
நாங்களும் களிக்க
கடாக்ஷியும்.

3. தேவா, சத்ருக்களை
ஜெயிக்க வல்லமை
தந்தருளும்;
யுத்தங்கள் ஓயவும்,
துரோகங்கள் மாயவும்,
மெய்யன்பு ஓங்கவும்
கடாக்ஷியும்.

## ஞானக்கீர்த்தனைகள்.

### கிறிஸ்துவின் ஜெனனம்.

### 135

1. வாரும் பெத்லகேம் வாரும்—வாரும்
வரிசையுடனே வாரும்,
வாரும் எல்லோரும் போய் வாழ்த்துவோம்
இயேசுவை
வாரும் விரைந்து வாரும்.

2. எட்டி நடந்து வாரும்—அந்தோ,
சற்று நிமிர்ந்து பாரும்,
பட்டணம்போல் சிறு பெத்லகேம் தெரியுது,
பாரும் மகிழ்ந்து பாரும்.

3. ஆதியிலதமேவை—அந்நாள்
அருந்திய பாவவினை
ஆ! திரித்வதேவன் மனிதத்துவ
மாயினர்; இது புதுமை!

4. விண்ணுலகாதிபதி—தீர்க்கர்
சொன்னதிலுள்ளபடி
மண்ணுலகில் மரி கன்னி வயிற்றினில்
மானிடனா யுதித்தார்.

5. சொல்லுதற் கரிதாமே—ஜோதி
சுந்தர சோபனமே
புல்லணையிற் பசு முன்னணையிற் பதி
பூபதிதான் பிறந்தார்.

6. மந்தை மாடடையில்—மாது
மரியகள் மடியதனில்
கந்தைத் துணியதை விந்தைத் திருமகன்
காரணமாயணிந்தார்.

7. தூதர் பறந்துவந்து—தேவ
துந்துமி யிசைப்பாட
மாதவ ஞானிகள் ஆயர்கள் பணிந்து
மங்கள மோதோட.

8. உன்னத மதிலுண்டாம்—தேவனுக்
கோசியன்ன மகிமை
இக்கிலமதிற் சமா தானமன் னுயிர்மேல்
எழில் பிரியம் பொறுமை.

## 136

பல்லவி.

மன்னுருவானார், ஆதி மன்னுருவானார்—ஏதுக்
தன்னிகரில்லாத ஆதி மன்னுருவானார்.

சரணங்கள்.

1. மன்னன் தாவீது வம்சக் கன்னியாம் மாது,—அந்தக்
கன்னியென்னும் அன்னைமரி தன்னிடமாக,
தன்னிடமாக, ஆதி தன்னிடமாக,— ஏதுக்

2. வல்லமைத் தேவன், தீர்க்கர் சொல்லமை ஜீவன்—சிறு
வெல்லமலைக் கல்லுறைந்த புல்லணையிலே,
புல்லணையிலே, ஆதி புல்லணையிலே.— ஏதுக்



3. எப்பொருள்மேலாகி நின்ற விற்பன்ன நூலான்—ஆதி
பொற்பரர், சுரர்பணிய, அற்புதமாக,
அற்புதமாக, ஆதி அற்புதமாக.— ஏதுக்

4. ஆயர்கள்கூட, உயர் ஞானிகள் தேட—யூத
ராயனென்றதாலே ஏரோதேயுமே வாட,
ஏரோதேயுமே வாட, ஏரோதேயுமே.— ஏதுக்

## 137

பல்லவி.

மைந்தன் பதத்தைத் துதிக்கிறோம்
மகத்வப் பெருக்கத் தொருத்வத் திறிஸ்து.

அனுபல்லவி.

சுந்தரம் பூண்டு எத்திற் பண்பின்
கருத்திற் களித்துக் குதித்தெக் களித்து.—
மைந்தன்

சரணங்கள்.

1. மூன்றும் பவத்தைத் தொலைக்கத் தான்
பூதற் புஸ்தகத்துற் பனத்துப் படிக்குத்
தந்தின் கணத்துக் குணத்துப் பாம்
பகத்தைக் கெடுத்துத் தரத்தைத் தகர்த்துச்
சிந்துங் குருதிக் கடற்குட்போய்த்
துளத்திற் களித்துக் குணப்பட் டவர்க்குச்
சொர்க்கம் பெறச் சத்துவத்துக்காம்
சுபத்தைத் தபத்தைப் பெலத்தைக் கொடுத்துப்
பந்தந்தான் சிறக்கத் துன்பம்
தவிர்த்துச் சிதைத்துக் கதித்துப் பெருத்த
பங்கந்தீர்த் துயிர்க்கத் தம்பம்
சொலிக்கப் புவிக்குள் தரித்திரத் துதித்த.—
மைந்தன்

2. எங்கும் பரத்திற் ஜெகத்திற் சூழ்ந்
தெழில் சத்துவத்தற் புதத்துட் டிறத்திற்
றங்குந் திரித்துவத் தொருத்வத்தாண்
டவர்க்குப் பரர்க்குப் புகழ்ச்சி, திரட்சி
பொங்கும் கனத்துற் பனத்திற்றும்
புரக்கத் தமக்குட் பரத்துக் கிறிஸ்துவை,
சங்கஞ் செழிக்கத் தழைக்கக்கோன்
ஜெகத்திற் பிறக்கத் திருப்பொற் பதத்துத்
துங்கன்தான் கருத்துக் கொண்டுஞ்
சமத்துச் சிதத்தட் சயத்து ஜெயத்துத்
தொண்டன் தீம் பொழித்துப் பொங்குஞ்
சினத்தைத் தணித்துப் பவத்தைப் பொறுக்கும்—
மைந்தன்

3. அண்டம் பரத்தைச் சிருட்டித்தாண்
டடக்கிச் சபத்தெத் தலத்தெப் பொருட்கட்
கந்தங் கொடுத்துத் திடுத்திச் சாந்
தகத்திற் களித்துச் சுகிக்க ஜனத்துக்
கன்பின் சமுத்திரப் பெருக்கத் தோங்
கரத்துத் திருக் கர்த் தருக்குப் பணித்திட்
டஞ்சுந் தபத்திற் ஜெபத்திற் றீங்
ககத்திக் கணத்திற் குணப்பட் டொழுக்கத்
தொண்டன் பாக்கியற்றச் சந்தத்
திருத்தித் திருநெல் லயத்துக் கவிக்குப்
பைம்பொன் பூண் டரிக்கத் தந்துஞ்
சமஸ்தக் கிறிஸ்துவர் சபைக்குச் சிதத்து—
மைந்தன்

## 138

பல்லவி.

பெத்தலேயில் பிறந்தவரை
போற்றித் துதி, மனமே, இன்னும்



சரணங்கள்

1. சருவத்தையும் படைத்து ஆண்ட சருவவல்லவர்—இங்கு
தாழ்மையுள்ள தாய்வயிற்றில் தலை சாய்க்கலானார்.-பெத்
2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவ மைந்தனார்—இங்கு
பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார்.- பெத்
3. முன்பு அவர் சொன்னபடி முடிப்பதற்காக—இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே.-பெத்
4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர்—
இங்கு
ஆக்களுட சத்தத்துக்குள் அழுது பிறந்தார்.— பெத்
5. இந்தவாய் அன்புவைத்த எம்பெருமானை,—நாம்
என்னமுடன் போய்த் துதிக்க எகிகுவோமே.—பெத்

## 139

பல்லவி

பாவிக்கு நேசரரே
இயேசுமானுவேலரே —ஆ! நரர்

சரணங்கள்

1. மாசற்ற தேவனார், மைந்தப் பிரதாபரே
இயேசு கிறிஸ்துநாதரே, ஆசை மானுவேலரே— ஆ!
2. பிரயாசத்தோரே, பாரஞ் சுமந்தோரே,
கிருபைப் பிதாவாரே, இயேசு மானுவேலரே.— ஆ!
3. கெரிந்த நரனல் முறியார், பொரிந்த கிரியவியார்,
தீர்ப்பந்தரைத் தன்னாரே, இயேசு மானுவேலரே.— ஆ!
4. கெட்ட குமாரர்க்கு கிருபைப் பிதா வந்தார்,
இட்டப் பிரசாதத்தாரே, இயேசு மானுவேலரே.— ஆ

5. சத்துரு செய்வதென்ன ? சர்ப்பம் பெறுவதென்ன ?
ஸ்திரீ வித்தார் வந்தாரே, இயேசு மானுவேலரே.—

6. சீயோன் குமாரியரே, சிங்காரக் கன்னியரே,
நாயகன் வந்தாரே, இயேசு மானுவேலரே.—

7. நித்திய விவாகமே, நேடிய சிநேகமே,
பத்தினி மாதராரே, இயேசு மானுவேலரே.

## 140

பல்லவி

ராஜனிவர், ராஜனிவர், நாம்வணங்கும்
கிறிஸ்து ராஜனிவர்.

அநுபல்லவி

ராஜன் மக-ராஜன்-துரை-ராஜன்-கிறிஸ்து-ராஜன்
ராஜமகத்துவ-மேன்மை மிகுந்தவ ராம், திரி-த்து வராம்.

சரணங்கள்.

1. சரோனின் நல்-ரோஜா புஷ்பம் சார்ந்தபள்ளத்தாக்கின் லீலிபுஷ்பம்.
பாரிலெங் காணும் ப-ரிமளிக்கும் ; நிதம்
பாரிலுள்ளோர் பல-பாடிடக் கமழ்விய பரிமளித்திடும் சுகந்தம்.

2. அதிசயமாம் அதிசயமாம், ஆண்டவராம் ரூபம் பூண்டவராம்.
ஆதிபிதாவின் அ—ஞதிசுதன்-இவர்
ஆதி பிதாவின் அ ஞஇமுறைப்படி அதிசயமாய்ப் பிறந்தார்.



3. ஆலோசனைக் கர்த்தாவென்ற அருநாமம் அ-வர்க்கே தகும்.
மேலோர்க்கு மூரம்பணி-ஏலோகிமாம்-இவர்
மேலுலகத்ததின் - மேன்மைதனைத்துறந் - திந்தலமதில் பிறந் தார்.

4. வல்லமையாம்-தேவனிவர் - வானுலகாதிப டைத்தோரிவர்.
நல்லாரும்-பொல்லாரும்-எல்லோரும் வாழ்-வுற
செல்லத் திருமகன் - சொல்லற்கரியதம் - மில்லத்தினை மறந்-தார்.

5. நித்யபிதா - வென்னும் நாமம் - நித்தருமேய வர்க்குரித்தாம் ;
நித்யச்-தாபித்ய-காலமதாய்
பக்தரை மகிமை-ஸ்தலத்தில் இருத்திடச் - சித்தமே வைத்தவ-ராம்.

6. சமாதானப் - ரபு வந்தார்; - சமாதானம் - சமாதானம்
மாதிம - ரியன்னை - மைந்தரா - மைச் சமா
தானமதின் வது - பாசமதாந்தம தோடுற வாக்கிவிரார்.

7. நாமமிதை - நாம் நினைந்து நாடோறும்து டிபணிந்து
நாமம தாற்றிணம்-நாம் களிக்க
நாமமதை நம தாலய மாக்கியே-நம்மிருதயம் பதிப்போம்.

## 141

பல்லவி

வான லோக நாதன் மனிதனாக வந்தார் பாரு மேன்.

அனுபல்லவி

வாரும் வந்து பாரும் சத்திரம் சேரும் பசுவின் முன்னணை
தேவ தேவனாக மனித பாவம் போக்கும் பலியதாய்.

சரணங்கள்

1. பூவில் சமாதானம் மனிதர் மீது பிரியமா மென்றே
தேவசேனை வானில்தோன்றி பூமி கேட்கதுதிக்கிறார்- வான

2. நல்லசெய்தி தொல்லைநீக்க வல்லபரன் பிள்ளையாய்
அல்லில் ஆவின் முன்னலில் பசும்புல்லில் கந்தைபொதிந்தியே— வான

3. கொடிய பேயின் கொட்ட மொழித்து குவலயத்தோர் செழிக்கவும்
அடியார்க் கருளும் அழகு கண்டு அன்பர் உள்ளம் களிக்கவும்— வான

4. ஆயர் ஆடை பாலும் தயிரும் ஆவலோடு எடுத்து நல்
ஆயன் தேவ சேயனென்றிரு பாதம்பணிந்து தொழுகிறார்— வான

5. பாவம் நீக்க சாபம் ஒழிக்க ஆவலாக புவியிலே
ஜீவன் பலி யாகத் தந்திடும் தேவ ஆட்டுக்குட்டியாய்- வான

## 142

பல்லவி

வானுதி பரனொரு ராஜருவானுர் பாடிப்போற்றுவோம்,
வானுதி பரனொரு ராஜருவானுர் பாடிப்போற்றுவோம்.

அனுபல்லவி

ஆனோர்மக வானோர்மகிழ்
வானோர் துதி பாடிடவே





தானுய்த யாபரனோர்திரு
சேயாய்ப்புவி அவதரித்தேதிரி
தத்துவமுற்றிடும் அத்தனும் பெத்திலே
சத்திரமத்தியில் சித்திரமுன்னணை
கந்தையணிந்துனின் சிந்தைதொலைந்தினி
சிந்தை மகிழ்ந்து நீ சந்ததம் வாழ்ந்திட
தந்தோம் உயிர் மாபலியாகிட
வந்தோம்புவி வாழ்ந்திட என்றிட
தத்திமி தத்திமி தத்திமியித்தினம்
பெத்தலையுற்றநம் கர்த்தனுக்கே துதி
தகிர்த ஜனுததரி தகிர்த ஜனுததரி
சகிர்த சுசரதுதி சுரரொடுநரரினி
தாம் தாம் தரிகிடதீம் எனத்
தொந்தோம் என்றாடிப்பண்பாடிட — வானுதி

சரணங்கள்

தேவாதி தேவன் மூனம்
இனிவருவேரமென் றோதி ஆதாம்
ஏவாளின் பவம் அறக்
கனிமரிதாய் ஒன்றானசேயாய்
பாவமுள்ள உலகதின்
பாவந்தொலைந் தோடிடவே
ஆவால்புவி மானிடனாகியே
பேயின் தலைசிதை வுறமிதித்தவன்
புத்தி நிறைத்திட சத்துவமற்றிருள்
நித்திய அக்கினி பற்றி ஒழித்திட
சுத்தர் துதித்திடவும் முத்தியளித்திடவும்
நித்தமிருத்துவையே நத்தியழைத்திடவும்
வந்தார் இனி வானவரோடு நாம்
தொந்தோமென் றாடிக்கொண்டாடிட— வானுதி

2. எண்ணிறந்த தூதர்சேனை
பண்கள் பாடித் தோத்திரிக்க
விண்ணிறந்த வானஜோதி
தோன்றி மேய்ப்பர் காட்சிகண்டிட
மன்னன் தவீதூரில் சிறு
கன்னிமரி பாலனாக
முன்னணை கந்தையின் மேலே
வந்தாரே கிறிஸ்தெனும் ரட்சகர்
நற்செய்தியிச்சனம் கர்த்தனைக்காணுமென்
றற்புதமோ திடத் தற்பரன் சேனைகள்
இந்நிலமக்கனொரு மிக்கநற்பிரியமும்
உன்னதமதின் தேவ தேவனுக்கு மகிமையும்
பூலோகத்தில் சமாதானமு
மாகவென் றேதுதிபாடிட — வானுதி

3. கர்த்தாவின் செயல்மிக்க
ஆச்சரியம் அன்புபாரும்
சற்றுகிலும் அறியா
தூற்றுநோக்கும் தூதர் பாரும்
முத்தொழிற்கும் கர்த்தனாக
மூவேந்தர் துதித் தேற்றிடவே
பெற்றோர்களி கூர்ந்திடாமும்
பெத்தலை ஏகியே சத்திரம்புல்லணை
சத்தியநாதனை நித்தியதேவனை
எத்திசையோற்றமே சத்தனைகர்த்தனை
உத்தமசீலனாக வுத்திரவாதஞ்செய
ரத்தமும் சிந்திஉனைத் தத்தமதாக்கிமணி
ஜீவமுடி சூடவந்த
தேவாட்டுக்குட்டியைப் பாடுவோம்— வானுதி



4. எல்லாஉலகும் செய்த
பரமபிதாவைப் பாடிப்போற்றுவோம்
பொல்லாரை மீட்க வந்த
புண்ணியநாதனைப் பாடி வாழ்த்துவோம்
பாவ இருள் நீக்கும்பரி
சுத்த ஆவியைப் போற்றிடுவோம்
தேவதிரித்துவமாகிய
தேவாதிதேவனைப் பாடுவோம்
மைந்தனாய் விந்தையாய் வந்துயிர் தந்துநம்
தீர்த்திமாசிந்தைகள் தைத்திட காமினி
திரியேகதேவரொருவனைத் தினமடியவர்க்கருள்
திருமனுவேலனைத் தினதயாளனை
திக்குரல் காண்புவியாமொடு
தேவாதி பாலனைப் பாடுவோம்— வானுதி

## 143

பல்லவி

வந்ததாரிவர் பரன் சொந்தமைந்தனோ
வந்ததாரிவர் சுரர்துதிக்க நம் நரர்வடிவதனில்

சரணங்கள்

1. வானமும் அதிலுள்ளவும் பூமியும் அதின் நிறைவும்
ஞானமாய் அமைத்தவரோ-வானவர் மலரடிபணிய-வந்

2. வானவர் தொனியுடனே—வாழ்த்தலால்மகிழ்ந்தினிய
கானமாடினை இடையர்-கண்டவர்கரம்மனம்குவிக்க-வந்

3. வழிமறந்தோர்க்கொருஒளியாய்—வருபரனோ, மனுமகனோ
மரிசுதனோ மனுக்குலம் தழைத்திட—மதி சிறந்தவர் அடிபணிய— வந்

4. மாயனால் மயக்கிடமா— பாவமாம் பழம் புசித்த
ஏவையின் இடர்தவிர்க்க-ஏழையின் உருவெடுத்திங்கு
வந்

5. கொல்லுமாவிடம் கெடமா--தொல்லையாம்--புவிதுதிக்க
அல்லில்ஆ முன்னணையில்—புல்லின்மேல் திருமுகம்
ஜொலிக்க- வந்

6. மணிமுடிசேர் மகிழ் அரசோ—கனிதருமோ?-துயர்தருந்
தீக்
கனிவிடமே அறஒருகனியிடம்—திருமனுவடி வெடுத்த
வரோ- வந்

7. ஆதியோ அருமறையோ-ஜோதியோ சுடரொளியோ
நீதியோ நிறைஅருளோ— ஐயனே துயர்தவிர்பலியோ
வந்

8. பாவமேஉருவெடுத்த— பாவியென பலமொழிக்க
பாருள்ளோர்க்கொருபலியாய்-பாதகன் பழமுறிந்திழிக்க
வந்

9. திரித்துவஒனும்குருவே—தருஉத்தமமாம் தருவோ
மனுஜித்துருவாம்திருவே?-கனிமரிபால்புவி அவதரித்து
வந்

10. மரணமாய் உயிர்பெறமா—ஜனமாம்குருசெடுத்து
நீதனி பதமருளும்-கோலமும் இதுவென அறியேன்-வந்

11. வானமே மகிழ்உலகே—பூமியே புனல்மலையே
கானமென் னுடன்படித்தே—கர்த்தனும்—இவர் பதம்
பணிவாய்- வந்



12. மிகஉன்னதமாம் அறியோம்---மறை சொன்னவரோ
குறியோம்
புவியின்நலமோதெரியோம்—இது-புதுமை யெனசுரர்
விழிக்க- வந்

## 144.

பல்லவி.

கண்டேனென் கண்குளிர—கர்த்தனையின்று;

அநுபல்லவி

கொண்டாடும்-விண்ணோர்கள்—கோமானைக்கையிலேந்தி
—கண்

சரணங்கள்.

1. அண்டாண்ட-புவனங்கள் கொண்டாடமா
சண்டாளன் சிறைமீட்கும் சத்தியனை நித்தியனை-கண்

2. பெத்தலேம்-சத்திர முன்னணையில்
உற்றோருக்-குயிர்தரும் உண்மையாம் என்ரட்சகனை—*

3. தேவாதி-தேவனை ஆதர்சேனை
ஓயாது தோத்தரிக்கும் ஒப்புயர் அற்றவனை—கண்

4. பார்வேந்தர்-தேடிவரும்-பத்தபரனை
ஆவேந்தர்-அடிதொழும் அன்பனைஎன் * இன்பனை நான்
—கண்

5. இல்லாளென்-குறைதீர-என்றும்மகிழ
எல்லாகல்-லாதரவோர் சொல்லிற்செய்யும் என் துரை
யை— கண்

6. முத்தொழிற்-கர்த்தாவாம்-முன்னவனை
இத்தரைமீட்களனை சத்திஉத்தமன்னவனை— கண்

7. மண்ணோரிருள்போக்கும்-மாமணியை
விண்ணோரும்-வேண்டி நிற்கும் விண்மணியைக்கண்மணி
யை— கண்

8. பொன்னுல-கோர்போற்றும்-புகழ்திருவை
என்னுருவில் - பின்னுருவாம் இன்னுருவை பன்னுரு
வை— கண்

9. தேனொழி-கட்டாத-தெள்ளமுதை
கோனை-குருவைகு வந்தழைக்கும் ஆரமுதை—கண்

10. ஆண்டினோர்க் கன்புருவாம்-ஆரணனை
கண்டோர்கள்-கலிதீர்க்கும்-காரணனை பூரணனை-கண்

11. அன்னையாம்-கன்னியும் ஐயனுடன்
முன்னறி-யாப்பசுவின் புல்கூரையில் உன்னமுதை-கண்

## 145

பல்லவி

வானாதி தேவ மைந்தனைப் போற்றுவோமே

அநுபல்லவி

கோனன் றவிதிறைக் கோத்திரத்தில் ஈசர்
கோலமதாய்ப் பிறந்தார்.— ஆ! வானாதி

சரணங்கள்.

1. காவினிலே யதமேவை தின்றகனி
காரணத் தாலியல்பாய்
தேவனுமே யேழை ரூபமதா யெமைத்
தேடவந்தே பிறந்தார்.— ஆ! வானாதி



2. நீதியி னுடையி னொலைமுடி
விரைந்து அலங்கரிக்க
மாதயவாய்ப் பழங் கந்தை பொதிந்திட
மாட்டகத்தே பிறந்தார்.— ஆ! வானாதி

3. வல்லவரசர் அமைச்சர் அரண்மனை
மாளிகை யானதிலும்
புல்லணையே யீக மேன்மை யென்றெண்ணிப்
பிறந்த ததிசயமே.— ஆ! வானாதி

4. அண்டபுவன மடங்கலு மொண்டுசெய்
தங்குமு யிர்சமைத்தோன்
மண்டல மெண்டிசை தானு மடங்காதோன்
மதலையாக வந்தார்.— ஆ! வானாதி

6. வெற்பருகானப ரப்பொருள் சேயென
விற்பன மாய்த் தொழுவே
அற்புதமாய் மரி கர்ப்பத்தி லுற்பவித்
தற்புதனார் பிறந்தார்.— ஆ! வானாதி

7. சாஸ்திரி மார்கள்விச் சேத்திர மாய்வந்து
தோத்திர மேபுரிந்து
சூத்திர மாணப ரன்சுத னார் யூதக்
கோத்திரத்தில் பிறந்தார்.— ஆ! வானாதி

## 146.

பல்லவி.

வந்தார் தேவமைந்தன் சிந்தைகளிகூருவோம்-புவி

சரணங்கள்.

1. வந்தார்புல்லணை வானவர்சேனைகள் மங்களம்பாடிடவே
மாபுவி—சந்ததமாய்ச்சமா தானம்தழைத்திடசாலேமின்
அதிபதியே— புவி

2. சித்துருவாம் பொருகர்த்தனுமாம்சிறு பெத்தலேமுன்ன
ணையில்—மாபரன்
சத்தியநாதனாய் நித்தியஜீவனை உத்தமர்பெற்றிடவே—
புவி

3. சுத்தர்களனேகரி கூருங்கள் கர்த்தனைக்கீர்த்தனம்பண்ணி
டவே—மாபுகழ்
பத்திசையாழுடன் பாடிடமாமரி புத்திரனாய்ப்பிறந்து—
புவி

4. ஆவலாகக் காத்திருந்தோம்மிக அலகின் துயர்கெடவே
—மாபரன்
ஜீவன்தந்தே நம்மைமீட்டிடதேவன்மரி யுருவாய்-புவி

5. கர்த்தனுமாய்திரித்துவனாய்ப்பரி சுத்தர்கள் போற்றி
டவே-மாபுவி
வித்தம் துயரிசெத்துருவை நரகத்தினில் வீழ்த்திடவே
—புவி

6. தூயருமேவேந்தர்கள் பாதம்பணிந்திட ஆயரும்போற்றிட
வே—மாபுகழ்
சேயனாய் உயிர்தரும் ஆயனாய்த்திருவைவன் காயனுமாகிட
வே— புவி

7. பாவிகள் நேசனாய்ப் பணிந்தவர் ஈசனாய்ப்பரலோகராஜ
னுமாய்—மாதுயர்
மேவியேபாவிகள் முற்றும்பரனுடனேயுற வாகிடவே
—புவி

8. சுத்தர்சுத்தனெனவேரும் பிதாச்சுதன் ஆவியைப்போற்
றிடுவோம்—மாபரி
சுத்தமனதுடன் சத்தியநாதனை துத்தியம் செய்திடு
வோம்— புவி



## 147.

### பல்லவி.

பரனே சுதனாய் கனிமா மரியின்
ஒருபா லகனாய் பிறந்தார் மகிழ்வாய்.

### அனுபல்லவி.

பரலோ கதூதர் கீதம் பாடிட
நரலோ கமக்கள் பாவம் ஓடிட— பரனே

### சரணங்கள்.

1. கிருபா கரனாய் கன்னிமரி உதிரத்தில்
திருபா லகனாய் பெத்தலேம் சத்திரத்தின்
அருகோர் அணையில் அந்திபின்நேரத்தில்
அருட்ஜோதி ஈச ஆபிராம் கோத்திர— பரனே

2. பாவஇருள் ஓட பரமனருள் நீட
தேவலோ கம்பாட தினத்து யர்வாட
ஜீவக னிதுட ஜீவநதி ஆட
ஜீவமு டிசூட தேவது திபாட— பரனே

3. ஜீவகனி விட்டுதீ யகனி தின்ற
ஏவையா வம்பாவும் ஏற்றுமீட்டிடமா
ஆவலா கஜீவன் அளித்துப லியாக
தேவதூ தர்போற்றும் தேவலோ கம்விட்டு—
பரனே

4. சேயனாக வந்துதா யனாக ஐந்து
காயமா கபொந்துக ருணைநீதி சேர்நல்
ஆயனாக வந்தார் அருமையா தூயற்ற
நீயஉன்னைமீட்க தேவநீ திதந்த— பரனே

5. வானசேனைதோன்றி மகிமைபா டகாமும்
தானம்மீட்கவந்ததேவ ஆட்டுக் குட்டியின்
கானம்பா டிமகிழ்வோம் சர்த்தனே சக்கென்றே
ஏனக்கொட் டில்வந்தார் வானம்பூ மிசெய்த—
பரனே

## 148.

பல்லவி.

அல்லேலூயா சந்தோடம் அல்லேலூயாவென்றைக்கும்
அல்லேலூயா பாலுக்கனந்த தோத்திரமாக

சரணங்கள்

1. பூலோகத்தை ரட்சிக்க சர்வலோக பதங்கட்கு
மேலாகிய தெய்வீக மேசியா காதியன்வந்தார்— அல்
2. பாவவினையகல பூவுலகு மகிழ
ஆவலதாக ஏகதேவசுதன் பிறந்தார்— அல்
3. பேசரிதான ஞான தேசுலாவிய தேவ
மேசியாவெனும் ராஜ யேசுநாதர் பிறந்தார்— அல்
4. எம்மானில மூர்ந்தொழ இம்மானிலமும் வாழ்க
எம்மாலிவ்வேஷமாக இம்மானுவேல் பிறந்தார்— அல்
5. மோட்சத்தினன்மை யெல்லாரு குட்சத்திலேயடைய
ஆச்சரிய மானவர் காட்சியாகப் பிறந்தார்— அல்
6. மதிசேர்மெஞ்ஞானிமார்கள் துதிசேர்பெத்லேம்பதியிற்
கதிசேர் கிறிஸ்து நாதர் அதிசயமாய்ப்பிறந்தார்— அல்
7. சாத்திரர் வந்தாகாண தோத்திரமாஞ்சகூற
பாத்திபன் தாவீதேந்திரன் கோத்திரத்தில்பிறந்தார்-அல்
8. ஆ! இதுவே சிநேகம் ஆ! இதுவே கிருபை
ஆ! இதுவே செம்பிரம் ஆ! இதுவேயானந்தம்— அல்



## 149.

பல்லவி.

ஆதி திருவார்த்தை திவ்விய அற்புதப்பாலனாகப் பிறந்தார்
ஆதம் தன் பாவத்தின் சாபத்தைத் தீர்த்திட
ஆதிரை யோரையீ டேற்றிட.

அநுபல்லவி.

மாசற்ற ஜோதி திரித்துவத்தோர் வஸ்து
மரி வயிற்றில் கெர்ப்பந்தரித்து
மகிமையை மறந்து தமையெறுத்து
மனுக்குமாரன் வேஷமாய்,
உன்ன தகஞ்சீர் முகஞ்சீர் வாசகி
மின்னுஞ்சீர்வாசகி மேனி மிக்கெழும்
உன்னத காதலும் பொருந்தவே
சர்வ நன்மைச் சொரூபனார் ரட்சிதனார்
தாம், தாம், தன்னர, வன்னர
தீம், தீம், தீமை யகற்றிட
சங்கீர்த்த சங்கீர்த்த சங்கீர்த்த சந்தோ
ஷம்மென சோபனம் பாடவே
இங்கீர்த்த இங்கீர்த்த இங்கீர்த்த நமது
இருதயத்திலும் எங்கும் நிறைந்திட—

சரணங்கள்.

1. ஆதாம் ஒதி எவினர் ஆபிரகாம் விசுவாச வித்து
யூதர் சிம்மாசனத் தாளுகை செங்கோல்
ஈசாய் வங்கிஷத்தானுதித்தார்— மாசற்ற
2. பூலோகப் பாவவிமோசனர் பூரணகிருபையின்வாசனர்
மேலோக இராஜாதி இராஜன் சிம்மாசன்
மேன்மை மகிமைப் பிரதாபன் வந்தார்— மாசற்ற
3. அல்லேலூயாசங் கீர்த்தனம், ஆனந்த கீதங்கள்பாடவே
அல்லல்கள் தொல்லைகள் எல்லாம் நீங்கிட
அற்புதன் மெய்ப்பரன் தற்பரனார்.— மாசற்ற

## 150.

பல்லவி

மகாராஜா மேசியா பிறந்தார்
ஆசாரமெலாந் துறந்தார்
பாசாதீதர் பண்பகர்ந்தார்
பூசாசாரமே புரிந்தார்.

சரணங்கள்

1. மாசாதி யேயிவர் நேசார் சுதனிவர்
ஆசாரியரிவர் தாசாணவரிவர்
ஈசாய் சினையிவர் வாசாவகரிவர்
மூசா நிகரிவர் ஈசாவே.— மகராஜா

2. மாதேவா நனபுகழ் ஓயாதுமக்குற
பூமிதனில் சமாதானம் மிகவர
மானிடருக்குனின் மாபிரியம் வர
ஆவீட்டில் வந்தவதரித்தே— மகராஜா

3. பாசக்கிறிஸ்தவர் நேசப்பிதாவுக்கும்
ஆசதகற்றும் அரூபிக்கும்
ஓசன்னாதுதி உன்னதத்தி
ஓய்விலாது பண்ணுறவே— மகராஜா

## வருஷப்பிறப்பு

## 151.

பல்லவி

நித்தம் அருள்செய் தயாளனே—எங்கள்
நேசா யேசு மனுவானே—ஸ்வாமி நித்தம்

அநுபல்லவி

உத்தம சற்குண தேவ குமாரா—உம்பர்கள்
சத்தம் போற்றும் சிங்காரா,



சத்திய வேதவி னோதலங்காரா—சதிசெய்யும்
பேய்தலை சிதைந்த சிங்காரா.— நித்தம்

சரணங்கள்.

1. பட்சப் பரம குமாரனே, எங்கள் பாவந்தீரும் மாவீரனே ஸ்வாமி
அட்சய சவுந்தர ஆத்தும நாதா, அடியவர் துதிசெய்யும் ஆரணபோதா,
இரட்சண்ய சுப சுவி சேடப்பிரஸ்தாபா, ராஜகெம்பீர சங்கீத பொற்பாதா— நித்தம்

2. சென்றாண்டெமை முகம்பார்த்தவா, ஒரு சேதம்விக்கின மறக் காத்தவா—ஸ்வாமி
இன்றோர் புதுவருஷாரம்பங்கண்டோம் ஏக சந்தோஷமாய்ச் சந்தித்துக்கொண்டோம்
குன்றா உமதுட ஆவியை ஈந்து கூடவே இருந்தடியார் ஜெபங்கேட்டு.— நித்தம்

3. சத்திய வேதம் ஓங்கி வாழ்கவே, சாற்றும் ஏசுவின் நாமம் வாழ்கவே, எங்கள்
போத்திமார் தேசிகர் குருக்களும் வாழ்கவே, வளர் சபை யோகி மாணுக்கரும் வாழ்க,
சத்தியம் இங்கிலீஷ் துரைத்தனம் வாழ்க, சோபனம் அத்தியக்ஷர் அனுதினம் வாழ்க.— நித்தம்

## 152

பல்லவி

நாதனேசையனை வாழ்த்துவோம்
நவ வருடமும் தோன்றிற்றே.

அநுபல்லவி

சென்ற நாட்களெல்லாம் செம்மையும் நன்மையும்
என்று நம் ஜீவியம் தன்னில் தொடர்ந்ததே.

சரணங்கள்.

1. இத்தனை நாட்களாய் காத்தவர்
ஈந்தனர் வேண்டிய சகலமும்
இன்னொரு ஆண்டையும் இன்பமாய்க் காணவே
இரக்கம் வைத்தநம் இரட்சண்யபெருமான் — நாதனே

2. தோத்திரம் தோத்திரம் தோத்திரம்
தூய்ய சிம்மாசன ராஜனே
துதியும் கனமும் தேசங்கள் யாவினும்
தோன்றும் உமக்கே தேவாதி தேவனே.— நாதனே

3. புதிய ஆண்டினில் புதியநல்
ஜீவியம் செய்திட ஏசுவே
கிருபை நதியை கடாட்சம் செய்திட
அருள் ஆவி ஊற்றி ஆசீர்வதித்திட— நாதனே

4. அருள் பொழியவும் அஞ்ஞான
இருள் ஒழியவும் மெய்ஞ்ஞானம்
கடாட்சி நம்முடன் ஜோதிப்பிரகாசமாய்
தாசர்மேல் நேசமாய்வீசவும்வேண்டுவோம்.— நாதனே

## 153.

பல்லவி

இந்த வருடத்தின் மீதுதனில்
ஏகமாய்த் துதிப்போம்;—சொந்த
ஏசுநாதரின் திருவடிதனை
என்றுமே துதிப்போம்.



சரணங்கள்.

1. சென்ற வாண்டில் ஒன்றாக நமைச்
சேர்த்துமே தயவாய்,—எந்தத்
தீங்குதனிலும் பாங்குடன்
தழைத்தோங்கவு முயர்வாய்
நன்றாக அருள் செய்தே இத்தலம்
நலமுடன் வைத்த.— சொந்த

2. நாகரீகம் கல்வித் தொழில்கள்
நாடெங்கும் பரம்ப—தேவ
நாமத்தில் கூடுவோர்களால்
ஆலயங்களும் நிரம்ப,
யோக நன்மைகளே யாத்மாவுக்கு
பொருத்தவே செய்த.— சொந்த

3. போதகன் மாரும் சபைகளும்
பூதலந் தழைக்க,—தேவ
புத்திரர்க் கெஞ்ஞான்று மேதுதி
புரிந்துமே பிழைக்க,
ஜாதிகள் துதி ஓதி யேசுவின்
சரணடைந்திடவே—. சொந்த

## 154.

பல்லவி.

ஆனந்தம் பாட வாருங்கள்; அருமைத்தினம் தோன்றிற்று

அநுபல்லவி

தானைத்தானைத் துதித்து துதித்துக்
களித்துக் களித்தெக்களித்தெக்களித்து— ஆனந்தம்

சரணங்கள்.

1. கடந்தகாலமுற்றிலும் கருணைசெய்து காத்திட்ட
கடவுளடியையமனதிலுன்னி கனிந்துகனிந்து பணிந்து
பணிந்து— ஆனந்தம்

2. சென்றவருடம் க்ஷேமமாய் ஜீவன் சுகம்பெலமுமாய்
நன்றதாகநம்மைக்காத்த நாதனே நாதனைப்பணிந்து—
ஆனந்தம்

3. பஞ்சம்கொள்ளைநோய்களும்-வஞ்சகர் செய்மோசமும்
கொஞ்சமேனும் அணுகாமல்-அஞ்சலென்றே ஆதரித்
தாரே— ஆனந்தம்

4. எத்தனையோபேர் உயிரற்று பூமிநீங்கினர்
முற்றும் கருணை செய்து காத்த-அத்தனே சுக்-கிறிஸ்தை
பணிந்து— ஆனந்தம்

5. மண்ணின் துயர்மாறிட-கண்ணின் விழிபோல் நம்மை
எண்ணி அருமைசெய்த ஏசு-புண்யநாதனைப் போற்றிப்
பணிந்து— ஆனந்தம்

6. எண்ணிறந்த நன்மைநாம்-என்னுமுன்பே தந்தாரே
விண்ணவர்போல் நாமுங்கூடிப்-பண்கள் பாடித்தோத்
திரித்து— ஆனந்தம்

7. இந்த நவவருடத்தைத்-தந்ததில் மன மகிழ்வுடன்
சந்திக்கச்செய்த தேவதேவனைச்-சிந்தித்தவர்மிக செய்
நன்றியறிந்து— ஆனந்தம்

8. மாலைசூடிமகிழ்வுடன்-மலர் இறைத்துத் திருமனு
வேலைப்பணிந்து வேந்தர் போற்றும்-வெற்றிச்சிலுவைக்
கொடியும் பிடித்து— ஆனந்தம்



9. பிதாவுடன் சுதனுவியாம்-பரிசுத்ததேவ திரித்வனை
தேவசமூகம் கூடிவந்து-ஆவலாகஆர்ப்பரித்து-ஆனந்தம்

## கிறிஸ்துவின் பாடுகள்.

## 155.

பல்லவி.

சரணேமகத்துவ தேவா
சரணுநித்தமே
அருளேதயபரம ஜீவா
அருளானந்தமே

சரணங்கள்.

1. திருவாசகப்படி தேவா
திபனுர் மைந்தனே
குருசானதிற் கொலையானுர்
நரர்பாவங்களே— சரணே

2. கரமே துளைத்திருப்பாணி
இருபாதங்களே
சிரமேவுமுண்முடிவாதை
பாதாபங்களே— சரணே

3. தலையானகள்ளனென்றேற்றிச்
சதிகாரக் குழாம்
கொலைபாதகர்க்கிடையாகக்
குருசேற்றச்செய்தார்— சரணே

4. எரிபோலெரிந்து பொல்லர்தா
ரெதிராக்கிரமமாய்ப்
பரிகாச சிக்ஷைசொன்றோ
குருவே சையனே— சரணே

5. அழியாகர்த்தியஜீவ
னருணாதிசயனே
பழுதானவெதானதுமில்லாத
பரனே யம்பரா— சரணே

6. மூவுலோகத்தின் பவந்தீர்த்த
முதல்வா வந்தனம்
பழிகாரனைக்கதிசேர்த்த
பரிவே தஞ்சமே— சரணே

7. கள்ளனைக் கதிசேர்த்தனையே
கருணாம்பரமே
பிள்ளைகளுக்கெலவோ
பிழையே பொறுப்பாய்— சரணே

8. கொலைகாரர் கொடுத்தகாடி
குடித்தானந்தமாய்த்
தலைசாய்த்துயிரைவிட்டீரோ
தயவே யம்பரா— சரணே

9. ஜீவனைத்தந்த தெய்வமே
திரியேகத்துவமே
பாவியோடொப்புரவாகும்
பரமானந்தமே— சரணே

10. உலகத்திலுயிர்வாழ்க
வுயிரே தந்தவா
கலகத்தின்வலி நீக்கிக்
கதிசேரும் பரா— சரணே



11. குத்துண்ட இதயத்தெழும்
இரத்தமுந்தண்ணீருமே
பக்தர்பவத்தை நீக்கவே
பரிந்த நேயனே— சரணே

12. அடைக்கல மைந்தாகாய
மடியார் சொர்க்கமே
படைக்கும் பகைக்குங்காப்பாய்
பரதேசத்திரமே— சரணே

## 156.

பல்லவி

இயேசுசுவாமி ஐயா சிலுவையோ
டெவ்விடஞ்செல்வதையா—சிலுவையோ
டெங்கேசொல்தையையா—மிக
எங்கியே துயர் தாங்கியே பறந்
தோங்கிய நடையாய்

சரணங்கள்

1. மாசிலாதபரா பரப்பிரம
மன்னு யேயோவா—ஆதி
மாந்தர்செய்வினை தீர்த்தலவோ
சேர்ந்த பாதையந்தோ— இயேசு

2. சீமோன் சிரேனேயனோ சரிகடை
சேர்ந்து சுமப்பானோ—திசழ்
பூமியந்தரவான மெண்டிசை
பூரண ஞானசுமையை— இயேசு

3. கொல்கதாப்பாதையிலே பகலின்
கொரவெயிற்பொழுதில்—சுமை
கூனியே கொண்டு சோரிமண்டிட து
வண்டிடச் சென்றிட்டே— இயேசு

4. வெட்டவெளியினிலே பொடிச்சுடும்
வீதிகொதிப்பினிலே—திட
மேனி வெம்பிவி டாய் நிரம்பி
தளம்பியே துன்புறவே— இயேசு

5. மாதரழுதுவர எருசலே
மக்கள் கலக்கமுற—முகம்
வாடியே வழிக் கூடியே யுமைத்
தேடிய பாதையிதா ?— இயேசு

## 157.

### பல்லவி

மாதயவாக எங்களுக் காகப்பாடுபட்டார்
இத்தனையாய் மேசையா

### சரணங்கள்

1. ஆதியந்தஞ்செய்பாதகத்திரு
லற்புதநீதர்—கிருபைபோத
ரேசுநாதர்— மாதய

2. கடினமாகக் கொடியயூதர்
கட்டியே நடத்த—மகாசபைத்தப்
பாடுபடுத்த— மாதய



3. ஆகடியத்துடன் பிடித்துக்கட்டிச்சென்
ருசாரிமுன்பாகக்—கொண்டுபோகக்
கொலையாக— மாதய

4. அன்னாவுங் காய்பாவுஞ் சங்கம்
யாவர்களுங்கேட்க—யூதர்பார்க்க
ஞாயந்தீர்க்க— மாதய

5. கோட்டிபண்ணி யிராமுழுதும்பல
சோரணிகொண்டாட்—விளையாடக்
குற்றஞ்சாட்ட— மாதய

6. பத்திசேர்பேதுரப்—போஸ்தலன் சத்தியம்
பண்ணி மறுதலிக்க—மனஞ்சலிக்கச்
சேவலொலிக்க— மாதய

7. தேசிகன் வஸ்திரக்கிழித்து மரணத்
தீர்மானஞ்செய்ய—மிக வைய
காருய்ய— மாதய

8. காய்பாவின் வீட்டிலிருந்து பிலாத்துமுன்
கட்டினகட்டோடு—வருதாடு
அதைத நாடு— மாதய

## 158.

### பல்லவி

அருமைரட்சகர் திருவிலாவில்
குருதி மெத்தவும் ஓடுதே

### அநுபல்லவி

எத்தனை மீட்டிட வந்த இரட்சகர்
சொந்த ரத்தஞ் சிந்தி சித்தை தவிர்த்திட்டார்—

சரணங்கள்

1. ஐயையோ என்பாவம் மிகுதிரள்
ஆரினும் பொல்லா தோணுகினேன்
தாயினும் நேசனேச சிலுவையிலே
தன்னைப்பலியாக்கி என்னையும் ரட்சித்தார்— அரு

2. பச்சை மரத்துக்கு இவ்விதமாயின்
பட்ட மரத்திற்கு எவ்விதம் ?
செந்நீரில் மூழ்கினோர் எல்லாரும் தேவனின்
மன்னிப்பைப் பெறுவார் என்பது நிச்சயம்.— அரு

3. சிலுவையில் தியாகஞ் செய்திடும்
ஜீவனை மீளவும் பெறலாம்
ஜீவ ஊற்றெனக்காய் திறந்திருப்பதால்
ஜீவனும் சுகமும் யாவும் எனக்குண்டு— அரு

# 159

## 1-ம் பங்கு.

1. பூங்காவில் நீர்மனக் கஸ்தியடைந்ததால்,
பூங்காவில் நின்வேர்வை ரத்தமாய்ப்போனதால்,
பூங்காவில் மும்முறை குப்புற வீழ்ந்ததால்,
பூங்காவில் ஓர் தூதன் தேறுதல் செய்ததால்,
பூலோகா காருணையா, சுவாமி,—எந்தன்
பாவங்கள் தீருமையா.

2. இராவில் யூதாசும்மைக் காட்டிக்கொடுத்ததால்,
இராவில் அங்குமிங்கும் ஓடித்திரிந்ததால்,
இராவில் நித்திரையின்றி துன்பம் சகித்ததால்,
இராவில் கற்றூணோடே கட்டியடித்ததால்,
நாயனே, காருணையா, சுவாமி,— எந்தன்
பாவங்கள் தீருமையா.



3. சின்னப்பகுதியே கோரணி செய்ததால்,
சீஷன் ஒருவன் சபித்து மறுத்ததால்,
சென்னியில் ஓர் அறை ஓங்கியடித்ததால்.
மன்னன் ஏரோதே மறுவேஷம் போட்டதால்,
என்னைக்கண் பாருமையா, சுவாமி,—எந்தன்
பாவங்கள் தீருமையா.

4. சிரசினில் முண்முடி தன்னைத் தரித்ததால்,
செங்கோலென்று மூங்கில் கோலைக் கொடுத்ததால்,
திருமுகந்தன்னிலே துப்பி உமிழ்ந்ததால்,
திருட்டுத்தனமாகக் குட்டியடித்ததால்,
தேவனே, காருணையா, சுவாமி,—எந்தன்
பாவங்கள் தீருமையா.

5. எருசலேம் மனிதர்கள் பொய்க்குற்றஞ் சொன்னதால்,
எருசலேம் அதிபதி எராத் தீர்ப்பிட்டதால்,
எருசலேம் விட்டு நீர் கல்வாரி போனதால்,
எருசலேம் பெண்கள் இரங்கியழுததால்,
என்னைக்கண் பாருமையா, சுவாமி,—எந்தன்
பாவங்கள் தீருமையா.

சர்வேஸ்பரா, சுவாமி, இரக்கமாக எங்களைப்பாரும்.
கிறிஸ்தேசுவே,சுவாமி, கிருபையாக எங்களைப்பாரும்.
சுத்தாவியே, சுவாமி, பட்சமாக எங்களைப் பாரும்.

## 2-ம் பங்கு.

1. பாரச்சிலுவையை தோள்மேற் சுமந்ததால்,
பாரத்தாலே தள்ளம் பாரி நடந்ததால்,
பாதகச்சேவகர் ஆடையுரிந்ததால்,
பாவிகள் அங்கேயே நிஷ்டூரஞ் செய்ததால்,
பாவியைக்காருணையா, சுவாமி,—எந்தன்
பாவங்கள் தீருமையா.

2. கனத்த ஆணியால் கைகளை அடித்ததால்,
கனத்த ஆணியைக் கால்களில் அறைந்ததால்,
கனத்த தேகத்தால் காயங்கள் பிய்ந்ததால்,
கனத்த வெள்ள ரத்தம் ஈட்டியால் பாய்ந்ததால்,
கன்னெஞ்சம் மாற்றுமையா, சுவாமி— அடியேன்
துன்பங்கள் தீருமையா.

3. சிலுவையில் ஏற்றியே தொங்கவே வைத்ததால்,
சிலுவையில் ஓர் கள்ளன் சிறுமையே செய்ததால்,
சிலுவையில் அகோர தாகம் நீர் கொண்டதால்,
சிலுவையில் காடியோர் கோலில் கொடுத்ததால்,
சிந்தையில் காருமையா; சுவாமி,—அடியேன்
துன்பங்கள் தீருமையா.

4. சிந்தை கலங்கி நீர் தியக்கமுற்றதால்,
சீரான மாதாவும் அழுது முன் நின்றதால்,
சீடர்களெல்லாரும் ஓடிப்போய்விட்டதால்,
ஜீவனின் அதிபதி சிலுவையில் மாண்டதால்,
சிந்தையில் காருமையா, சுவாமி,— அடியேன்
பாவங்கள் தீருமையா.

5. உம்மை இறக்கிக் கிடத்தியே வைத்ததால்,
உம்மைத் துணியாலே சுற்றிப் பொதிந்ததால்,
உம்மைப் புதுக்கல்லறையில் புதைத்ததால்,
உம்முடை ஆவி பரதீசு சென்றதால்,
என்னைக்கண் பாருமையா, சுவாமி,—அடியேன்
பாவங்கள் தீருமையா.

சர்வேஸ்பரா, சுவாமி, இரக்கமாக எங்களைப்பாரும்.
கிறிஸ்தேசுவே, சுவாமி, கிருபையாக எங்களைப்பாரும்.
சுத்தாவியே, சுவாமி, பட்சமாக எங்களைப்பாரும்.



## 160

1. பொங்குதயை கிறிஸ்து-கொலைக்களம்
போறது கேட்டதிர்ந்தே-திவ்விய
மங்கையர் சீயோனின் மணமகள்
மறுகித்தேடினளே.

2. அங்கம் நடுநடுங்கிச்-செவிப்பூ
டம்புதுளைத்ததுபோ-லருந்துயர்
பொங்கிப்பிரக்கினைபோய் மயங்கிப்
புவியில் விழுந்தழுதாள்.

3. மையகந்தான்கொளுமோ-வியோமமும்
வானுலகுங் கொள்ளுமோ-கிறிஸ்தேம
தையன்படுந்துயராற் சீயோன்மின்
னடைந்த வியாகுலந்தான்.

4. கற்றவத்தோர்சீடன்-யோவானென
வெற்றிப்பெயர்படைத்தோன்-கிறிஸ்துவுக்
குற்றகருமமெல்லா முரைத்திடப்
பற்றிப்பின்னே தொடர்ந்தான்.

5. அன்னைரே, தம்பியரே-யென்றுயரோ
அக்கையர், தங்கையரே-மகாபெரும்
புண்ணியமுனி சொல்லீ ரென்றுயகன்
போறதுங் கண்டீரோ ?

6. ஆவிபதறுதய்யோ-கிறிஸ்தென
தாத்துமநாயகனார்-பெருங்கொல்க
தா மீற்கொலைப்படப்போங் கொடுமையை
நீவிரறிந்திலரோ?

7. கன்னியருக்கரசே-சீயோன்மட
அன்னப்பசுங்கிளியே-யுனின்பிரிய
மன்னவனூர் சாயல் ரூகவடி
வென்னவிதஞ்சொல்லுவீர்.

8. கற்பினனிகலமே-சீயோன்மலே
வெற்பினுருங்கலமே—உன்றுயகன்
பொற்படையானமென்ன வுருவென?
விற்பனமே சொல்லுவீர்.

9. தந்தைப்பிதாவினுடை-வுருவமுஞ்
சாயலுமல்லாமற்—பின்னேநா
னிந்தவுலகத்திலே ரிணைசொலச்
சுந்தரங் கண்டிலனே.

10. தாவீதரசனையோ-பத்திலொன்றா
சாலேமேந்தனையோ-வொன்றனமெய்த்
தேவகுமாரனுக்குச் சமஞ்சொலப்
பாவி தெரிந்திலனே.

11. செப்புதற்கேலாதே—யொருவரின்
சிந்தையுங்கொள்ளாதே-யின்னொன்றது
மொப்பிடக்கூடாதே யவருரு
வெப்படியான் சொல்லுவேன்!

12. சீலமிகுத்தவராய்—மெஞ்ஞானத்தின்
தேவதிருச்சுடராய்-மகாதிவ்விய
வாலிபமாயெழிலா யுயர்ச்சியின்
மன்னவன் போலிருப்பார்.



13. இத்தனையாஞ்ச்சு-மெவரினு
மெத்தனவுள்ளவராய்—மனத்திடை
மெத்தப்பணிந்தவரா யிருப்பா
ருத்தகுமிப்பிதாவே.

14. என்று சீயோன்குமரி-யுரைத்திட
வெருசலேமாதரிது—குறிப்பு
வொன்றுமில்லையானே திருமுகங்
கன்றியிருந்ததுவே.

15. அந்தச் சொரூபமில்லை-மகத்துவ
மானதொன்றுமில்லை-மகாகொடும்
நிந்தைபட்டனப்பட்டு தெவ்ரேமாய்
திஸ்காரப்பட்டிருந்தார்.

16. உச்சிதமொன்றுமில்லை-கண்ணோக்கையில்
உன்னதமொன்றுமில்லை-யவரைக்கண்
டிச்சிக்கத் தக்கவுருபவருக்
கில்லாதிருந்ததுவே.

17. கன்னல் திருச்சிரத்திற்—மிகுந்திட
முள்ளின்முடியழுத்தி-[illegible]க்களர்
தன்னிடத்தவுமே மகாபா
தாபத்துடன்போனார்.

18. கூனிக்குனிந்துகொண்டே—[illegible]ருஞ்சுமை
கொண்டெழக்கூடாமல்—[illegible]கொண்
டனர் பிடித்திழுக்கக் குரு[illegible]
னெருப்பு றவிழுவார்.

19. சீமோன் சிரேனேயை-வழியினிற்
சென்று பற்றிப்பிடித்தே-யவன்மேற்
கோமானின் குருசைச் சுமத்தியே
கொண்டுபோனா ரன்னமே.

20. அத்தன் படுந்துயர் கண்டெங்களிதை
யத்தில் வியாகுலமாயழுதுகொண்
டுத்தமனார் பிறகே புலம்பியோப்
பாரிசொல்லித் தொடர்ந்தோம்.

21. காரணனார் திரும்பி—யெங்களுட
னேருசலே மகளிர்—ரெமக்கன்று
பாரித்து மக்கெனவு மக்கட்கென்றுங்
கோரத்தழுமினென்றார்.

22. ஆதி பரப்பொருளே-யென்றாதா
அன்பே யாருயிரே-யென்ன
பாதகஞ்செய்தேனு னுமக்கித்த
வேதனை வந்ததென்னோ?

## 161.

1. ஆதம்புரிந்த பவத்தாலே மனுடனாகி
வேதம்புரிச் செஞ்சிறை விடுத்தீரோ, பரனே!

2. கைபறித்தகனி யினால் விளைந்தவெல்லாப்
பாவத்துக்காகப்பலி யானீரோ, பரனே.

3. வேதசற்பனையனைத்து மீறி நரர்புரிந்த
பாதகத்திரப்பாடு பட்டீரோ, பரனே.

4. தந்தைபிதாவுக்குமை தனைபலியளித்து
மைந்தரை மீட்க மனம் வைத்தீரோ, பரனே.

5. சிலுவை சுமையொருமற் றியங்கித் தரையில்வீழ்க
கொலைஞரடர்த்துகோட்டி கொண்டாரோ,பரனே.

6. வலியபவத்தை நீக்கி மனுடரை யீடேற்றச
சிலுவை சுமந்திரங்கி இளைத்தீரோ, பரனே.



7. சென்னியிற்றைத்தமுடி சிலுவையின் பாரத்தினால்
உன்னியழுந்தத்துய ருற்றீரோ, பரனே.

8. அடியும் ரத்தங்களோட மருகித்தவித்து வாடிக்
கொடிய குருசிற்கொலை யுண்டீரோ, பரனே.

9. வானம்புவிபடைத்த வல்லமைப்பிதாவின் மைந்தா,
ஈனக்கொலைஞர்கையி லிறந்தீரோ, பரனே.

10. சங்கையின் ராஜாவே, சத்யவானாதிதேவே,
பங்கப்பாட்டுமடியப் பட்டீரோ, பரனே.

## 162.

1. அன்பின் தெய்வ கிருபாசமுத்திர
ஆழமே, தயாபரா, நீர்
அளவில்லாத அளவில்லாத அளவில்லாத
அகோர வாதைகளாகிய
துயரானீரோ?

2. ஆத்மவியாகுலமேவிப் பிரலாபித்து
ஆண்டவா, இயேசுநாதனே, நின்
அரியமேனி அரியமேனி அரியமேனி
எல்லாம் ரத்தவேர்வைகளாகியே
சோபமானீரோ?

3. பிரதானசாரியன் வீட்டிலும் பொந்தியு
பிலாத்தின் வீட்டிலுமேகியே நீர்
பிரியமாக பிரியமாக பிரியமாக வன்
பாடுபட்டு மெய்சோரி
சிந்தவுமானீரோ?

4. மூவுலகம் படைத்தாண்டு ரட்சிக்கும்
முன்னவா, இயேசுநாதனே, நீர்
முன்னிறுலே முன்னிறுலே முன்னிறுலே
முண்முடி சூடியாகிய
துயரானீரோ?

5. பாரச்சிலுவைசுமந்து சகிக்கப் பா
தாபமாய்க் கொல்கதாவிலே நீர்,
பரமதேவா, பரமதேவா, பரமதேவா, இப்
பாடுபட்டென்னை யாளவும்
இருளையானீரோ?

6. மூன்றுலோகமுந் தாங்கியநாதா, மூன்
றாணியில் தொங்கலானீரோ, நீர்
முடிவில்லாத முடிவில்லாத முடிவில்லாத
காலங்களாய் நர்வாழ்கவே
இருளையானீரோ?

7. ஸ்ரீவனுதிப்பிதாவின் குமாரா, நீர்
நீயபாவிகட்காகவே ஓர்
சிலுவைமீது சிலுவைமீது சிலுவைமீதினிலே
உயிர்விட, தேவனே,
மனதானீரோ?

8. பழுதில்லாத விண்ணேக மைந்தனின்
பாடனைத்தையும் நோக்கியே, இப்
பாவிமீது பாவிமீது பாவிமீதினிலே
திருவிழிபாரு மேன்,
கருவேல்பரா!



## 163.

### பல்லவி.

கொலைக்காரனைப் போருர், அன்னமே—ஆதாம்
கொடியபாவத்தாலிதோ முன்னமே.

### அநுபல்லவி

வல்லமைச்சதாவீர்யன், தலைமைத்தேவாதிபத்யன்,
வல்லதுறுதிதிருச்செயன், உத்தமகிறிஸ்துநாதன்,
மனுடர்களுடை பிணையாளி மத்யஸ்தன்
எனுடபிரிய மணவாளன் சிநேகிதன்,
வங்கனை விக்கித லங்கித்த நேசன்
சங்கமுழக்கிய சங்கையின் ராஜன்
மருவிய துயரொடு குருசினியில் மடிய
திருவுளமாய் சமதேசவுங் கொடிய— கொலை

### சரணம்.

பொக்கியப் பிலாத்தின் கீழாகனின்று
புண்ணியனுர் பாடுபட்டுச்சாக
பூரியராரியர் வீரியமாயடர்
காரிநைசெய் கொடூரமொத்தினம்— பொக்கி
சிக்கைத கடுக்கச்செய்யும் லோக—நாயத்
தீர்ப்பின் உபாயமெல்லாம் போக,
புத்திகெட்டார் மாயம், போட்டிச் சம்பிரதாயம்
பொய்மை மனதான நேயம்—பொற்புபேச்சாலென்றுதாயம்
போதகராகிய காதகர் கூறவும்
பூதர்களாம் வஞ்சபாதகர் சீறவும்— பொக்கியு
பூண்டசொற்படி யாண்டவர்த்தனை
நீண்ட கற்றைடை மீண்டிழுக்கியே

பொங்கி மகாவுதிரங்கள் குபீரென
வுங்கசை வாரடியின் கனவாதைகள்,
பொன்னுருமாறியும் பின்னமதாயிரு
கன்னமெல்லாம் வலிதுன்னவும் நாவெறுதி
புயங்கள் சோர்ந்திட பொன்றியமுர்த்த
வரிந்து பிணைத்தினர், போற்றிடு மத்தக
முட்கிரீடத்தை யமுந்தியடித்து
முகத்திற்றுப்பினர், புகைந்து
வசையென்றது பேசினர் கனைத்து
மனங் கன்றுமலேலினர் பகைத்து நரர் பன்றுதீமைகள்
புடைத்தோர் கோலது கொடுத்து வீரர்கள்
போதகரைத் துச் சிரித்து நீதற மெத்தப்பழித்து
பொன்றாத, குன்றாத, ஒன்றான, நன்றான
என்றேவனின்பால் முழங்காலிடுப்பொது
புதினத்திடனிடவும் விதனப்பட யிறையை
வதனத்திலறையவு மதிகக் கொடுமைசெய்ய,
பொறை யுடனின்று குருசது கொண்டு
பெருசுமையின் கன்றுருவ நடந்து
போற்றிடு மாதரனேகமாயழ
ஆற்றிடு கேசரி னேகமாகவும்
பூங்கனியின் றின்பங்கம் நீங்கவும் நன்றன்
றுங்கம் புகழாகவும் மானிடர் வாழ்கவும் மிக
வேதயனாகி யென்றுயகனோர்
புல்லரோடு குருசினில் மடிய
கொல்கதா மலை மீதிலிறந்திட— கொலை

## பெரிய வெள்ளிக்கிழமை.

### 164

1. திருமனு டவதாரத்தை
விருத்தசேதனத்தை யுன்றன்



அரிய ஞானஸ் நானத்தை
அடைந்த சோதனையைத் துன்பை
வருட முப்பத்து மூன்றின்
வறுமையைய உபவாசத்தை
இருதயத்தன்பை நோக்கி
இரங்குவா யேசுநாதா.

2. சுந்தர ஒலிவக் காவிற்
றூயவர் சூழ்கச் சென்றே
தந்தையம் பரனை நோக்கி
தரையில்வீழ்ந் திறைஞ்சு நேரம்
சிந்திட உதிரவேர்வை
திகிலடைந் தாத்மம் நோக
எந்தைநீர் படுந்துன்பங்கண்
டிரங்குவா யேசுநாதா.

3. முப்பது வெள்ளிக்காக
முத்தியால் யூதாசென்போன்
ஒப்புவித்திட ஒன்னார்கள்
ஒருங்குடன் கரங்கள் பற்றி
சற்பனையாகக் கட்டித்
தயங்கிட நடத்திச்சென்ற
இப்பெருந் துயரங் கண்டே
இரங்குவா யேசுநாதா.

4. விம்பியே சேவல் இரண்டு
தரம்விளிப்பதற்கு முன்னே
மும்முறை மறுத்த சீமோன்
றனைமுகம் நோக்கினோற்போற்
செம்மை [illegible] பொல்லாத்
[illegible]

எம்மையுந் திருக்கண் ணோக்கி
யிரங்குவா யேசுநாதா.

சர்வேசுபரா, சுவாமி, இரக்கமாக எங்களைப்பாரும்;
கிறிஸ்தேசுவே, சுவாமி, கிருபையாக எங்களைப்பாரும்;
சத்தாவியே, சுவாமி, பட்சமாக எங்களைப்பாரும்.

## 165

முதலாவது சிலுவைத் திருவசனம்.

1. இன்னிய முகமலர்ந்து
இருதயத் துருகுமன்பால்
உன்னததேவ மைந்தன்
உலகின்பாற் கருணை கூர்ந்து
"மன்னிப்பீர், என் பிதாவே,
மதிகேளிவர்கள் குற்றம்
மன்னிப்பீர்" என்றுரைக்கும்
மனுவுக்கே ஆமென் என்பீர்.

2. பதிலுக்குப் பதில் செயென்ற
பழமை ப்ரமாண மாற்றிப்
புதியதன் கற்பனையைப்
புவிதனில் காட்ட வந்த
கதிதருங் கருணாமூர்த்தி,
கருணையுற்றுருகித் தம்மை
வதைத்திடும் யூதர்கட்காய்
வருந்தியே ஜெபித்து நின்றார்

3. விற்றதும் வீணன் நானே;
வெறுத்ததும் வீணன் நானே;
அடித்ததும் அடிமை நானே;
அறைந்ததும் அடிமை நானே;



குத்தின கோரன் நானே;
கொலைபுரிந் தவனும் நானே;
இத்தனை பாவம் செய்தேன்,
இரங்கியாட் கொள்ளுமையா.

4. மன்னிப்பீர் எந்தன் பாவம்
மைந்தர் தம் சிலுவை நோக்கி;
மன்னிப்பீர் எந்தன் பாவம்
மைந்தர் ஐங்காய நோக்கி;
மன்னிப்பீர் எந்தன் பாவம்
மரிக்கும் தம் மைந்தர் நோக்கி;
மன்னிப்பீர் எந்தன் பாவம்
மன்னிப்பீர்; ஆமென், ஆமென்.

சர்வேசுபரா, சுவாமி, இரக்கமாக எங்களைப்பாரும்;
கிறிஸ்தேசுவே, சுவாமி, கிருபையாக எங்களைப்பாரும்;
சத்தாவியே, சுவாமி, பட்சமாக எங்களைப்பாரும்.

## 166

இரண்டாவது திருவசனம்.

1. என்னுடன் பரதீசில் இருப்பாய் இன்று என்றீர்;— யேசுநாதா
வைதப்பாவிக்கும் அந்தகல்லாக்கு அருளுமேன்.— ,,
உம்முடன் கூடவிருக்க ஆசிக்கிறேன்,— ,,
உம்முடராச்சியம் என்னையும் கொண்டுபோம்,— ,,

2. கள்ளன் உன் ராச்சியஞ் சேர மன்றாடினன்,— ,,
இந்தக்கள்ளனும் அவ்விதம் மன்றாடுகிறேன்,— ,,
கள்ளன் உன்பக்கத்தில் கூடப்பாடு பட்டான்,— ,,
இந்தக்கள்ளனும்லோகத்திலகஸ்திபொறுக்கச்செய்.— ,,

3. கன்னனுக்கருகில் உன் சிலுவை காட்டி,— ஏசுநாதா
கள்ளனை உம்மிடம் சேர்த்துக்கொண்டதுபோல்,— ,,
கள்ளன் என் நெஞ்சிலும் உன் சிலுவைகாட்டி,— ,,
கள்ளனையே பரிசுத்தனும் ஆக்குவீர்,— ,,

4. துன்பமும் துக்கமும் என்னைச் சூழும்போது,— ,,
அன்பைப்பெருக்கி அருட்கண்ணால் பார்த்திடும்,— ,,
இன்பமான சொல்லும் எவ்விதத் தீர்க்கமும்,— ,,
என் சாவு நேரத்தில் நீர் அளிப்பீர், ஐயா,— ,,

5. உத்தம மனஸ்தாபக் கண்ணீர் விடுகிறேன்,— ,,
உத்தம விசுவாச அறிக்கையுஞ் செய்கிறேன்,— ,,
பத்தா, உமது மகிமையிலோர் பங்கு,— ,,
பத்தனுக்குள்ள பாரிசுத்தந்திடும்,— ,,

சர்வேஸ்பரா, சுவாமி, இரக்கமாக எங்களைப்பாரும்;
கிறிஸ்தேசுவே, சுவாமி, கிருபையாக எங்களைப்பாரும்;
சுத்தாவியே, சுவாமி, பட்சமாக எங்களைப்பாரும்.

## 167

### மூன்றாவது திருவசனம்.

என் செய்வேன், மகனே, நான்
இதற்கோ பெற்றெடுத்தேன்?
இதையோ, பலசோதனையோ,
இப்படி முடிந்திடு.

1. ஐயையோ, பாலகனே, அதிசயமாய் வந்துதித்து
அருமையாய்வளர்த்தனேயோ-இக்-கதிக்குள்ளமைத்தனையோ
அருமைத் திருமைந்தனே, வயி றெரியுதையோ- என்செய்



2. முப்பத்துமூன்றாண்டாய்முதுமொழிமேற்கொண்டொழுகி
முன்னோர்கள்மொழிந்ததிருவாக்கியமெல்லாம்நிறைவேற்றி
முடித்தேன்; நரரை விடுத்தேன்; ஜெயித்தேனே.
என் செய்வேன், தாயே, நான் இதற்கேயவதரித்தேன்;
இனி இவ்வுலகின்வழிபாடென்னுடையதாகுமோ?

3. பாலன் உனைப்பறிகொடுக்க-இப்-பாழ் மனது பதைக்குதைய்யோ,
பாருலகில் எனக்கினியோர் பற்றுமேதுமில்லை.
பாவி நான் போம் வழிகாட்டிடுவாய் மகனே—என்செய்

4. அன்புள்ள சீஷன் இனி-யுமக்-காறுதல், என் தாயே;
அனைத்திடுவாய் அம்மானை ஆதரித்திடுவாய்,அப்பனே, நீ;
அனையும்மகனும் அருள்பெற் றோங்கிடுவீர்.
என்செய்வேன், தாயே, நான் இதற்கேயவதரித்தேன்,
இனி நான் பரீசடைய இன்பவிடை கூறுவீர்.

5. போய்வாரும்,என் சுவாமி,போதும் உமைபெற்ற பாக்யம்;
போய்வாரும்; இனியுமை நான் பார்த்திடுவேன் பரதிசில்
பணிந்தேன் திருத்தாள்,குவித்தேன் சிரமேற்கை—என்செய்

சர்வேஸ்பரா, சுவாமி, இரக்கமாக எங்களைப்பாரும்;
கிறிஸ்தேசுவே, சுவாமி, கிருபையாக எங்களைப்பாரும்;
சுத்தாவியே, சுவாமி, பட்சமாக எங்களைப்பாரும்.

## 168

### நான்காவது திருவசனம்.

1. என் தேவனே, தேவனே, என் என்னைக் கைவிட்டீர்
என்று கதறும் வார்த்தை-என்னையா, தயாபரனே,
என்செவியிற் கேட்கலையோ?

சாவின் இருள்மூடச் சாத்தானும் போராட
கோவினுல் ஏங்கி, என்னையா, தயாபரரே,
சோர்ந்து கூப்பிட்டீரோ ?

2. தேவசந்நிதிமறைய, ஜெகத்தில் இருள் நிறைய,
தேவசுதனே, நீர்-என்னையா, தயாபரரே,
செய்தமுறைப் பாடிதுவோ ?
வானத்தையும் பூமியையும் வன்கரத்தில் தாங்குகின்ற
மட்டில்லா வல்லபத்தை-என்னையா, தயாபரரே,
என்மாபாவ மாற்றினதோ ?

3. என்தேவனேயென்று என்றுபத்தில் நானும்
உன்னதத்தைநோக்கி, என்னையா, தயாபரரே,
உருகியழச் செய்யுமையா ;
என் என்னைக் கைவிட்டீர், என் ஏசுவேயென்று
ஏழை இரஞ்சத்தம்-என்னையா, தயாபரரே,
இரக்கமாய் கேட்டருள்வீர்.

4. சாவின் அந்தகாரம் சதியோனின் சோதனைகள்
தாவுமந்தவேளை-என்னையா, தயாபரரே,
தப்பாமல் காத்திடுவீர் ;
நோயின் அவதியில் நான் சோர்ந்து கதறும்வேளை
பாவிக்காய்ப்பட்ட இந்த-என்னையா, தயாபரரே,
பாடுகளை நோக்குமையா.

சர்வேஸ்பரா, சுவாமி, இரக்கமாக எங்களைப்பாரும்
கிறிஸ்தேசுவே, சுவாமி, கிருபையாக எங்களைப்பாரும்
சத்தாவியே, சுவாமி, பட்சமாக எங்களைப்பாரும்.



## 169

### ஏழாவது திருவசனம்.

1. தாபமாய்க் கொல்கதாவின் கொடுமுடி
தர்ம சிலுக்கு ப்ராணி நீர்
தரணியோரின் தரணியோரின்
தரணியோரின்பேராத்மரட்சிப்புக் கேங்கியே
தாகமானீரோ ?

2. தாக மாகவிருக்குமெய் பேர்களுக்
தண்ணீரோடைக்கு வாரீரென்றோ,
தர்ம ஊற்று தர்ம ஊற்று
தர்ம ஊற்று கல்வாரி மேட்டினிலேயதோ,
தாகந் தீரீரோ ?

3. கானமான் தண்ணீரோடையை வாஞ்சித்துக்
காதலுற்றுக் கதறுமாப்போல்,
கருணையீட்பர் கருணையீட்பர்
கருணையீட்பர் பாதமுக முற்றிடக் கர்த்தனே,
கிருபை கூறுவீர்.

4. உத்த ருத்மவி யாகுல மேலிட்டும்
எத்த ருத்ம மேடேற்றத்துக்காய்
இறைவனே, நீர் இறைவனே, நீர்
இறைவனே நீரிப்பாடு ஏற்றதற்காயுமக்
கென்றும் ஸ்தோத்ரமே.

சர்வேஸ்பர சுவாமி, இரக்கமாக எங்களைப்பாரும் ;
கிறிஸ்தேசுவே, சுவாமி, கிருபையாக எங்களைப்பாரும் ;
சத்தாவியே, சுவாமி, பட்சமாக எங்களைப்பாரும்.

# 170

## ஆறாவது திருவசனம்.

1. மூச்சொடுங்கும்நேரம் முடிந்தது என்றீரோ,—ஏசுநாதா
மூவருஞ்செய்த ஆலோசனை முடிந்ததோ, ,,
ஆவியால்பேசின தீர்க்கரின் வார்த்தைகள்,— ,,
மேவிச்சிலுவையைத் தாவிமுடிந்ததோ?— ,,

2. முந்தின ஏற்பாட்டு முன்னடையாளங்கள், ,,
முற்றும்மறைந்து முழுதும்முடிந்ததோ,— ,,
தேவாசனம் விட்டுப் பூதலம் நீர்வந்து— ,,
தேவசித்தம் நோக்கம் யாவும்முடிந்ததோ? ,,

3. மாண்டு மனிதரை மீண்டுகொண்டதினால்,— ,,
மானிடரட்சிப்பு முற்றும்முடிந்ததோ,— ,,
மீட்பின் கிரியையில் பாக்கியில்லாமலே— ,,
மீட்கப்பட்டோர்களின் வக்கம்முடிந்ததோ? ,,

4. என் துன்பம்துக்கம்எல்லாம் முடிந்துபோச்சே,— ,,
ஏழையிதற்குநான் என்னபதில்செய்வேன்?— ,,
இன்னமும் உம்முட ஆவியின் வேலை,— ,,
என்னில்முடித்து ஈடேறவேசெய்திடும்,— ,,

5. எந்தனுக்கு கட்டளையிட்டவேலையை,— ,,
உந்தனிருபையால் நான் முடிக்கச்செய்யும்,— ,,
சுந்தரமோட்சத்தில் என் ரட்சிப்பை முடித்,— ,,
வந்துயிளைப்பாறத் தந்துதவிசெய்யும்,— ,,

சர்வேஸ்பரா, சுவாமி, இரக்கமாக எங்களைப்பாரும்
கிறிஸ்தேசுவே, சுவாமி,கிருபையாகஎங்களைப்பாரு
சுத்தாவியே, சுவாமி, பட்சமாக எங்களைப்பாரும்.



# 171.

## ஏழாவது திருவசனம்.

1. அப்பா பிதாவின் அருமைத்திருக்கரத்தில்
தப்பாமல் ஆவியை நீர்—என்னையா, தயாபரரே,
ஒப்புவித்துச் சென்றீரோ?
செப்பியவார்த்தை சிரசை நீர் சாய்த்தவுடன்
எப்பாவியும்படிக்கு-என்னையா, தயாபரரே,
இதயத் தெழும்பின்றோ?

2. தீர்க்க சமாதானத் திறந்திலங்கும் உம்சாவை
மார்க்கவைராக்கிகட்கு—என்னையா, தயாபரரே,
மாதிரியாய் வைத்தீரோ?
பரிசுத்தமாய் நடந்து பரிசுத்த சாவு பெற
பாரிலுள்ளோர் தங்களுக்கு-என்னையா, தயாபரரே,
படிப்பினையாய்ச் செத்தீரோ?

3. பார்த்துநின்றவர் புலம்பப் பாதாளஞ்சென்றீரோ
காத்துநின்றோர் காண—என்னையா, தயாபரரே,
காரிருளும் மாறலையோ?
பாவிகளானோர்கள் பரதீசு செல்லும் வழி,
தேவனே, முன் சென்று-என்னையா, தயாபரரே,
திறந்துவைக்கப் போனீரோ?

4. மனைவியாஞ்சீயோனின் மணவாளன் போறீரோ?
தனியேயிருக்குநான்-என்னையா, தயாபரரே,
தவித்துப் புலம்புதற்கோ?
என்னையன்பாய்நேசித்துஎன் னுயிரைக்காப்பதற்கு
தன்னுயிரையொப்பிவித்த-என்னையா, தயாபரரே,
தயவை மறப்பேனோ?

சர்வேஸ்பரா, சுவாமி, இரக்கமாக எங்களைப்பாரும்;
கிறிஸ்தேசுவே, சுவாமி, கிருபையாக எங்களைப்பாரும்;
சத்தாவியே, சுவாமி, பட்சமாக எங்களைப்பாரும்.

## கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.

### 172

1. உன்னதத்தின் தூதர்களே, ஒன்றாகக் கூடுங்கள்,
மன்னன் ஏசுநாதருக்கே வான்முடிசூட்டுங்கள்.

2. காலதேசத்திருந்தோரே, கடந்துவாருங்கள்,
மேலோனேசு நாதருக்கே மெய்முடிசூட்டுங்கள்.

3. கல்மனதோடே கொல்கிறேன், காட்டார்களே, நீங்கள்
புன்னகைகொண்டு ஏற்பானேன்? பூமுடிசூட்டுங்கள்.

4. இந்தியா தேசத்தார்களே, ஏகமாய்க் கூடுங்கள்,
பூர்த்தானங்கள் அர்ப்பமென்றே பொன்முடிசூட்டுங்கள்.

5. சின்னகாங்களை விட்டு சீக்கிரம் எழுங்கள்,
பொன்னகரம் சாலேமுக்குப்போய் முடிசூட்டுங்கள்.

6. குற்றமில்லா பாலகரே, கூடிக்குலாவுங்கள்,
வெற்றி வேந்த யேசுவுக்கே வெண்முடிசூட்டுங்கள்.

7. வாலிபர், கன்னிகைகளே, வந்து மகிழுங்கள்,
சாலேமின் கூட்டத்தோடே மேல்முடிசூட்டுங்கள்.

8. இயேசுவென்ற நாமத்திற்கு எல்லாரும் பணிங்கள்,
ராஜரேயவர் தலைக்கு நன்முடிசூட்டுங்கள்.

9. சகல கூட்டத்தார்களே, சாஷ்டாங்கம் செய்யுங்கள்,
மகா அரசிவரே, மாமுடிசூட்டுங்கள்.



10. புண், கல், செம்பு, பொன்னை விட்டு வாறேனுன்னிடை
வந்தேன்,
முள்முடிபெற்ற தலைக்கு விண்முடிசூட்டுங்கள்.

### 173.

1. இன்றேசுயிர்த்ததால், எக்காள ஓசையால்
விண்மண்ணினின் ராஜனவரைப்போற்றிப்பாடுவோம்.

2. சம்மனசோர்போற்றும் தங்கள் ஏசுவென்றும்
இகலோகமீதிருந்தும் புகழ் உண்டாவதாக.

3. என்சேனாபதியாய் என்முன் செல்லுதற்காய்
மரித்து உயிர்த்தோர்களில் முதற்பலனானார்.

4. கிறிஸ்துவுடன் நான் மரித்ததுண்டானால்,
அவருடன் எழுந்திருப்பேன் என்று நம்புவேன்.

5. இந்த நன்னம்பிக்கை என்னிருதயத்தை
நடத்திச் சீர்ப்படுத்தி, நேராய் உம்மில் சேர்க்கவும்.

6. ஜெகநாதா, நின் வார்த்தை இதம் பொய்யாப்படி
பூதர் அடக்கி மூத்தரித்தும் உயிர்த்தெழுந்தீரே.

7. பொன்முடியணிந்த இம்மானுவேலனே,
நின் போல் கிரீடம் தானுத்தரிக்க கிருபையளியும்.

### 174

பல்லவி.

வந்தனம், ஜெயா, வந்தனம்—எம்சிறை தவிர்த்த மைந்தனே.

அனுபல்லவி.

சந்ததம் உமக்கென்றைக்கும்—சதாசீர்ய காலமாகவே.

சரணங்கள்.

1. இம்மானுவேல்உயிர்த்தனர்—எம்பலவ்யாவும் தீர்த்தனர்
சம்பத்துடன் சாம்வாழுமே—சகலரும் அவர் ஈந்தனர்.

2. சாவின் கூரொடித்தனர்—சாத்தானையழித்தனர்,
பாவியோடிவாவென்று—பட்சமாயழைத்தனர்.

3. விண்ணின் தூதர் யாவரும்—வேகமாயோடிவாரார்,
மண்ணினுள்ளயாரும்போய்-அண்ணலைவணங்குவோம்.

4. யூதர்முகம்வாடிற்று—நாதனுருயிர்த்ததால்;
ஜாதிகட்காய் மரித்த—ஜீவநாதா, பேசவே.

5. பாதியின்வழிதிறந்தது—அரசாளும் காலம் வந்தது,
தரிசாய்க் கிடந்த நிலத்தின்மேல் தமதாசீர்வாதம்
பொழிந்தனர்.

6. அல்லேலூயா, ஸ்தோத்திரம்-அல்லேலூயா, கீர்த்தனம்,
அல்லேலூயா,என்றைக்கும்-ஆனந்த கீதங்கள்பாடுவோம்

## 175

பல்லவி.

இயேசுவும் மேசியாவே உயிர்த்தார்—கிறிஸ்தேசுவும்

சரணங்கள்.

1. தாசர்புகழ் தோத்ரகீதன்—சுவாமி மனுவேலாசன்
வாசகப்படியே மூன்றாம்நாள்—எழுந்தார்— இயே

2. சூரியன்போல் தேகம் மின்ன—சூழ்புவியதிர்ந்திடவே
வீரியசேவகர் நடுங்க—பயமாய்— இயே



3. மெத்த பிரகாசஉடை—மின்னொளிபோலேயிலங்கும்
கர்த்தருடதூதர் ரண்டுபேர்—நிற்க— இயே

4. மரணமதின் பயம் ஒழிக்க—வல்லசர்ப்பம் நடுநடுங்க
சரணம்செய்யும் அடியார்மகிழ்வாய்—துதிக்க— இயே

5. தற்பரனுர்சாவை வென்று-தானுயிர்த்தெழுந்தாரென்று
பற்பல சாட்சிகளும் உண்டு—தெளிவாய்— இயே

6. தேவசாட்சி தூதர்சாட்சி—சீடர்சாட்சியாவும்சாட்சி
காவற்காரர்களும் சாட்சியே—மெய்— இயே

7. பாவத்துக்கு காங்கள் செத்து நீதிக்குப்பிழைத்தெழும்ப
ஆவியின் கிருபைகொடுக்க—எழுந்தார்.— இயே

8. சாவைவென்றார் பேயைவென்றார்—சத்துருக்கள்சதியை
வென்றார்
பாவமற்றபரிசுத்தராய்—உயிர்த்தார்.— இயே

பிதாச்சுதனாவியற்கும்—பகருமுறைப்படியேதோத்ரம்
ஆதியந்தகாலமட்டுக்கும்—உண்டாக— இயே

## 176.

பல்லவி.

யூத ராஜசிங்கம் உயிர்த்தெழுந்தார்,
உயிர்த்தெழுந்தார், பகைக ஜெயித்தெழுந்தார்.

1. வேதாளக்கணங்கள் ஓடிடவே
ஓடிடவே உருகி வாடிடவே- யூத

2. வானத்தின்சேனைகள் துதித்திடவே
துதித்திடவே பாவினத் துதித்திடவே- யூத

3. மரணச்சங்கிலிகள் தெறிபட்டன,
தெறிபட்டன நொடியில் முறிபட்டன- யூத

4. எழுந்தாரென்ற தொனி யெங்கும் கேட்குதே,
எங்கும்கேட்குதே பயத்தை என்றும் நீக்குதே- யூத

5. மாதர் தூதரைக் கண்டகமகிழ்ந்தார்,
அகமகிழ்ந்தார் பாரினவர் புகழ்ந்தார்- யூத

6. மரித்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை,
மரிப்பதில்லை இனி மரிப்பதில்லை- யூத

7. பாவத்திற்கென்றொரு தரம் மரித்தார்,
தரம் மரித்தார் ஒரே தரம் மரித்தார்- யூத

8. கிறிஸ்தோரே, நாம் அவர் பாதம்பணிவோம்,
பாதம்பணிவோம், பதத்தைச் சிரமணிவோம்- யூத

## 177.

பல்லவி.

சுபஜெய மங்களமே-நித்திய சுபஜெய மங்களமே,
சுகமே-தரவே-புவிமீதுயிர்த்த சுதனேசு நாதருக்கே.

சரணங்கள்.

1. நீக்கருணைத்தனரே, இன்று
ஜெக உயிர்த்தனரே;
ஜெகதீன்-பாலர்-சுதனர்-கிறிஸ்து
ஜெயமாயெழுந்தவர்க்கே — சுப

2. ஆதர்சங்கம் முழங்க-வானஞ்ஜோதியுடனிலங்க
அரிதாய் பாலர்-வெளிகூர்ந்திடவே
தொனியாயெழுந்தவர்க்கே— சுப



3. அங்கம் குளிர்ந்திடவே-உல
கெங்கும் மகிழ்ந்திடவே,
அடியார்-நடுக்கம்-விட்டொழித்து
அதிவலமெழுந்தவர்க்கே.— சுப

4. பயமெனக்கேன், மனமே, யேசு
பாக்யனைத் துதி தினமே;
பரமே-திடவே-விசுவா-சிகட்கு
பாதை காட்டினவர்க்கே.— சுப

5. காலையிலே யெழுந்து-நிதம்
கர்த்தனையே நினைத்து
கரமே குவித்து-துதி பாடவே
காலை யெழுந்தவர்க்கே — சுப

6. ஆனந்தம் பாடல்கள்-பர
னன்பைக் கொண்டாடவும்,
அனைவரும் நிலையா-யெழுந்து தொழவே
அருள் கூர்ந்திட்டவர்க்கே.— சுப

7. எக்காளமே தொனிக்க-பக்தர்
யாவருமே யெழும்ப,
இனிதாயரசா-ளவுமே புவியில்
வருமிம்மானுவேலர்க்கே.— சுப

## 178.

பல்லவி.

வாருங்கள் போற்றுவோம் வானுயிரேசுகோன்-அவர்
வெற்றியாய் மேன்மையாய், ஜெகஜோதியாய்
உயிர்த்தெழுந்தனர்.

சரணங்கள்.

1. ஆதமேவையர் செய்த ஆராக் கொடுவினையால்
ஆருயிர் விடுத்தாரியதேவ அருமை அண்ணலின் அன்பை
யோசித்து.—

2. ஊழிகாலமவரோடு உயிர்ஜோதி விண்தாவில்
உசிதமாய் மிகக் கச்சிதமாய் திரு அச்சயன்பாதம்
அடையவே.—

3. காவலர் நடுங்க மீதுகரர் நெருங்க என்றும்
ஸ்தோத்திரம் சங்கீர்த்தனம் புகழ் ஓசன்னகீதம்பாடவே

4. வேதாளம் நடுங்க பாதாளம் ஒடுங்க வெற்றியோடு
வென்ற மன்னனை வாழ்த்தி மிகவும் வணங்கவே-

5. விண்ணோர்கள் பாடவே மண்ணோர்கள் ஆடவே
ஜெயகோலமாய் உயிர்த்தனர் ஏசுதேவபுத்திரனென்றே-

6. போற்றுங்கள் வானோரே புகழ்ந்து கொண்டாடுங்கள்
பரிசுத்தனை நிருத்துவனை தேவநாதனை ராஜகோத்ரனை-

7. அல்லேலூயா ஸ்தோத்திரம் அல்லேலூயா கீர்த்தனம்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா என்றைக்கும்-

## 179

பல்லவி.

வந்தனம் வந்தனமெந்தை பராபரன்
மைந்தனின் சுதனே
சந்ததஞ் சந்தத மார்த்தனங்கோவே
யனந்தவனந்த சங்கீர்த்தனத் தேவே



சரணங்கள்.

1. தந்தையதருஞ்செய்த கந்தையறும்படி
வந்து பூதலமே
நிந்தையுடன் கொலைப்பட்டு மடிந்தார்
உந்து தினந்திரி யத்திலெழுந்தார்— வந்

2. தேவபரன் சுதன் மானிடர் பாதகந்
தீரவே பலியாய்
ஜீவனைவிட் டடக்கண்ட மூன்றுநாட்
செங்கதிரென்ன வுயிர்த்தெழுந்தாரே— வந்

3. ஆதித்தவாரத்திற் பூமியதிர்த்தல
தாயதிர்ந்திடவே
ஜோதிப்பிரவையாகக் கிறிஸ்து வுயிர்த்தார்
பூதப்பசாசைத் தனித்து ஜெயித்தார்— வந்

# கிறிஸ்து பரமேறுதல்.

## 180

பல்லவி.

ஆலேலூயா கிறிஸ்து அம்பரமேறினர்.

அநுபல்லவி.

மேலேலோகிட் ஜெயத்தை இமையர் கூறினர்-ஆலே

சரணங்கள்.

1. அக்கினி மண்டல தூதர்கள் பணித்தார்
முக்கிய பத்ராசன யாவரும் பணித்தார்— ஆலே

2. தூதர்கள் சேனைகள் சோபனம் பாடினர்
ஆதிபிதாவிடம் அதிபதி கூடினர்— ஆலே

3. மோட்சாதி மோட்ச கவாடங்கள் உயர
சாட்சாத் மகத்துவ மேசியா பிரவேசித்தார்-ஆலே

4. ஜெயஜெயா, ஆர்ப்பரிக்கிறோம் இத்தனான்
உயருயர், கிறிஸ்தின் உசித சபையே— ஆலே

5. ஸ்தலத்தையும் நமக்காயத்தஞ் செய்கிறார்
நலத்தையுந் தேவாவியையும் அருள்வார்— ஆலே

6. பேயோடு பாவமும் நரகமுந் தாழ்ந்தது
ஆயுமரணமும் சாபமும் வீழ்ந்தது— ஆலே

## 181

1. மனமயங்காதே, என்மானே, மனமயங்காதே.
நான் வான்போய் வருவேன் தியங்காதே
கனமே பெரு சபையில் வாழணமே
கண்ணே கலங்காதே, என்மானே— மன

2. மனுவேல் தம்பிரானே, என் பிரானே.
வானு சனத்தி லிருப்போனே
அனியாயப் பாழுலகிற் கொடிதாம்
அவதியுத் தரிப்பேனோ, என்சுவாமி.—

3. உத்திரிப்பா யனமே, சீயோனே.
உலகம் பகையே செயுத்தினமே
சத்திய வேதவி ரோதிகளாச் சங்
கரிக்கவ ருவரினமே, என்மானே.— மன

4. இனமே வருவோனே, என்னாதா.
என்னுத்துமநேசரென் பெருமானே
மனமே சகியே னுன்னைப் பிரிய
மாலாய் மலைவேனே, என்னாதா.—



5. மலைவானேன் பெண்ணே. சீயோனே.
என் வாஞ் சைக்கினி தாக்கிய கண்ணே
நிலையாம் வாசஸ் தலமாயத்தம்
நீடிவரு வல்லிண்ணே, என்மானே— மன

6. விண்ணுல கத்தேறி, என்பிரானே.
வீற்றிருந் தனதரு ளுரை கூறி
மண்ணுலகிற் றிரும்பாமுனம் வருமே
மருளல கைகள்சீறி என்பிரானே—

7. சிறந் திகையாதே, என்கண்ணே.
திருவரு ளுன்னுடன் பிரியாதே
சுருந்தகாலம் மட்டு முன்னே
டிருப்பேன் முப்போதே, என்மானே— மன

## 182

பல்லவி.

மேசியா மிக்க சலாமே
பரலோகர் செறும் ராஜே—மேசியா

அநுபல்லவி.

யேசிரேலாதிபனே—யென்று மேலுமை யாண்டருளே--மேசி

சரணங்கள்.

1. பரதேவ நரரூபா வருங்கூர் நசரைநபி
கருணைகர சொரூபிநித்திய சங்கீர்த்தனனே—மேசி

2. அடியா ராதரவே யேசையரே பரமரபி
மிடிதீவினையறவே ரட்சியும் கர்த்தா சரணே- மேசி

3. பரனே சோதியுமே பாதகர்மேற் கருணைபுரி
சரணாவிந்த மடைந்தோம் கருணாம்பரமே— மேசி

4. சருவாதிக்கரசே யுக்கிரமனே சக்கரபதி
கிருபாசன துரையே யெங்கள் பவந்தவிரே—மேசி

## பரிசுத்த ஆவியானவர்.

### 183

பல்லவி.

ஓடிவரும்உன்னத ஆவி,—தொண்டரைத்தேடி
ஓடிவரும் உன்னத ஆவி.

அனுபல்லவி.

நீடும் நசரேசர் கிறிஸ்தீசர் உரைப்படியே
கிர்ணய வரஞ்சொரிய வன்னியின் வடிவமாக-ஓடி.

சரணங்கள்

1. உம்மையன்றி ஜீவனில்லை ஒளியில்லை நன்மையில்லை
செம்மைவழி காண்பதில்லை செருசலை சேர்வதில்லை
எம்மையடர் இருள்நீங்க இமையின்கிரண தூங்க
தம்பிரான் தயைகளோங்க சருவலங்கள் தேங்க— ஓடி

2. மூன்றுபெந்தே கோஸ்தேயின் அந்தமுயர் பெருநாளில்
உந்தனருள் தனக்கேங்கி சிந்தித்த அர்ச்சய ஆளில்
பந்தித்த இருளைநீக்க பாக்கியசம் பன்னூராக்க
வந்த வண்ணமாக அருள் தந்தருள் விரைவினில்—ஓடி.

3. அகிலாண்டகோடி உயிர்க் காதார தாதையாய்
அகோச்சர திட்சையருளும் பிரக்யாதியாய்
சகல பெலனருள் நித்யானந்த ஒதையாய்
சகல மெய்தாசர்மேல் நிழலிடும் ஜோதியாய்— ஓடி.



### 184

பல்லவி

சந்ததம் ஸ்தோத்திரமே சதானந்த
தாதை தினந் தோத்திரமே.

அனுபல்லவி

அந்தரத்தினின் றிறங்கும் அரூபியே
தந்தை சுதனில் தளிர்த்தெழும் ஆவியே— சந்ததம்

சரணங்கள்

1. வானகத்தெழில் காற்றே மனுப்பயிர்
வாழ்க வளஞ்செய் ஊற்றே
ஈனரைத் தேற்றி இதயத்தினைப்பாற்றி
ஞானப்பனியை யூற்றி நன்மையருள் தெய்வீகா-சந்ததம்

2. ஜீவத்தண்ணீர்ச் சுனையே எழுந்தவர்
தாவியையே கனையே
ஆவலாய்த் தேடிடும் ஆரையுந் தேற்றிடும்
தேவதேவர்கள் கோவே ஜீவச் செழுங்காவே—சந்ததம்

3. முத்தியருள் சுமுகமே கிறிஸ்தீசர்
மொழியருள் குரு குகமே
சத்ய கடவுளர் சம்பந்த உதகமே
சபல சாம்பிராட்சய சஞ்சாரமுயர் கீகமே— சந்ததம்

## தேவஸ்துதி.

### 185

பல்லவி.

ஆனந்தங் கொண்டிடுவோமே—மெய்யாகஎல்லாரும்
ஆனந்தங் கொண்டிடுவோமே மெய்யாக எல்லாரும்.

அநுபல்லவி.

ஆனந்தம் ஜீவானந்த மிவ்வாண்டகம் மகா சொந்த
மாகப் பராபரனே நமை வாகாய்ப் பராமரித்தார் தினம்
தத்திமி தத்திமி தத்திமி தத்திமி
தீத்தருமே சம தத்தனுக்கே துதி
தகுந்த ஜனுதகரி தகுந்த ஜனுதகரி
சகிர்த சுமனதுதி சகிர்த சுமனதுதி.
தாம்தாம் தரிகடதோமென தீம்தீம் திரிகடமேயென-
ஆனந்

சரணங்கள்

1. சென்ற காலங்களில் சுகக்ஷேமமாக—நமையே
நன்றாக ரட்சித்தார் காருணமாக—இதனை
குன்றாமற் சிந்தித்தேயிக என்றென்றைக்குமேயன்பாக
கோணுயனை தொடுமே பயன் வீணாக நினைவொடுமே
குற்றமை தற்றுயிர் நற்றவ முற்றுமே
இற்றையே பத்தி விதத்தோடு இங்ஙனம்
குருவை பரனை உயர் அருமை மரிமகனை
வீறயலருள் சொரியும் கிருபைவா ஆவியை
கூடித்துதி செய்திடுவோம் கவி பாடிப்பதம் போற்றிடு
வோம் தினம்— ஆனந்

2. காற்றுப்புசல் வருத்தந்தான் கடந்தோம்—இன்னுமே
கூற்றுப் பசாசு செய் கோளாறும் வென்றோம்-சுற்றிலும்
நாற்றிசையிருந்து துன்பம் நம்மை வந்தெதிர்த்தும் தேவ
காணு பராமரிப்பானது சேனு சமுத்திரமானது



நட்பொடு தற்பர னெப்பறு பற்பல
நற்பலன் அற்புதம் யாவு நினைந்திடில்
கவில வரிய நது தவிர அனந்தமது
புகலா விற்பனர் பெருங் கவன மடங்கிடாது
நாம் யாவருங்கனி கூர்ந்துமே பாவால் துதி பரிவுடன்
செய்துமே— ஆனந்

## 186

பல்லவி.

தோழரே, சேர்ந்து வாருங்கள்
தேவனைப் புகழ்ந்து பாடுங்கள்
சேனையின் தேவன் நல்லவர்
தேவன் நல்லவர், தேவன் நல்லவர்
என்றல்லேலூயா சொல்லி பாடுங்கள்.

சரணங்கள்

1. காவலர் தளர்ந்து போய்ப் பெல
சாலிகள் கனிப் போமுன்னும்,
விண்ணிகள் நசுங்கிப் போமுன்னும்,
கேட்பவர் குன்றிப் போமுன்னும்
ஆதரவான இயேசுநாதனை
வாலிபத்தினில் நீர் நினைத்திடும்.— தோழரே

2. கடைசிநாள் வரும்போது, நீர்
சுத்தராய் ஆர்ப்பரிக்கவும்,
பேரிகை தொனிக்கக் கேட்கவும்,
தேவனை தரிசித்தானவும்,
மோட்சத்தில் பங்கடையவும்,
வாலவயதில், ஜீவநதியில்
தாகம் தீர்த்து உம் பாவம் நீக்கிடும்.— தோழரே

3. மைந்தனார் பதத்தைப் போற்றி, நல்
வித்தையாய் சிறந்து, நல்வேத
மக்கையில் சேர்ந்திடும், திரு
வேந்தனை வணங்கிடும், பரி
சுத்தனைப் போற்றிடும், மறு
லோகமதனில் ஆதசேனையோ
டேகி மாமகிழ்வாகி வாழலாம்.— தோழரே

## 187

### பல்லவி.

இல்லா என்தனுக்கு என்றும் நிறைவாய்
எல்லாம் தந்த உன்னை என்றும் துதிப்பேன்

### அநுபல்லவி

உன்னை என்றும் துதிப்பேனென்னை ஏற்றுக்கொள்வாய்
வினைமாற்றிய உந்தன் செயல் போற்றிப் புகழ்வேன்-இல்லா

### சரணங்கள்

1. வானம்புவியாவும் செய்துமங்களமாய் ஏதேன் வைத்தும்
சாப்பேயின் சொல்லைக் கேட்டு நீயகனி தின்று ஜீவ
—னில்லா

2. பாவனின்றி வாட உன்னை பாலனாய்ப் பெற்றெடுத்து
நிலவெளி மீனைப்போல மின்றிலங்கவைத்தமக -வில்லா

3. பரதேசி போலலைந்தேன் பாதம்பட்ட இடமெல்லாம்
அரசான அன்புவைத்து அனந்தகாலம் இருந்திடவில்ல
—யில்லா



4. சோதும்பையுமாக வந்த கோலமெல்லாம் நீதவிர்த்து
பாலும் தேனும் ஓடும் கானான் பாக்கியத்தைத் தந்து
பொரு— னில்லா

5. கிழக்கு மேகஸ்தம்பம் நின்றிலங்க தீபஸ்தம்பம்
குழவரு சத்துருக்கள் தும்சம்செய்யவந்தவனை-யில்லா

6. சிங்கக்குகை சிறைச்சாலை சிறந்த அக்கினியின் சூளை
பொங்குங்கடல் தனிலேயும் போற்றிஎனைக்காத்துமீட்பு
—இல்லா

7. நன்றிகெட்ட மகனாக பன்றியோடலைந்து வந்த
அன்றே எதிர்கொண்டு முத்தித்து பங்குதந்து நன்றி
—யில்லா

8. கள்ளமற்ற உந்தன் ஞானம் தூய்மனம் வேகவைத்து
முன்னில் உடைத மாடாமென்னை மென்ன ஒளிகாட்டி அறி
—வில்லா

9. ஜீவகனிதின்று வாழ ஜீவநதி தீர்த்தமாட
பாவந்தீர்க்கவந்த உந்தன் தாகத்துக்குக் காடிதந்தன்
—யில்லா

10. எல்லாமில்லா என்தனுக்கு எல்லாம் ஏமாக வென்று
எல்லைவற்றுக் கெல்லாமாக ஈசனுனை தந்தாயென்றும்
சொல்லத்திறமோ முடி. வெல்லையுனதே ஒரு
நல்ல வரமாய்ப் புகழ் சொல்லத்தருவாய்—இல்லா

## 188

### பல்லவி

1. ஜெகதீன்பனை யேசுநாதனை—ஜெய
வீரமுள்ள மனுவேலனை—பவ
மோசனஞ்செய் மனுநேசனை—பதம்
பாடிட வாருங்களேன்

அநுபல்லவி

பாலனை நாதனை—மகதேவனு மகி மாசனை
பட்சகனை ரட்சகனை—பாவிகளடைக்கலமேருவை
யிந்தப்புவிமீது தேவரெல்லாருக்கும்
வநுமகாராஜனு மேசோவானவயே
கீர்த்தனம் பாடிக்கொண்டாடுங்கள்—பத
தோத்திரம் பாடி முன்சாருங்கள்— ஜெக

சரணங்கள்

1. புவியடி தானுள்ள தானதும்—வளர்
பருவத வுயர்வு மேலானதும்—அலை
திரை கட லாழங்களானதும்—தேவ
கைப்பொருளானதுவே;
புவியாவும் செய்தவரை—உலர்ந்ததரையுருவாக்கினவரை
மனுவானகமையாவும்—உருவமதாகச் செய்தான் பரனை
பரமண்டலத் தான் பரதேவனை
தரைமண்டலத் தேகிய நேசனை
பணிந்து வணங்கிட வாருங்கள்—மிக
குனிந்து ஜெபஞ்செய்ய வாருங்கள்— ஜெக

2. இருந்தநகர் தேவபிதாவையும்—மனு
ரட்சக தேவ குமாரனையும்—பரி
சுத்தாகம் மாதேவ ஆவியையும்—அதி
மகிமையாய்ப் பாடுவோம்;
தற்பரனை யெப்பொழுதும்—செப்பமுடனிக் காலமுதல்
இப்பொழுதும் பிற்காலம் வரை— செப்பிய துதி மிகக்
கூறுங்கள்



அதிசயமான கிறிஸ்தேசு நாதரா லென்றும்
ஜெயங்கூறிப் பதம்பாட வாருங்கள்
நயமான கிருபைகள் பெற்றதா லென்றும்
ஜெயவேந்தர் பதம்பாட வாருங்கள்— ஜெக

## 189

பல்லவி

சூட்டும் ஜெயமகுடம் அவனினைத்
தோத்திரித்துப் புகழ்ந்து—அவனுக்கு

அநுபல்லவி

சூட்டுங்கள் அதரே சாஷ்டாங்கஞ் செய்யேசு
சுந்தரநாமத்தின் பெலத்தை வாழ்த்தி வாழ்த்தி— சூட்டும்

சரணங்கள்

1. ஜேசுநாம அறிக்கை செய்து ரத்தஞ்
சிந்தின சாட்சிகளே—உமைத் தம
தாசனத்திலிருந்து அழைக்கிறார்!
அன்புள்ள வீரர்களே!
ஈசாய் மரக்கிளை எசையனை என்றும்
ஏகச் சக்கிராதிபராகப் புகழ்ந்தேத்தி— சூட்டும்

2. பன்னிரு கோத்திரமாய்ப் பலுகிய
பார்த்திபன் வங்கிஷமே—வாவா
பின்னப்பட்டுச் சிதறிப் பெலன்கெட்டு
மீந்த இசரேலே!
உன்னைத் தெரிந்துகொண்டோன் அருட்கண்ணாலே
யென்றி ரட்சிப்ப துறுதி, கெம்பீரித்து— சூட்டும்

3. பாசமுடன் கூடிப் பலபல
பாவைநகரைப் பேசிப்—பூகோளத்தில்
தேசதேசந்தோறும் கோத்ரங்களாய்
சேர்ந்து வசிப்போரே!
ராஜமகிமை களைந்து சகலத்தையும்
யேசுவுக் காதீனமாக்கி யவருக்கு— கூட்டும்

4. மானிடராகிய நாம் பரிசுத்த
வானவர் சேனையுடன்—ஒருமித்து
பானு விறில்தேக பொற்பாதம்
பணிந்து நமஸ்கரித்து
சேனையின் கர்த்தருக் கோசியன்று ஜெக
திக்கெட்டும் ஓச்சநு செங்கோல் மன்னன் யேசுவை—

## 190

பல்லவி

தேவா திருக்குமாரனுக்குத் தோத்திரம் ஓசன்னா—ஜெய
தோத்திரம் ஓசன்னா—நித்திய
தோத்திரம் ஓசன்னா

அனுபல்லவி

ஆவலதாயுல கோர் பவமான அநுதியும் மனுவானோர்—தேவா

சரணங்கள்

1. ஆதி திரித்துவ ஜோதி
ஆண்ட பரனுட நீதி
வேதமறையுட ஜோதி
மீளவும் மானிடர் ஜாதி



வானுலகேறியே நீடூழி வாழ மகாதிருவுளமானோர்
தானவர் சூடிய திவ்ய கிரீடமுமே முடியிடலானோர்
அற்புத விநோதன்
அர்ச்சய பொற் பாதன்
அருள்தேவப் பிரசாதன்
அனைத்துயிர்க்கும் நாதன்
அன்பர்கள் சிந்தை மகிழ்ந்து வளம்பெற
இன்பமிகுந் துலகந்தனில் மேவிய— தேவா

2. ஆரணசத்தியம் ஓங்க
அஞ்ஞான இருள் நீங்க
நாரணியோர் பவம் நீங்க
தற்பரனோர் அடிதாங்க
அந்தமில்லாத பராபரனவர் அன்புருவாய் வந்தார்
சந்ததமும் சபையின் நடுவே குருமார்களையும் தந்தார்
சீருலகமெங்கும்
தேவாலயங்கள்
தேசுற விளங்க
ஜெய மங்களங்கள்
சிந்தனையுங் கனவிந்தையுடன் சொல்லி
மைந்தர் சிறந்து தொழும்படி நாடிய— தேவா

3. ஆவை மரிமனை மகிழ
அற்புத மங்களம் புகழ
ஏவை செய்த விநயசல
இஸ்ரவேலரோடு சகல

ராஜர்களும் குருதேசிகளும் கவிநாவலர் காவலரும்
மாசறு பூசுர வானவர்சேனை பல் மாதவரும் தொழவே
மா பரமட்டும்
வானதிசை எட்டும்
வாழ்த்தி வணங்கட்டும்
மானுவேல் ஆளட்டும்
வஞ்சகர் நெஞ்சம் அஞ்சட்டும் ஜெப
விஞ்சையர் கொஞ்சி இறைஞ்சட்டும் திவ்விய— தேவா

## 191

1. தோத்திரமே தோத்திரமே ஏசுசுவாமிக்குத்தோத்திரமே
தோஷியினை ரெட்சிக்கும் பரிசுத்தர்க்கு தோத்திரமே.

2. கோடாகோடி தூதர்கள் சபைகூடி நடனமாடி
பாடியுமைத்துதிக்க பாவியானும் உம்மைத்துதிப்பேன்.

3. கேருபீன் சேராபீன்கள் உடல்செட்டைகளால்மூடி
சேராய்உமைத்துதிக்க நீசன்யானும் உமைத்துதிப்பேன்

4. கன்னியர் கீதம்பாடி ஏசு கர்த்தனையே போற்றி
உம்மைத்துதித்திடவே உமை யானும் துதித்திடுவேன்.

5. பரிசுத்தவான்கள்சங்கம் எங்கள் பார்த்திபன் சேனையே
தரிசித்து போற்றிடவே தாசன்யானும் உம்மைத்துதிப்பேன்.

6. மூப்பர்கள் சுற்றி நின்று எங்கள் மன்னவன் ஏசுவையே
ஆர்ப்பரித்து துதிக்க அடியானும் உம்மைத்துதிப்பேன்



7. தாழ்த்திதலைகுனிந்தொத்த சாட்சிகள் கூட்டமெல்லாம்
வாழ்த்தி உம்மைத் துதிக்க வாழ்த்தி யானும் உம்மைத் துதிப்பேன்.

8. பூமியின் தாபரங்கள் புஷ்பம் பூத்து தளிர் மலர்ந்து
சுவாமி உம்மைத் துதிக்க பாவி யானும் உம்மைத்துதிப்பேன்.

### கிறிஸ்துவின் மாட்சிமை.

## 192

பல்லவி

ஆசைக்கிறிஸ்தரசர் இவர்தானோ—என் தன்
அருமை ரட்சகர் என்போர் இவர்தானோ?

சரணங்கள்

1. மாசில்லாத சித்திர பானுபோலுதிக்கிறார்
மகிமைத் தமது திருவசனத்தை விதிக்கிறார்
வந்தெனை முகம் பாராரா? மனத்துயரத்தைத் தீராரா?
மாட்டாரா? கைவிட்டுப்போட்டாரா?
மாட்டுக்கொட்டிலுக்குள் இவர் வந்ததென்னமோ—

2. அழகினில் ராஜகுமாரனைப் போலிருக்கிறார்
அன்பான பார்வையாலென் அகத்தையும் முறிக்கிறார்
ஆத்துமத்தகை மீறுதே—ஆசை விண்ணிலேறுதே
அற்புதமோ? தேவ விற்பனமோ?
ஆச்சரியமாய் எனை ஆண்டுகொண்ட தெய்வமோ—ஆசை

3. அத்தன் திருச்செயலை புத்தியெப்படிக்கொள்ளும்?
ஆண்டவன் கிருபைக்கென் அகங் களித்துத்துள்ளும்
ஆராய்வில்லா ஆழமே—அளவிலடங்கா நீளமே
அகலமதுவும்—இன்பமதுவும்
ஆச்சரியமாய்ப் பிரமிப் பாக்கி வைக்குதே— ஆசை

4. கர்த்தன் திருவுடலில் காயமைந்திருக்குது
கங்குல் பகலுமாயென் கருத்தினை யுருக்குது
காணாதாட்டைத் தேடாரோ கண்டுபிடித்தால் தூக்காரோ?
அவர் கற்பனையும்—விற்பன்னையும்
காட்சியாகத் தோன்றியென் கண்ணுக்குள்ளே நிற்குதே
—ஆசை

## 193

பல்லவி

தேவா பரகிறிஸ்து தேவா பரதேவா—பர

சரணங்கள்

1. ஜீவா தற்பரயோவா அற்புதசிந்தைப் பரேசா
மூவாளொத்த சொரூபி வாவா
காவா நசரேசா கிறிஸ்து— தேவா

2. வானத்திறைவன் மேன்மைப்பரமன் சேனைத்
திரளோனே
ஞானத்துறைவன் நசரேத்தானே
நம்முட பெருமானே கிறிஸ்து— தேவா

3. நித்தியஜீவன் நீயே பாதையும் நீயே சத்தியமே
பத்தனை யுத்தம சித்த மிருத்தே
வைத்தாதரி நயமே கிறிஸ்து— தேவா



4. மட்டில்லாத தூதர் சேனையும் பூதலர் பாதலரும்
கிட்டிச்சேர்ந்து போற்றுகிறார் திருப்
பாதம் வணங்குகிறார் கிறிஸ்து— தேவா

## 194

பல்லவி

வாரும்பதி மனுவேலனே

சரணங்கள்

1. மானிடசொரூபா வளமை ஞானதீபா
ஞானிகள் தேடிய நன்மைப் பிரதாபா— வாரு

2. உத்தம ஜீவா வொரு பரதேவா
அத்தகவிசேடபோதா சுவாமி கிறிஸ்தேயோவா—

3. சற்பிரசாதா தரும பொற்பாதா
விற்பன தயாபர வேதபோத விநோதா— வாரு

4. பரம விலாசா பாக்கியப் பரீசா
கருணான யேசு ஞானப்பிரகாசா— வாரு

5. வானத்தின் மன்னு மகிமையின் ஆசனு
கோனமைத் தவிது குமாரா வுமக் கோசியன்னு—

6. உன்னத சிநேகா வுச்சித விவேகா
பின்னபேதமில்லாத் பெருமைத்திரியேகா-வாரு

7. வந்தன மனந்தா வானவர்க் கானந்தா
சந்ததஞ் சங்கீர்த்தனம் சச்சிதானந்தா— வாரு

## 195

பல்லவி

சரணம் சரணம் கிறிஸ்தையா

அனுபல்லவி

அருணகிரண எருசலேயின் யேகோவா
அனந்த சராசரம் அனைத்தும் படைத்த தேவா-சர

சரணங்கள்

1. சேரக்கூடா வொளியிற் சேரும் பிரகாச
சின்மயானந்தர் தினம் ஜெபிக்கும் சர்வேசா
ஆர்க்கும் அளவுபடா அகண்டித ஈசா
அல்பா ஓமேகாவுமாய் ஆன யென் நேசா— சர

2. எங்கும் வியாபித்திங்கும் இருக்கும் அருளே
எவைகளிலும் கலவாதிருக்கும் தெருளே
பொங்கும் எளியரகம் பொருந்தும் கருளே
புதுமலர்த் தேனு யன்பர் புசிக்கும் பொருளே-சர

3. ஆயிரத்தாயிரம்பேர் அஞ்சல் சொல்வாரே
அடிமையை மாத்திரைப் போதருள் விழிபாரே
சாயுநிழல்போல் எந்தன் நாட்களின் பேரே
சத்ய கிறிஸ்துராஜா தயை மொழிகூறே— சர

## 196

பல்லவி

பாவப்பிணி தீர்த்து ஜீவனளித்திட
தேவசுதன் மருந்து.

அனுபல்லவி

தேவதிரித்துவ வார்த்தை மருந்து
தீர்க்கர் முனிவருரைத்த மருந்து— பாவப்

சரணங்கள்

1. வார்த்தையதாகவே வானத்திருந்து ம
கத்துவ தர்பரனுர்—ஒரு



வார்த்தையினுலேயே கடலினுக்கிரம்
வாய்மூடி நின்றதுவாம்—ஒரு
வார்த்தைசொலச்சொல்லிச்சென்றனை சேர்வையின்
மனுவிலொன்றதுவாம்.
வார்த்தையினுலே யநேகரின் நோய்கலி
தீர்த்தவராம் கதி சேர்த்தவரா மென்றும்— பாவப்

2. கஷ்டப்பட்ட பொல்லா பெரும்பாடுள்ளவள்
கவலை தீர்த்ததுண்டு—மிக
கலங்கியழுத நாயினார் விதவை
கண்ணீர் துடைத்ததுண்டு—பூமிக்
குள்ளேயடக்குண்டு மரித்த லாசருக்
குயிரளித்ததுண்டு.
வள்ளலே உத்தனை வேண்டிடும் பேர்களுக்
கன்புடனே வரந் தந்திட லாக்குண்டு— பாவப்

3. கொடிய சிலுவை யறையுண்டிறந்த
குருவே நின்னையல்லால்—என் தன்
குற்றம் பொறுத்தென்னை ரட்சிக்க வேறுரால்
கூடுமோ நின்னையல்லால்—மிக
குருதி வடிய சிலுவையிற் சொன்ன
முதன்மையான சொல்லால்
அடியர்க்கு ஞான ஆகார மீந்திடும்
அற்புதனே கடைக் கண்ணுற் பார்த்திடும்— பாவப்

## 197

பல்லவி

நீதிமானுனேன் ஐயா—உம்மாலே நான்

சரணங்கள்

1. ஆதியில் ரட்சிப்பின் வார்த்தை யறைந்ததால்
அப்படியே மனுவாகப் பிறந்ததால்

ஜாதியனைத்துக்குமாக மிறந்ததால்
சத்தியவேதத்தைத் தந்து இறந்ததால்— நீதி

2. ஆத்துமத்தாலுஞ் சரீரத்திலும்
ஆதி பராபரன் சித்தத்திலும்
சாற்றரும் பாட்டுக ளேற்றத்திலும்
சாவை விழுங்கிச் செயித்துயிர்த்ததாலும்— நீதி

3. சர்ப்பத் தரத்தை யுடைத்ததிலும்
தாழ் நரகத்தை யடைத்ததிலும்
முற்பவம் போகத் துடைத்ததிலும்
மோக்ஷித வாழ்வெனக்குக் கிடைத்ததாலும்— நீதி

4. துக்கமிகும் ஞானஸ் நானத்திலும்
தூயதிவ்ய நன்மைப் பாத்திரத்தாலும்
எங்குந் தேவாவியின் தேற்றலிலும்
யேசுவென்றதிரு நாமத்திலுமே— நீதி

## 198

1. இயேசு திரு நாமம்
இய உயர் மய சய ஜெய பெயர்
இயேசு திரு நாமம் எனக்குயிரே.
ஆசீர்வாதந் தா; நின் ஆசீர்வாதந் தா,
ஆசீர்வாதந் தேசநுபாதம்
பேரியா நீ தா.

2. விண்ணுலகோர் பாட
மண்ணுலகோர் அடிபணிந் தேற்றிட
பாதகத்துள்ளோரும் பயந்தோடவே
எந்தன்கடு வா, வா, உத்தமனுன் தா, தா,
வந்தனம் சந்ததம் என்றுமே தந்தனம்;
உந்தனடிமையாம்.



3. மங்கையாயர் தேடி
கந்தையணிந்த குழந்தைய தாயுனை
கன்னிமரி தாயார் விந்தை மகவாய்
முன்னணையிலே ஓர் பொன்னகரோனே
யேசையா, உன் தேசங் கண்டார்
ஆசை யாயோடி.

4. இந்தச் சபையோரும்
உன் செயலாமிதை நன்றுணர்ந்தே புகழ்
மிஞ்சவே கொண்டாடி என்றும் போற்றவே.
நெஞ்சம்வாக்கும் செய்கை ஒன்றித்தே யுன்மீட்டை
சென்றுலகெங்கும் தந்தையுன் னன்பை
நன்று காட்டவே.

5. கன்னிகையின் சேயா
காதல்மிகும் மணவாளா கனி தோழா
மன்னவர் சிந்தைக் கென்றும் ஜோதியே.
விண்ணுயரமே யெம் பண்ணொழுப்பவே
என்னில் பாசமேவச் செய்யும்
ஏக ஆவியே.

## 199

பல்லவி.

நாங்கள் ரட்சிக்கப்பட வானகத்திங்கீழ்
நாதனின் நாமமின்றி இல்லை இல்லை.

அநு பல்லவி

துங்கிய ரட்சிப்பின் நாமத்திற் குரியதாம்
உன்னதஸ்துதி வந்தனங்கள் செலுத்துவோம்— நாங்

சரணங்கள்.

1. யேசுவின் நாமமே தாசர்கள் சேர்ந்து வைக்கும்
என்றென்று மழிந்திடாப் பொக்கிஷ மணமே
பேசுதற்கெட்டாத தேசுயர் நாமமது
பெருமகிழ்ச்சிகள் தரும் இருமையில் மனதே— நாம்

2. பரம குடிகளெல்லாம் பகலிரவாய் நின்று
பணிந்து ஸ்துதிக்கு நாமத் திருச்சபையே
அருவ சம்பூரண ஆனந்தக்கடலென்று
தனையர் துதிக்கும் நாமத் திருச்சபையே— நாம்

3. யேசுவென்னும் நாமம் எல்லா நாமங்கட்கும்
ஏகமேலான நாமத் திருச்சபையே
யேசு நாமத்தால் நம்மையெதிர்க்குஞ் சத்ராதிகளை
பின்னமின்னங்கள் செய்யலாந் திருச்சபையே— நாம்

4. யேசுவின் எழில் நாமம் மோட்ச பிரயாணிகட்கு
இமைக்கிமை பெலன் அருளுந் திருச்சபையே
தேசற்ற குருடர்க்கு நயனங்கள், முடவர்க்கு
தேவன் கொடுத்த காலாந் திருச்சபையே— நாம்

5. துதிக்கப்படத்தகும் யேசுவின் நாமத்தை
சதியெனக்கொண் டன்பில் உயருவோம் சபையே
மதித்துமேன்மைப்படுத்தி வணங்குகின்றோ மின்று
மகத்துவ யேசுவின் பாதம் மகாசபையே— நாம்

6. திரியேகதேவா நிரந் தரம் ஸ்தோத்திரம்
சேனைவானவர் பணி ஜேஹோவா ஸ்தோத்திரம்
அரியசுத்தாங்க ஆவியே நிதம் ஸ்தோத்திரம்
அற்புதயேசுவே சொர்ப்பித்தோம் ஸ்தோத்திரம்— நாம்



# பாவ அறிக்கை.

## 200

பல்லவி

பாவியாகினேன் நானே—பரம கோனே
நானுமைப்பிரிந்து பாவியாகினேன் நானே

சரணங்கள்.

1. தாங்கியே யென்னைத் தாங்கிட வந்த
சச்சிதானந்த நாதா தயையின் வேதா,
சற்குண போதா இந்தத் தாரணி— பாவி

2. தற்பரன் கொடுத்த கற்பனை மீறி
சாமி கடினமானேன் சஞ்சலமானேன்
தனியனானேன் இந்தத் தாரணி— பாவி

3. உந்தனின் அன்பை எந்தையே மறந்து
ஓகோ துரோகியானேன் ஒழிந்துபோனேன்
உன்னத கோனே, இந்தத் தாரணி— பாவி

4. உந்தனின் வாக்கை எந்தையே நினைந்து
ஓகோ எனைப் பாராயோ, எனைச் சேராயோ
எனைக் காவாயோ? இந்தத் தாரணி— பாவி

5. பாவியே நீயும் தாவியே வாவென்று
பகர்ந்திலையோ, தேவா? நினைந்தே யோவா
மகிழ்ந்தே கோவா வந்தேனுந்தனிடம்— பாவி

## 201

பல்லவி

மண்ணுலகமதில் மா பாவி நான்
மா தயாளுவே மன்னித் தாளுமே

அநுபல்லவி

என்னவாகுமோ என்பெருந் தீவினை
ஏழை நான் இதற்கே என்ன செய்குவேன் ?—மன்

சரணங்கள்.

1. ஒப்பில்லாத பரனே உயிர்தந்தவா—உமது திருவருள்
தந்திடுமே தருமகுணனே
தப்பில்லாமல் என்னை நித்தம் ஆண்டிட
தருணமிதே தயையாளனே— மன்

2. பாவப்பாரஞ் சுமந்தே தவித்தேன் இதோ—மிகவும் வாடி
பூமியில் முழுதும் தேடினேன்
பாவப்பாரம் தீர்க்கும் பவநாசனே—பவித்திரனே
பாதம் நாடினேன் ஐயனே— மன்

3. பாவியாகப் பிறந்தே நிதம் பாவமே—பிரியமாக
முற்றும் செய்த தோஷி நான்
தயவாகத் தாங்கி முற்றும் தேற்றுவீர் கிருபாகரனே
கருணை செய்குவீர் கர்த்தனே— மன்

4. உலகும் செய்குமிரக்கமனம் இல்லையோ-துயர் நீக்கவே
தேவா; வெகு தொல்லையோ ?
ஜீவ லோகபரனே, இடம் சொல்லையா,
இச்சை தேறவே வந்து காருமேன்— மன்

## 202

பல்லவி.

பஞ்சமா பாவி நானே
என்செய்வேன் யேசு கோனே.



அநுபல்லவி.

நெஞ்சமும் புண்ணதாக நேய னேசனே
நின்று குருசிலென்தன் பாவந்தொலைத்த கர்த்தா-பஞ்ச

சரணங்கள்

1. முந்து யேதேனின் காவில்
தந்தை தாய் செய்த பாவ
சிந்தையை நீக்கவென்று வந்து காவினில்
சொந்த உதிரவேர்வை சிந்தியதாலே இப்போ—

2. நொந்து கெத்சேமின் காவில்
வந்து தான் நின்றபோது
என்தனின் சித்தமல்ல இரங்குமென்றிட
வந்ததென் பாவமல்லோ ? மாண்டது நீரேஐயா—

3. பொன்முடி சூட்டவென்று
முள்முடி சூட்டி நின்றீர்
என்னை மீட்டேற்றவென்று இத்தனை பாடும்
மன்னவா பட்டதாலே மாபாவம் செய்தீச—பஞ்

4. முடிந்தது முடிந்ததென்று
முன்னவா குருசில் நின்று
முடித்தவா, என்தன் துன்பம் முடிக்கலாகாதோ?
முடிமணிச்சிரசே யேசு முப்பொருளோனே ஐயா—

5. நீசனென் றென்னை இரு
நீசர்கள் நடுவில் நின்றும்
ஈசனென் றும்மைக்காட்ட மரித்துயிர்த்தீர்
நேசனே உயிர்க்க வைத்த தேசமே என் ஆத்தும
நேசா— பஞ்

## 203

பல்லவி.

அடைக்கலம் அடைக்கலமே, யேசுநாதா, உன்
அடைக்கலம் அடைக்கலமே.

அநுபல்லவி.

திடனற்றுப் பெலனற்றுன் அடியற்றழுகும் ஏழைக்— க

சரணங்கள்.

1. ஆசையோடு பாவமதில் அலைந்து திரிந்தேனே
அன்புள்ள பிதா உமை விட்டகன்று பிரிந்தேனே
மோசமதையேயலால் மற்றொன்றையும் காணுமலே
தோஷமொடு சேர்ந்தனன் தூர்த்திடாது சேர்ந்தருள்

2. கட்டுப்படாக் காயமதின் கெட்டாரணம் போலவே
மட்டுப்படாப் பாவமதில் மயங்கி உறங்கினேன்
கெட்டவனே போ வெனக்கினத்திலும் நியாயமே
இட்டுவந்தழுகும் ஏழை கெஞ்சுதல் கேளய்யனே !—அடை

3. விக்கிய உதிரமதும் ஐந்து திருக்காயமும்
சொர்ந்துருகினது மனச்சஞ்சல மகற்றிடும்
பஞ்சமா பாவியினது கெஞ்சிடு கரத்தினை
எத்தனிதழும் தள்ளாமல் இரங்கிடு மையனே !— அடை

4. என்னிடத்தில் வருவோரை எந்தவிதமும் தள்ளேன்
என்று சொன்ன வாக்கதனில் எனக்கும் பங்கில்லையே
அன்றுமது பக்கமதிலாயிருந்த கள்ளனே
இன்று பரதீசிலிருப்பாயென் றுரைத்தீரல்லவோ ?—



# விண்ணப்பம்.

## 204

பல்லவி

இயேசுநாயகா சுவாமி பவி மனம்
ஏங்குதே என் சாமி— எனை
தேங்கலை மிகத் தாங்கவே துணை
நின்றிடுவீர் தயவாய்

சரணங்கள்.

1. பவி மீது தாகங்கொண்டீர் பரமவாசல்
பார்த்திபனே தருந்தீர்—படு
பாதகன் எனின் தீதகற்றெனைப்
பண்படுத்திட வாரும்— இயேசு

2. சுமைதாங்கக் கூடுதில்லை பவப்பாரம்
தூக்கிடும் என்பிணையே—சுமை
தாங்கியே மிகப் பாங்கதா யெனைப்
பாறுதல் தந்திடுவீர்— இயேசு

3. மன ஆறுதலில்லையே மகிழ்ந்தென்னை
வாவென்றழைத்திடுமே—உந்தன்
மாட்சிமைதரு சுத்த ஆவியை
மன்னவே தாரும்— இயேசு

4. வழியாதும் யானறியா திப்புவிதனில்
வாடித் தியங்குவேனோ ?—வள
மான பாதையும் ஆனஜீவனும்
மன்னா நீர்தாமே— இயேசு

## 205

பல்லவி

ஆதாரம் நீர்தானையா, என் துரையே,
ஆதாரம் நீர்தானையா

அநுபல்லவி

சூதாம் உலகில் நான் நீதாய் மயக்கையில்— ஆதா

சரணங்கள்

1. மாதாபிதா வெனைத் தீதாய் மறக்கையில்
மற்றோர்க்குப் பற்றேதையா எளியன்மேல்
மற்றோர்க்குப் பற்றேதையா? எளியனுக்கு— ஆதா

2. சாய்தாவெனும் பலசார் தனை தழுவ
கட்டாற்றில் விட்டாரையா, தனியனை
கட்டாற்றில் விட்டாரையா; தனியனுக்கு— ஆதா

3. நற்றோர் பெருமையே, மற்றோர் அருமையே
வற்றாக்கிருபை நதியே, என் பதியே,—
வற்றாக்கிருபை நதியே என் மதியே,— ஆதா

